சிவமயம்

# A Visit to Tiruvavaduturai

# திருவாவடுதுறைத் தரிசனம்

BY

**Mr. V. Kandasami Pillai of Jaffna**

*Brother of "Tirumantram" Viswanatha Pillai*

## புகைவண்டிப் பிரயாணம்

நகரவாசத்திற் காணும் காட்சிகளிற் சலிப்புற்று நாட்டுப்புறத்து இயற்கை யழகுகளைக் கண்டு களிக்க எண்ணி இவ்வருஷம் புரட்டாசி மாதத்தில் ஒரு நாள் மாலைப் பொழுதில் எழும்பூரில் புகைவண்டி பற்றினேன். தென்னிந்தியக் காட்சிகளுள் காவிரியாற்றுப் பிரதேசத்திலுள்ளவை சிறந்தவையென்பது பிரசித்தமல்லவா? இந் நாளில் ஒரு நாளும் தென்னிந்திய ரெயில்வே மூன்றாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யக்கூடாதென்னும் பெரும் பாடத்தை இரவு முழுதும் தீர்க்கமாய்ப் படித்துக்கொண்டேன். மறுநாள் அருணோதயத்தில் மாயூரம் சேர்ந்து காவேரியைத் தரிசித்துக் காலைக் கடனை முடித்துக்கொண்டு, பொன்னியின் பெருமையைப் பார்த்து மகிழ்வுறும் பொருட்டு மறுபடி புகைவண்டி யேறினேன். தெற்கே செல்லச் செல்ல அந்தப் பெருமை அதிகமாய்த் தோன்றியது.

பத்து மைல் தூரம் சென்ற பிறகு இருப்புப்பாதையின் இருபுறத்திலும் மங்களகரமான பசுமையைக் கண்டேன்; பயிர் நிலங்களும், நீர்க்கால்களும், குளங்களும், தாமரைத்தடாகங்களும், தோட்டங்களும், தோப்புகளும், துரவுகளும், கொடிக்கால்களும் அடுக்கடுக்காய் இருந்தன; மந்தமாருதம் மனோஹரமாயிருந்தது. அந்தப் பிரதேசத்தில் ஒரு தடம் சிறப்புற்று விளங்கியது. பாலை

யமாயிற்று. வீடுகளும் விடுதிகளும் வீதிகளும் பழுதுபார்ப்பாரில்லாமற் பாழ்த்து இடிந்து சீர்குன்றின. இத்தனைக்குங் காரணம் என்ன?

## கிராமாதிக்கியம்

திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியினுடையது. ஊர் முழுதும் சுற்றுப் புறத்து நிலந் தோப்பு முதலியனவும் எல்லாம் அந்தப் பண்டார சந்நிதியின் மடத்து ஆதீனம். எல்லாக் குடிகளும் எல்லாத் தொழிலாளரும் ஆதீனத்தலைவர்களை யடுத்தே பிழைக்க வேண்டும். அவர்களே அந்தக் கிராமத்திற்குப் பரமாதிகாரிகள். அவர்களுக்கு அந்த ஊரல்லாமல் வேறு எத்தனையோ ஊர்களில் நிலங்களும் வேறு சொத்துக்களும் உண்டு. வருஷமொன்றுக்கு ஆதீனத்தலைவர்களுக்குவரத் தக்க வரும்படி நான்கு அல்லது ஐந்து லட்சம் ரூபாயிருக்கலாம். இதைத் தவிர இந்த ஆதீனத்துப் பரிபாலனத்தில் பெரிய தேவஸ்தானங்கள் சிலவும், சிறிய தேவஸ்தானங்கள் பலவும் வேறு வேறு ஸ்தலங்களில் இருக்கின்றன. அவைகளுக்குரிய ஏராளமான ஆஸ்திகளும் விவகார நிர்வாகமும் ஆதீனத்தவர்களையே பொறுத்தன. ஆகலால், ஆதீனத்தலைவரவர்கள் இந்தியச் சிற்றரசர்களுளொருவரெனவே கொள்ளல் தகும். ஆதீனத் தலைவர் திருவாவடுதுறை மடத்திலேயே இருந்து மடத்துக் காரியங்களையும் மற்ற விவகாரங்களையும் நடப்பித்து வரும் வரையில் மடம் பிரகாசமாய் உலகத்தில் விளங்கும், ஊரில் விவசாயமும் வியாபாரமும் செழித்திருக்கும், குடிகள் தழைத்திருப்பார்கள், லலித கலைகளும் வித்தியா வியாசங்களும் பக்தி சிரத்தையான வைதிக காரியங்களும் விரிவாய் நடைபெறும்; வருவாரும் போவாரும் திருவாவடுதுறையில் அதிகமாயிருக்கும்; எந்த வேளையிலும் ஊர் கலகலவென்று களிப்புற்றிருக்கும். ஆனால் சில வருஷங்களுக்கு முன், காலவசத்தினால் இருப்பிடம் திருவிடைமருதூருக்கு மாறியது. இந்திய ராஜாங்கத் தலைநகரம் கல்கத்தாவினின்று டெல்லியாக மாறின பிறகு கல்கத்தாவின் யோக்கியதை குறைவுபட்டது போல, ஆதீனத்து ராஜஸ்தானம் திருவிடைமருதூரான பிறகு திருவாவடுதுறை மங்கித் தூங்கலுற்றது. ஊரில் விவகாரமும் சந்தடியும் குறைந்தன. உற்சாகமூட்டித் தொழில்களை வளர்க்கத்தக்க அதிகாரிகள் இல்லாமையின், குடிகள் சோர்ந்து வேற்றிடம் சேர்ந்தார்கள்; ஊரைவிட்டுப் போகாமல் தங்கியிருந்தவர்கள் வாடிக் குன்றினார்கள். இவ்வாறு திருவாவடுதுறையின் பெருமை கொடித்தது.

## கிளைப்பு

இப்போது ஆதிபத்தியம் கைமாறியது. மழை விட்டபோதிலும் தூவானம் விடாததலால் பழைய, நிலைமையின் வாதைகளும் இடையூறுகளும் முற்றுந் தெளியாது இன்னும் இருப்பினும், இந்த மாறுபாட்டினால் ஆதீனத்தின் நன்மைக்கு வித்திடப்பட்டதெனவே சொல்லலாம். புதியவர் பட்டத்துக்கு வந்தவுடன் பல திருத்தங்களையும் ஏககாலத்தில் செய்ய முடியாதென்பது எவருக்குந் தெரிந்த விஷயமே. ஆனால், திருத்தங்க

னுள் முதன்மையானது தலைமை ஸ்தானத்தைத் திருவிடைமருதூரினின்றும் ஆதி பீடமாகிய திருவாவடுதுறைக்கு மாற்றுவதேயாகுமென்று புதிய ஆதீனத் தலைவருக்குத் தோன்றியது ஈசுவர பிரேரணை யென்றே எண்ணுகிறேன். இடம் மாறத் தேசக் காட்சியும் மனக்காட்சியும் மாறுபாடெய்தும். பழைய தங் பங்களின் ஆவரணத்தை யொழித்து புதிய ஆவரணத்தை மேற்கொண்டு சங்கற்பங்களையும் விவகாரங்களையும் புதிய மாதிரியில் அமைக்கவெண்ணிப் புதிய ஆதீனத் தலைவர் திருவிடைமருதூரினின்று காரியஸ்தானத்தைப் பெயர்க்கப் பிரயத்தனப்பட்டார். பட்டத்திற்கு வந்து ஐந்தாறு மாதத்திற்குள் திருவாவடுதுறையிலுள்ள பழைய மடத்தில் வந்து நிலை கொண்டார்.

தலைவரில்லாததனாலே, பாலித்துப் படியளப்பவரில்லாததனாலே, திருவின்றித் தேற்றமின்றித் திகைத்துத் தடுமாறி நின்ற திருவாவடுதுறை, பண்டார சந்நிதியின் விஜயத்தினால் இப்போது உயிருற்று உற்சாகப்படுகின்றது. ஊரைவிட்டுப் போனவர்கள் விரும்பித் திரும்பி வருகிறார்கள்; வேறு பல ஜனங்கள் பல பல காரியங்களையும் கருத்துக்களையும் முன்னிட்டு அவ்வூருக்கு வரத் தலைப்பட்டிருக்கிறார்கள். சிதைந்து கிடந்த கட்டடங்களும் சாவடிகளும் சாலைகளும் ஆதீனத்தவர்களுடைய பரிபாலனத்தில் புதுப்பிக்கப்படுகின்றன; மாடுங் கன்றும் நடமாடலாயின; வேளாண்மையும் வியாபாரமும் வளர்கின்றன. ஜன நடமாட்டத்திற்குத் தக்கவாறு ஊரில் விவகாரமும் கலகலப்பும் அதிகமாயிருக்கின்றன; கோவிலுங் குளமும் விளக்கமுற்றுத் திருத்தமாயிருக்கின்றன. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" என்பார்கள். கோவிலில் ஈசுவர ஸாந்நித்தியம் அதிகமாயிருப்பது போல இப்பொழுது தோற்றுகின்றது. பராமரிப்பின்றிக் கிடந்த பழைய மடத்தின் அமைப்பும் அரும் பெருமையும் பார்ப்பவர் மனத்தில் பதிகின்றன. தவமுந் தருமமும் தலைகாட்டியிருக்கின்றன. ஆகையால், திருவாவடுதுறை இனித் தழைத்துக் கிளைத்துத் திறம்பெறவேண்டுமென்பது தேவர்களின் திருவுளமென்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்த

## ஸ்தல விசேஷம்

மிகச்சிறந்தது. இது காவிரியின் தென்கரையிலுள்ளது. இதற்கு (ஆ+ அடுதுறை) ஆவடுதுறை என்று பெயர். பார்வதிதேவியார் ஒரு சமயத்தில் காரணாந்தரத்தினால் பசு வடிவமெய்தி உழன்று கொண்டிருந்தனர். இந்த ஊர்க்கோவில் சந்நிதானத்திற்கு எதிரிலுள்ள திருக்குளத்தில் நீராடியெழுந்தவுடனே பசு வடிவம் நீங்கித் தேவியார் பரமேசுவரன்பால் எய்திய காரணத்தினால் அந்தத் தீர்த்தத்திற்கு கோமுக்தி தீர்த்தமென்றும், ஆலயங்கொண்டருளிய ஈசுவரருக்கு கோமுக்தீசுவரர் என்றும், அம்பிகையை அணைத்துக் கொண்டதால் அணைத்தெழுந்த நாதர் என்றும் பெயர். அந்த ஈசுவரனையே மாசிலாமணீசுவரரென்றும் வழங்குவார்கள். அம்பிகைக்கு ஒப்பிலா முலையம்மை என்று பெயர்.

இந்த க்ஷேத்திரத்தில் அரசமரம விசேஷம்; இங்குள்ளது படர்ந்த அரசு. அரசவனமென்றே இவ்வூர் வழங்கப் பெற்றிருக்கின்றது. அரச மரத்தின் அருமையை அறியாதார் யாவர்! விருக்ஷங்களுக் கெல்லாம் அது அரசு போன்றது என்பது பெயரினாலேயே விளங்குகின்றது. பிரபஞ்சத்தில் எங்கெந்த உருவத்தில் ஈசுவரவிபூதி நிரம்பி யிருக்கிறதென்று சொல்லுமளவில், "விருக்ஷ வகைகளுள் அசுவத்தமே நானாவேன்" என்று பகவத் கீதையில் பகவான் பிரகடித்திருப்பதனாலேயே அரசமரத்தின் பெருமை அனைவருக்கும் தோன்றத்தக்கதாகும். பல வகை யோகிகளால் பலவகை ரோகங்களுக்கும் பீடைகளுக்கும் அசுவத்தப் பிரதக்ஷிணம் பரிகாரமாக அது ஆசிரயிக்கப்படுகின்றதனால், அந்தமரம் ஜீவகளை நிரம்பியது என்பது தெளிவு. அது ஜீவகளைக்கு ஊற்றுப்போன்றது. ஈசுவர சாந்நித்திய முள்ளது, பூஜார்ஹமானது. மகப்பேறு வேண்டி வந்தியர் அதனை வழிபடுவார்கள்; தவத்தோர் அதன் தண்ணிழலில் தங்கி யிருப்பார்கள். அதனில் வித்யுச்சக்தி விசேஷமாய் நிரம்பியிருக்கிறதெனக் கண்டு 'மெஸ்மெரிஸம்' என்னும் ஜீவாகர்ஷண வித்தையாடிகள் தமக்குப் பலமும் சக்தியும் குறைவுபட்ட காலத்து மறுபடி தமக்கு ஜீவகளை பெருகும் பொருட்டுச் சிறிது காலம் அரசமரத்தை நாடி, அதனைப் பரிசித்துக் கொண்டிருப்பார்கள். ஜீவகளை மிகுந்ததென்பதனாலே அரசமரம் புஷ்டிவர்த்தனமானதென்று சொல்ல வேண்டியதே யில்லை. திருஷ்டாந்தமாக மெலிந்து நொந்த ஆடு அரசந்தழை தின்றால் வெகு சீக்கிரத்தில் கொழுப்புற்றுச் செழுமையாய்த் தோன்றும். இரஸாயன வர்க்கத்தில், அரச மரத்தில் அபூர்வமான ஔஷத சத்து அமைந்திருப்பதனாலே பெரிய இரஸாயனக்கிரியை எனத் தகும் அக்கினிஹோத்திராதிகளில் உபயோகிக்கத் தக்க சமித்துக்களுள் அரசஞ் சுள்ளியே முதன்மை பெற்றது. ஓர் அரசமரமே இவ்வளவு யோக்கியதை யுடையதாயின், அரச வனமெனும் திருவாவடுதுறை எத் தன்மையதாம்?

பூவுலகில் தேவர்கள் வந்து உறைவதற்கான விசேஷ ஸ்தலமாகவே இது இயற்கையில் அமைக்கப்பெற்றிருக்கின்றது. எண்ணிறந்த சித்தர்கள் இவ்வரசவனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்ததாகச் சொல்வார்கள்; பதிவாய்ப் பல சித்த சிரேஷ்டர்கள் இங்கே தங்கியிருப்பதும் உண்டு. சித்தகணங்களின் சஞ்சாரமிகுந்த ஸ்தலமென்பதைக் குறிக்கும்பொருட்டு இவ் வூருக்கு "நவகோடிசித்தவாஸபுரம்" என்னு மொரு நாமமும் வியவகாரத்திலுள்ளது.

சிவயோக நுட்பங்களைத் தமிழுலகத்தவருக்குத் தெள்ளிதில் விளக்கத் திருவருள் கொண்டு திருமூலநாயனார் வருஷத்திற்கொரு பாடலாக மூவாயிரம் திருப்பாடல்களால் திருமந்திரம் என்னும் அருமையான நூலைச் செய்தருளிய ஸ்தலம் இதுவே. நமது மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியார் திருக்குருகூருக்குச் சென்று நம்மாழ்வாரைத் தரிசித்து, அவர் திருவாய்மலர்ந்தருளிய திருவாய் மொழியைக் கண்ணுற்று, அதனாலுண்டாகிய ஆனந்த மேலீட்டினால்,

"சேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்"

என்று பாடியதில் "திருமந்திரத்தை" மறை முடிவுக் கொப்பிட்டிருப்பதனாலே யே இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். இவ்வூர் ஆலயத்தின் மேலைப்பிராகாரத்தின் வடகோடியில் திருமூல நாயனாருடைய ஆலயம் இன்றைக்கும் இலங்குகின்றது.

திருவிசைப்பா பாடியருளியவர்களுள் ஒருவராகிய திருமாளிகைச் சித்தர் (இவர் வைஷ்ணவத் திருமேனி) சமாதி திருக்கோயிலும், அதில் இவருடைய பரமகுருவாகிய போகமா முனிவருடைய திருவடிகளும் இந்த க்ஷேத்திரத்தின் ஆலயத்திற்குத் தென்புறத்திலுள்ள மடாலயத்தில் உள்ளன. இப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசனார் பிரத்தியக்ஷப் பிரசாத மருளத்தக்க மூர்த்தியென்பது சைவசமயாசாரியர்களினால் வெளிப்பட்டிருக்கின்றது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய பிதா யாகஞ் செய்யும்பொருட்டுப் பதிகம் பாடிப் பொற்கிழி பெற்ற ஸ்தலம் இதுவே. இவ் விஷயத்தை அப்பர் சுவாமிகள் திருவாவடுதுறை—திருநேரிசைப் பதிகத்தில்

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே"

என்று பாராட்டியுள்ளார்கள்.

## மடத்தின் ஆவசியகம்

இவ்வளவு மகத்துவம் பொருந்திய திவ்விய க்ஷேத்திரத்தை வெறும் இலௌகிகருடைய பரிபாலனத்திற்கு விட்டால் அவர்கள் பாரமார்த்திக சிந்தையின்றி, ஸ்தலத்தின் பெருமையை உள்ளவாறு உணராமல், அதனைப் போற்ற மாட்டார்களென் றஞ்சி, ஸ்தலத்திற்கு உரியவர்களாகிய சித்த புருஷர்கள் தமது சிஷ்ய ஜன சமூகத்தில் ஒருவரைத் திட்டம் செய்து இதன் ஆதிபத்தியத்தை நடத்திவரும்படி ஒப்புவித்தார்களென ஊகிக்கின்றேன். அதற்கு நிதரிசனமாக மேலே குறிப்பிட்ட திருமாளிகைத் தேவருடைய திருக்கோவிலை யடுத்தே திருவாவடுதுறை மடத்துக்கு ஆதிபுருஷராகிய நமச்சிவாய மூர்த்திகள் சமாதியில் அடங்கியிருக்கின்றார்கள். இவ் விருவர் கோவிலையும் இதயமாகக்கொண்டே திருவாவடுதுறை மடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆதீனத் தலைவராகும் பண்டார சந்நிதிகள் தம் ஆஸ்தானம் விட்டெழுந்து முதலடி வைப்பது இந்தக் கோவிலின் மேலைப் பிராகாரத்திலாகும். நான்கு பிராகாரங்களும் நல்ல கற்சாந்து மச்சினால் மூடப்பெற்றுள்ளன. அவர்கள் பிராகாரத்தின் வழியே வலம் வந்து திருமாளிகைத் தேவரைத் தரிசித்து வணங்கி, ஆதீனத்து ஆதிமூர்த்திகளை வணங்குவார்கள். இந்த மடத்தின் மூல புருடர் நந்திதேவர் மரபிலிருந்து

தோன்றியவராகச் சொல்லுவதால், இவ்வாதீனம் திருக்கைலாய பரம்பரை என்னும் அடைமொழியோடு வழங்குகிறது.

## ஆதீனத்து மடம்

இவ்வாறு மடமொன்று ஏற்பட்ட பின்பு, அந்த மடத்தின் ஆதீனத்தில் சிஷ்ய வர்க்கங்களும், பரிபாலனத்தில் அனேக சிவாலயங்களும், மடத்திற்காகவும் ஆலயங்களுக்காகவும் குடிகளாலும் கோமகர்களாலும் அளிக்கப்பட்ட ஏராளமான பூஸ்திதிகள் முதலியனவும் காலக்கிரமத்தில் ஏற்பட்டன. மடத்துக்கு மேன்மையும் பிரதிஷ்டையும் ஆதிபத்தியம் வகிக்கும் மடாதிபதிகளின் யோக்கியதா விசேஷத்தினால் பிரகாசமாய் ஒளிர்தலாயின. இம் மண்ணுலகில் முழுமையாகத் தனி நன்மையும் முழுமையாகத் தனித் தீமையும் இல்லை. நன்மையுந் தீமையும் கலந்தே உழலும். இரவும் பகலும் புரண்டே வரும்; எல்லாந் தொந்தமே. உலக மனைத்தினுக்கும் ஒளி தரும் ஆதித்தனும் ஒரு கால் ஒளி மழுங்கிக் காண்பது உண்டெனின், திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தின் ஒளி மாத்திரம் மழுங்காமல் எந்நாளும் வளர்ந்து கொண்டே வருமென்று எண்ணலாமோ? அப்படிப்பட்ட காட்சி யொன்றிருக்குமானால் இது மண்ணுலகம் என்பது பொய்யாகும். இந்த மெய்யுரை பொய்யாதிருக்கும் பொருட்டே சூரியனுக்கும் கிரகணம் பிடிக்கின்றது. ஆனால், கிரகணத்தின் பயனாகச் சூரியனது காந்தி நமக்குப் புலப்படாதிருப்பதன்றிச் சூரியனுக்கு இயல்பாயுள்ள காந்தியும் தேஜஸும் குறைவுபடுகின்றனவோ? அது போலவே இம்மடத்தின் ஒளி ஒருகால் மழுங்கிக் காணினும், அவ்வொளி ஒழிந்து போகாது. ஆதிபத்திய பீடத்தின் மகிமை மறைந்துபோகாமல் எப்பொழுதும்போல், மங்கல் நீங்கிய பின்பு பிரகாசிக்குமென்பது திண்ணம்.

ஒளி யென்பது நமது கண்ணுக்கு எப்படிப் புலப்படுகின்றது? ஒரு வஸ்துவினின்றும் வீசப்பெறும் காந்திக்கிரணம் அதனை யடுத்துள்ள ஆகாசத்திற் பாய, அங்கிருந்து படிப்படி அலைவடிவமாக அது நம்முடைய கண்ணுக்கு எட்டுகின்றது. காந்தியலையின் வேகம் மிகச் சொற்பமாயிருந்தால் ஒளி நமக்குப் புலப்படாது; சாமானியமாயிருந்தால் புலப்படும்; நம்முடைய கண் தாங்க முடியாத அளவு அதிக வேகமானாலும் அதிகக் காந்தியானாலும் நமக்குப் புலப்படாது. இவ்வாறு அதிகக் குறைவும் அத்தியதிகமும் புலப்படா. ஆதலால், இருளென்பது நம்முடைய கண் தாங்கமுடியாத அதிகப் பிரகாசம் என்று சொல்வதும் பொருந்தும். இதனால் நாம் தெரிந்து கொள்வது என்ன? மிக்க அதிகத்தினால் விளையும் பயனும், மிக்க குறைவினால் விளையும் பயனும் ஒரே தன்மையனவாகும். ஒரு சக்கரத்தை மிக விரைவாய்ச் சுற்றினால், அது அசையாமல் ஒரு நிலையில் நிற்பதுபோல நமக்குத் தோற்றும். ஜோதிஷ சாஸ்திரத்தின்படி ஒருவனுக்கு மிக உச்சமான தசை வாய்த்தக்கதெனக் குறிப்பிடுங் காலத்தில் அந்த ஜாதகனுக்கு அதிநீசமான தசை பிராப்தமாவதைக் கண்டிருக்கிறோம்; போகாதிபதியெனச் சாஸ்திரம் சொல்ல, அவன் பரமதரித்திரனாய் எவ்

லாக் துறந்து, நிற்க நிலையில்லாமல் அலைவதும் உண்டு. அதுபோலவே, புத்திக் கூர்மை யிருக்தவன் புத்தியில்லாதவனைப்போல விவகரிப்பதும் இயற்கை விதிக்கு விரோத மன்றென்று ஊகிக்கத்தகும்.

## ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

புத்திசாலிக ளனேகர் திருவாவடுதுறைப் பீடத்தை அலங்கரித்து வந்தாரக ளென இதுவரையிற் பிரஸ்தாபித்து வந்தோம். அந்தப் பரம்பரையில் 1888 ஆம் ஆண்டில் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் என்னும் தீக்ஷாநாமம் படைத்தவர் இந்த ஆதீனத் தலைவராகப பட்டம் பெற்ருர். அவருடைய இயற்பெயர் இன்னதென்று நான் விசாரிக்கவில்லை. அவர் பல கலை பயின்றவர், மகா மேதாவி, அசகாயசூரர். அவருடைய குண விசேஷங்களைச் சொல்லுமளவில் அவர் தமிழில் நல்ல பாண்டித்திய முள்ளவர்; சங்கீதத்திலும் தேர்ச்சியுள்ளவர்; பண்டிதர்களுக்குச் சம்மான மளிப்பதிலும், பிராமணர்களுக்கும் மற்றச் சாதியினருக்கும் நன்கொடை யளிப்பதிலும் வெகு கீர்த்திபெற்றவர்; தெய்வபக்தியும் சிவாலய உற்சவம் நடத்துவதில சிரத்தையும் வாய்ந்தவர். பண்டிதர்களுடைய யோக்கியதையை அறிவதில் வெகு திறமையுள்ளவர்; சுருக்கிச்சொல்லின், இராஜபோகங்களை அனுபவித்துவந்த சற்குண சம்பன்னர்; தென்னிந்தியாவுக்குக் கர்ணனே போன்றவர் என்று சொல்வார்கள்.

இது ஒரு சார்பான அபிப்பிராயம். எதற்கும் சுபக்ஷம் விபக்ஷம் என இரண்டு பக்கங்கள் உண்டல்லவா? மற்ருேர் சாரபான அபிப்பிராயத்தை விசாரிக்குமளவில், "அவர் மிகக் கெட்டிக்காரரென்பதிற் சந்தேகமே யில்லை. தோந்த புததிசாலிகளே தவறுதல் செய்வார்கள். தவறுதல் செய்தால் தப்பித்துக் கொள்ளும் திறமையும், தப்பை ஒப்பெனச் சாதிக்கும் வல்லமையும் தமக்கு உண்டென்னும் துணிவினுலே அவாகள் சிறிதும் இலக்ஷியமில்லாமல் தவறு செய்யத் தலைப்படுவோர்கள். அதிபுத்திசாலியா யிருப்பவனை நம்மிடத்தில் உத்தியோகத்திற்கு அமைததுக கொள்வதனுல விளையத தக்க தீமையைவிடச் சாமானிய புத்தியுடையவனை அமர்த்திக்கொள்வதனுல் உண்டாகும் நஷ்டம் குறைவென்பது நம்முடைய அனுபவசித்த மல்லவா?"

என்பார்கள மற்ருேர் சார்பினர். இவர்களுடைய அபிப்பிராயத்தின்படி, முன்னிருந்த ஆதீனத்தலைவர்களுக்குத் தேவாபிமானம் அதிகமாயிருந்ததெனின், ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்குத தேகாபிமானம் அதிகமாயிருந்தது. இதனுல் தாரகமாரம் ஜனித்தது. சம்மானமும் வெகுமானமும் அவருடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தே யல்லாமல், யோக்கியதையைப் பொறுத்ததா யிருக்கவில்லை. இதனுல் எல்லாம் தலைகீழாயிற்று. யோகசிந்தையினும் போகசிந்தையே அவருக்கு மிகச் சிறந்தது தெய்வகதியாய்த் தம் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த அபரிமிதமான செல்வத்தையும் செல்வாக்கையும் பேணிப் பெருக்குவதை விட்டு அவர் விரயஞ் செய்யலாயினர். ஆக்கத்தில் திருஷ்டிவைக்காததனுல்

அழிவும் சிதைவும் ஏற்பட்டன. எரிகிற வீட்டிற் பிடுங்கியது இலாபமென வம்பர் அநேகர் அவருக்கு வழித்துணையாயினர். வம்பும் வழக்கும் வியாச்சியமும் பெருக, ஆழும் பாழும் மிகுந்தன. சிஷ்ய வர்க்கங்களில் அல்லகல்லோலமும் அமளியும் அதிகமாயின. மடத்துச் சொத்துக்களைக் கிரமமாய் நிர்வகிப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று சிஷ்யகோடிகளிற் சிலர் சர்க்காரில் பிராது செய்யவும் முன்வந்தார்கள். அது பெருவழக்காய்த் தொடர்வழக்காய்ப் பிடிக்கலாயிற்று. ஆதீனத் தலைவரிடத்துப் பணப் பெருமை மாத்திரமேயல்லாமல், மடாதிபத்தியத்திற்கு உரிய குருத்துவம் பாராட்டுவார் அரியராயினர். இந்த நிலைமையில் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 1920-ஆம் வருஷம் ஏப்ரில் மாதம் 13-ஆந் தேதி தேக வியோக மெய்தினர். பின் பட்ட மேற்கத்தக்கவர்க்கு அவர் விட்டுப்போனது வழக்குகளினாலும் சீர்குலைவினாலும் ஏற்பட்ட துக்கபாரம்பரையே யென்று மற்றொரு சாரார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

எது எப்படி இருப்பினும், அவருடைய புத்திக்கும் திறமைக்கும் அவர் இந்த மடத்தை மிக்க உன்னத ஸ்திதியில் வைத்துப் போயிருக்கலாமென்றே மேற்சொல்லிய இரண்டு பக்ஷங்களுந் தெரியாத வண்போலியர் சொல்லத்தகும். திருவாவடுதுறை மடத்திற்கு வாய்த்த இவ் வனுபவமும் ஒரு திருக்கூத்தே போலும். பயனைப் பார்த்துக் காரணம் ஊகிப்பவர்களாகிய நாம் தவறுதல் கூடும். ஏனெனில்;

## தேவ ரகசியம்

என்னவென்று யார் அறிவார்? ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பட்டத்திற்கு வந்து சில நாளைக்கே அவருடைய போக்கு இத் தன்மையதென்று தெரிந்திருக்குமே மடத்துக்கு அபிமானபுருஷர்களாய், நமது கண்ணுக்குப்புலப்படாத சூக்ஷ்மரூபிகளாய், இருக்கும் மகான்கள் என்ன எண்ணத்தைக் கொண்டு அவருடைய பிரபுத்துவத்தை நீடித்தார்களென்று சொல்லுந் திறமை நமக்கு இல்லை. ஆனால், மடம் சிதைவுறாமல் காத்து, எப்பொழுதும்போல அது உலகத்தில் விளங்குவதற் கேற்ற ஏற்பாடுகளை அம் மகான்கள் செய்துகொண் டிருந்தார்களெனவே தோன்றுகிறது. திருவாவடுதுறை மடம் என்பது மகாசமுத்திரத்திற்கு ஒப்பானது. பெரியது என்பதற்காகவும், மிக விசாலமானது என்பதற்காகவும் மாத்திரமே அதனைச் சமுத்திரத்திற்கு ஒப்பிடவில்லை. பெருமையிலும் கனத்திலும் கௌரவத்திலும் கம்பீரத்திலும் அது கடலேயாகும். கடலில் ஒரு புறத்தில் மகாவிஷ்ணுவே இருக்கின்றார்; அவருக்குச் சத்துருக்களாகிய அசுரகுலசமூகம் மற்றோர் புறத்திலிருக்கின்றது; தேவேந்திரனுடைய வச்சிராயுதத்திற்கு அஞ்சிப் பர்வதங்களனேகம் தஞ்சமென்று அதனை அடைந்திருக்கின்றன. சிறுமீன், பெருமீன், திமிங்கலம், முதலை முதலாகிய கொடிய ஜலஜந்துக்களும் அதனில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன; இவையல்லாமல், வடவனல் ஒன்று தகித்துக் கொண்டிருக்கின்

றது. இத்தனையும் மடத்தில் உதகரிக்கப் பட்டிருக்கின்றன வென்பதே எனது கருத்து. இப்படிப்பட்ட கடலை வகையறிந்து கடைகிறவ னுண்டானால், அதனின்று அமிர்தமே சித்திக்கும்; இலக்குமி தேவியே தோன்றுவள். இதனினும் மிக்க பாக்கிய முண்டோ ?

அவ்வாறு கடைந்து, தானும் பயன் பெற்றுப் பிறருக்கும் பயன்படுத்தத் தக்க பெரியனைத் தேடித் தெரிவதே காரியமாக அம் மகான்கள் இருந்தார்கள் போலும். அந்த வேளையில், உலகத்தவர்க்கு நீதி புகட்டுவதற்காகத் தோன்றிய கலைமகளின் திருவவதாரமெனப் புகழப் பெறும் ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய

"வேழ முடைத்து மலை நாடுமே தக்க
சோழ வளநாடு சோறுடைத்துப் — பூமியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோருடைத்து"

என்னும் பாடல் ஞாபகத்துக்கு வந்தமையின், தகைமை வாய்ந்த சான்றோனொருவனைத் தேர்ந்தெடுப்பதற்காகத் தொண்டை நாட்டினில் அவர்கள் திரியலுற்றார்கள்.

## வரலாறு

ஒருவரை ஒரு காரியத்திற்கு வரிக்கு முன் அவருடைய குண விசேஷங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டும். குணம் பெரும்பாலும் குலத்தைப் பொறுத்திருக்கு மென்று சொல்லுவார்கள். குலம் என்னுகையில் நற்குலங்களை மாத்திரமேயல்லாமல் குடும்பத்தையும் குறித்ததாகும். ஒவ்வொரு குடும்ப பரம்பரையில் ஒவ்வொரு விசேஷமான ஒழுக்கமும் பழக்கமும் ஏற்பட்டிருக்கும். ஆகையினால், பரம்பரையினால் குணவித்தியாசங்களும் குணவிசேஷங்களும் அமைதல் கூடும். தேவர்கள் உத்தேசித்து வெளிப்போந்த காரியம் திருவாவடுதுறை மடத்துப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவரொருவரைத் தேட வேண்டு மென்பதே யல்லவா ? அப்படிப் பட்டவர் குணசாலியாயும் புத்திசாலியாயும் இருப்பதல்லாமல், "வைத்த பாரம் தாங்கி" யாகவும் இருக்கவேண்டும், நல்ல பரம்பரையினராகவும் இருக்க வேண்டும். ஆண்டிகளுள் "பரம்பரை யாண்டி"யே உத்தமனாவன். தொண்டை நாட்டில் பக்ஷி தீர்த்தமெனப் பிரசித்திபெற்ற திருக்கழுக்குன்றத்தில் சிவபக்தி யனுஷ்டானங்களிற் பெரிதும் ஈடுபட்டுப் பெயர்பெற்ற பொம்பல தேசிகாவர்களுடைய மரபில் தோன்றிய இளைஞரொருவர் இருப்பதை யுணர்ந்து, அவ் வூருக்குச் சென்று அவ் விளைஞருக்கு நல்ல குணவிசேஷங்கள், பொருந்தி யிருப்பதைக் கண்டு, அவரை யாட்கொண்டு, திருவாவடுதுறை ஆதீனத்திற் கொணர்ந்து 1892-இல் சேர்த்தார்கள்.

## வைத்தியநாத தேசிகர்

அவ் விளந்தோன்றல் வைத்தியநாத தேசிகரென்னும் இயற்பெயரோடு மடத்தில் இலக்கண இலக்கியங்களும் சமயநூல்களும் பயின்று தேறினர். அவ ரிடத்து அதிசயமான யோக்கியதைகள் அங்குராகாரமாக அமைந்திருப்பதை ஆசிரியர்கள் அப்பொழுதே தெரிந்து கொண்டாடினர்கள். உண்மையான யோக்கியதையும் திறமையும் உலகத்தில் சுலபமாக ஓங்கிப் பிரகாசிப்பதில்லை. யோக்கியதையுள்ளவர்கள் தலையெடுக்காமல் தடுப்பதற்கு அனேக சந்தர்ப்பங்கள் ஏற்படுவது எந் நாளிலும் எந் நாட்டிலும் உண்டு. ஆங்கில நாட்டில் ஆங்கில பாஷைக்கே தந்தையெனச் சொல்லத் தக்கவாறு தேர்ச்சி மிகுந்து விளங்கிய ஜான்ஸன் என்னும் புலவர் பெருமானுடைய திறமையும் புத்திக் கூர்மையும் எளிதில் பிரகாசியாவாயின. அவரைப் பற்றிச் சொல்லும்போது,

"Slow rises worth by poverty depressed"

மெல்லென வோங்குந் தகைமை வல்லென
வாட்டினும் வன்கண் வறுமையே

என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே வறுமையென்றது பொருளின் மையைக் குறிக்கும் பொருட்டேயல்லாமல், வருத்தும் சந்தர்ப்பங்களுள் கொடியது என்பதனாலேயாம்.

'கொடிது கொடிது வறுமை கொடிது'

என்று ஔவைப் பிராட்டியார் சொல்லியிருப்பதுபோல, வருத்தும் பீடைகளுள் முதன்மையானதுபற்றிப் பிரதிகூலங்களைப் பொதுப்படக் குறிக்கும் பொருட்டு, 'வல்லென வாட்டினும் வன்கண் வறுமையே' யென்று கூறினர் போலும். வைத்தியநாத தேசிகருடைய சீலமும் சிரத்தையும் சீரியதன்மையும் காலக்கிரமத்தில் ஆதீனத்தவர்களுடைய மனத்தைக் கவரலாயின. பய பக்தி ஆசாரமும் பலகலைப் பழக்கமும் பாலியத்திலேயே பொருந்தி அவர்

"விளையும் பயிர் முளையிலே"

என்பதுபோல விளங்கிக்கொண்டிருந்தார்.

## கல்விச் செல்வம்

பொருட்செல்வம் படைப்பதற்கு எத்தனையோ மார்க்கங்கள் உள. அவைகளில் எளிதான மார்க்கங்களும் உண்டு. கல்விச் செல்வம் படைப்பதற்குள்ள மார்க்கங்கள் சிலவேயாம். அவையெல்லாம் கஷ்டதரமானவைகளே யென்பதைக் குறிப்பிடும் பொருட்டு

"There is no royal road to learning"

"கல்வி கற்பதற்கு இராஜரீகமான சுலபமார்க்கம் ஒன்றும் இல்லை"

என்று ஆங்கிலத்தவர்கள் சொல்வார்கள். நம்மவர்களுடைய சித்தாந்தத்தின்படி கல்வி கற்பதற்குள்ள மார்க்கங்கள் மூன்றேயாம். அவையாவன:—

"குருசுச்ரூஷயா வித்யா புஷ்கலேன தனேனவா
அதவா வித்யயா வித்யா சதுர்த்தம் நோபஜாயதே"

"ஆசானுக்குப் பணிவிடை செய்து கல்வி கற்கவேண்டும்; ஏராளமாகப் பொருள்கொடுத்தேனும் கற்கவேண்டும்; அதுவுமில்லையாயின், ஒரு வித்தையைக் கொடுத்து மற்றொரு வித்தையைப் பெறவேண்டும். இம்மூன்றுமல்லாமல், கல்வி கற்பதற்கு நான்காம் வழி இல்லை." இம்மூன்று முறைகளுள் வைத்தியநாத தேசிகர் முதன்முறையைக் கடைப்பிடித்து, உய்யும் மார்க்கம் அதுவேயென வுன்னிக் கல்வி கற்று வந்தார்.

ஆசானிடத்துப் பாடம் படிப்பதனாலும், அவருடன் பழகி அப்போதைக் கப்போது அவர் மொழியும் வார்த்தைகளையும் விஷயங்களையும் வர்த்தமானங்களையுங் கதைகளையும் கேட்டுத் தெரிந்துகொள்வதனாலும் அவருக்கு நூல்களின் பழக்கமும் உலகத்தின் வழக்கமும் நன்கு பதிந்தன. நாளுக்கு நாள் இவ்வகைச் செல்வம் அவருக்குப் பெருகிக்கொண்டே வந்தது அவருடைய அறிவையும் ஆற்றலையும் அனைவரும் பாராட்டலானார்கள். அவருடைய பண்பின் பெருமை ஆதீனத்தலைவரவர்களுக்கு எட்டலாயிற்று.

## தீக்ஷை

இளம் வயதும், இளமைக்குரிய சுறுசுறுப்பும், கல்வியிற் கவலையும், அடக்க வொடுக்கமும் பொருந்திய இளைஞரை ஆதீனகர்த்தரவர்கள் மகவினைக் காணும் மகிழ்ச்சியுடன் மருவினார்கள். தமக்குள்ள ஆமோதத்தை ஒருவாறு வெளியிடும் பொருட்டு ஆதீனகர்த்தரவர்கள் வைத்தியநாத தேசிகருக்குச் சமய தீக்ஷை செய்வித்தார்கள். இளைஞராயிருப்பினும் வைத்தியநாத தேசிகர் இல்லற சுகபோக இச்சையில்லாதவரா யிருக்கக் கண்டு திருப்தியடைந்தார்கள். நெருங்கிய பழக்கத்தினால் அந்தத் திருப்தி தழைத்து அன்பாகப் பரிணமித்தது. மடத்துக் காரியங்களில் சிரத்தையும் ஊக்கமும் அவரிடத்து அதிகமாகத் தோன்றினமையின், அவ் விளைஞருடைய வேண்டுகோட் கிணங்கி ஆதீனகர்த்தரவர்கள் விசேஷ தீக்ஷையும் பார்த்திவ பூஜையும் மந்திரகாஷாயமும் நல்கியருளினார்கள். அப்போது வைத்தியநாதத் தம்பிரான் என்னும் தீக்ஷாநாமமும் அருளினார்கள்.

## ஒடுக்கம்

வைத்தியநாதத் தம்பிரானிடத்துத் தலைவருக்கு உள்ள அபிமானம் அதிகப்படுவதற் கேற்றவாறு அவர் நடந்துகொண்டமையினாலும், அவரிடத்து அடக்கமும் ஒடுக்கமும் அமைந்திருந்ததனாலும், 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்னும் வாக்குப் பொய்ப்படாவண்ணம் அவரிடத்து ஆதீனத் தலைவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. பின்னர்ப் பெருங் காரியங்களுக்கு வைத்தியநாதத் தம்பிரான் இலக்காயிருக்கத் தக்கவ ரென்னும் எண்ணம் தலைவர் மனத்தில் தோன்றியது போலும். ஆதீனத்து விவகாரங்களில் அந்தரங்க பழக்கமும் மனவொடுக்க

மும் அந்த நவசிஷ்யனுக்குக் கற்பிக்கக் கருதி அவரைத் தலைவரவர்கள் "ஒடுக்கம் தம்பிரா"னாக நியமித்தார்கள். "ஒடுக்கம்" என்னும் பதவியை Personal Assistant உத்தியோகத்திற்கு ஒப்பிடலாம். ஒடுக்கத்திலிருப்பவர் இடைவிடாமல் தலைவரை யடுத்தே இருக்க வேண்டும். சோம்பல் சிறிது மின்றித் தலைவருடைய குறிப்பறிந்து எல்லாக் காரியங்களையும் நடப்பிக்கவேண்டும்; தலைவருடைய உத்தரவுப்படிக் கைச்சாத்திட்டுக் கடிதங்களெழுதும் பொறுப்பும் ஒடுக்கம் தம்பிரானுக்கு உண்டு. மடாலயத்துக் காரியங்களைக் கவனிப்பதல்லாமல், வெளியேறி வேற்றூர்க் காரியங்களையும் கவனிக்க வேண்டியவராவர். 'தான்' என்னும் அகந்தை யழிந்து, ஆசாரிய சேவையே பெரிதா யெண்ணி விவகரிக்கும் பழக்கம் ஒடுக்க உத்தியோகத்தில் உண்மையானவரெவருக்கும் உண்டாகும். ஆதீனகர்த்தர் எவரெவரோடு எவ்விதமாகப் பழகுகிறார், எவரைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொள்ளுகிறார், மடத்துக் காரியங்களில் உண்மையா யுழைப்பவர்கள் எவர்கள், எவரை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பனவாதிய விஷயங்களை யெல்லாம் வைத்தியநாதத் தம்பிரான் "ஒடுக்கம்" உத்தியோக முறையில் பழகித் தெரிந்துகொண்டார்.

அந்நாள் ஆதீனத் தலைவரிடத்து 'ஒடுக்கம்' உத்தியோகம் செய்வது மிகக் கஷ்டமாம். பரீக்ஷார்த்தமாகவேனும் அவர் கடினமான வேலைகளிடுவாராம், அவரைத் திருப்திப் படுத்துவது சாமானியமாக இயலாதாம். மிக்க நுட்பத்திற் பிழை கண்டு அவர் கடிந்துகொள்வாராம். அவருடைய சந்நிதானத்திற்குப் போய்ப் பரிபவப் படாமல் திரும்பி வருவதெனின், சாமானியமாக எவரும் சிங்கத்தின் வாயிற் புகுந்து வருவதுபோலப் பதைத்துப் பதுங்குவாராம். அப்படிப்பட்ட தலைவரிடத்து 'ஒடுக்கம்' உத்தியோகம் செய்வதில் வைத்தியநாதத் தம்பிரான் பசி தாகம் இளைப்பு முதலியவைகளைப் பாராட்டாமல், அவைகளை மறந்து ஒரு மனமா யுழைத்து வந்தது சிற்சிலருக்குப் பரிகாசகரமாகக்கூட இருந்ததென்று கேள்விப்பட்டேன். சந்நிதானத்தை மெய்ப்பிப்பதற்கு எவ்வளவோ அவ்வளவு மாத்திரம் பகட்டுச் செய்து ஒப்புற்று உடம்பைப் பாதுகாத்துக் கொள்வதை விட்டு வைத்தியநாதத் தம்பிரான் திருவாவடுதுறை மடாலயத்தைத் தாமே தலைமீது தாங்கிக்கொண்டிருப்பவர்போல் நினைத்துக் கட்டிக் காத்து இரவும் பகலும் வேலை மிகமேற்கொண்டு கிரிசித்துப் போவது அவருடைய அசட்டுத்தனமெனச் சிலர் ஒளிவு மறைவாகவும், சிலர் வெளிப்படையாகவும் அந்தக் காலத்திற் பேசிக்கொள்வார்களாம்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே ஆங்கில தேசத்து வர்த்தமானமொன்று எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அங்குள்ள பெரிய நகரமொன்றில் ஜுடிஷல் கோர்ட்டு நாற்காலிகளையும் மேஜைகளையும் பெஞ்சுகளையும் புதுப்பிப்பதற்கு கண்டிராக்ட் எடுத்துக் கொண்டவரொருவரிடத்தில் தச்சர்கள் அனேகர் வேலை செய்து வந்தார்கள். அவர்களில் ஒருவன் மற்றவர்களைப்போலக் கூலிக்கென வேலை செய்யாமல் மிக அக்கறையுடன் நிதானமாகவும் கருத்தாகவும்

நாணயமாகவும் வேலை செய்து கொண்டிருந்தான். மற்றத் தச்சர்கள் அவனைப் பார்த்து இளித்தவாயனென்று ஏளனம் செய்து, "உன்னுடைய சொந்த உபயோகத்திற்குப் பலகை இழைப்பதுபோல இழைத்துக் கொண்டு காலங் கழிக்கின்றாயே! இப்படிச் செய்தால் கூலி கிட்டுமோ? நீ வயிறு வளர்ப்பது எப்படி?" என்று ஏசினார்கள். அந்த ஏச்சைப் பொருட்படுத்தாமல் அவன் தன்னுடைய மனச்சாக்ஷிக்கு ஒப்பத் திருப்தியாகவும் திருத்தமாகவும் எப்பொழுதும்போலவே வேலை செய்தான். நாளடைவில் அவனுடைய நாணயம் பிரகாசிக்கலாயிற்று. நாணயத்தினால் நல்லிணக்கமும் நல்ல சம்பளமும் வாய்த்தன. இவ்வாறு பணமும் பலமும் புத்தியும் பெருமையும் பெருகிவர, அவன் காலக்கிரமத்தில் 'நாணயவந்தன்' என்னும் சிறப்புப் பெயரோடு, ஆதியில் அவன் அக்கறையாகவும் அமைதியாகவும் அழகாகவும் இழைத்தமைத்த தர்மாஸனத்தின்மீது அந்தக் கோர்ட்டு நியாயாதிபதிகளில் ஒருவனாக வீற்றிருக்கப் பெற்றான். உண்மை உயர்வளித்தது.

இந்தக் கதை 'ஒடுக்கம்' வைத்தியநாதத் தம்பிரானுக்கும் ஒப்புமென எண்ணினேன். மகா மேதாவியான ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் அவருடைய உழைப்புக்கும் பொறுமைக்கும் திறமைக்கும் மெச்சி, அவருக்கு இனித் தனிப் பொறுப்பு அளிக்கக் கருதினார்கள்.

## கட்டளைத் தம்பிரான்

மாயூரத்துத் தேவாலய பரிபாலனப் பொறுப்பு வைத்தியநாதத் தம்பிரானுக்கு ஏற்பட்டது. சிவாலய கைங்கரியத்தில் சிரத்தை மிக்கவராய் அவர் தமக்கு இயல்பாயுள்ள வழக்கம்போலச் சோம்பலின்றிச் சுணக்கமின்றிச் சுறுசுறுப்பாக ஆலயத்து விவகாரங்களை அப்போதைக்கப்போது கவனித்துக் கண்டிதமாகவும் பரிஷ்காரமாகவும் நடத்தி வந்தார். அந்தப் பொறுப்பை அவர் நிர்வகித்த விதத்திலும் ஆதீனத் தலைவருக்குத் திருப்தியுண்டானமையினால், வைத்தியநாதத் தம்பிரானுக்கு அவர், முன்னினும் பொறுப்பு அதிகமாகிய, திருவிடைமருதூர் சிவாலய பரிபாலனத்தை ஒப்புவித்தார். அந்த வகையில் பொறுப்பு அதிகப்பட்டதற்குச் சந்தோஷித்து வைத்தியநாதத் தம்பிரான் ஊக்கமும் உற்சாகமும் அதிகமாகக் கொண்டு சிவ கைங்கரிய மொன்றைத் தவிர மற்றெதனையும் நினையாமல், பயபக்தி சிரத்தை மிகுந்தவராய்த் திரிகால ஸ்நானமும் அநுஷ்டானமும் தவறாமல் ஆலயத்து அன்றாடம் பூஜைக் கிரமங்களையும் உற்சவாதி அதிகப் படிகளையும் சிறப்பாக நடப்பித்து, எல்லாருடைய நன்குமதிப்புக்கும் உரியவராயினர். அவருடைய யோக்கியதையையும் பொறுப்பையும் பெருமையையும் எண்ணி அவருடைய பதவிக்குத் தக்கவாறு ஆதீனத் தலைவர் பல்லக்கு முதலிய கௌரவச் சின்னங்களைக் கொடுத்தருளினர்.

## "கார்வாரி"

வைத்தியநாதத் தம்பிரானுக்குச் சமானமாகச் சமீபத்தில் பொறுப்பும் பொறுமையும் தகைமையும் சிரத்தையும் ஊக்கமும் உள்ளவர் கிடைப்பது அரிதெனக் கருதி அவரையே ஆதீனத் தலைவர் தம்முடைய "கார்வாரி" ஆக்கினார். "கார்வாரி" என்பவர் சர்வ 'முக்தியார்நாமா' (General Power of Attorney) பெற்றவர்; ஆதீனத் தலைவருக்குப் பிரதிபுருஷராகக் கையெழுத்துச் செய்யவும், கட்டளையிடவும், எல்லா விவகாரங்களையும் நடத்தவும் அதிகாரம் வாய்ந்தவர்; ஓரிடத்திலேயே தங்கி யிராமல் பற்பல ஊர்களுக்கும் அடிக்கடி போய் எல்லாக் காரியங்களையும் கவனிக்கவேண்டியவர். ஆதீனத் தலைவர் ஒருவர் வேறாக இருப்பினும், காரியாமிசத்தில் எல்லா விவகாரங்களுக்கும் வைத்தியநாதத் தம்பிரானே பொறுப்பாளியாயினார். தலைவருடைய விருப்பு வெறுப்புக்களை யனுசரித்து, தம்முடைய சொந்த அபிப்பிராயங்களை மறுத்து ஒறுத்து, வைத்தியநாதத் தம்பிரான் "கார்வாரி" உத்தியோகத்தை நிர்வகித்து அவரைத் திருப்திப்படுத்தியது ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகருடைய மனப்போக்கை யறிந்தவர்களுக்கு மிக ஆச்சரியமா யிருந்தது.

## ஆதீனத் தலைமை

இவ்விதமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் அறிந்தோ அறியாமலோ, தாமாகவேயோ ஆதீனத்து அபிமான புருஷர்களாயுள்ள சூக்ஷ்ம தேகிகளின் பிரேரணையினாலேயோ, தம்முடைய ஸ்தானத்திலிருந்து ஆதீனத்துக் காரியங்களை நன்றாக நிர்வகிக்கத் தக்க யோக்கியதையையும் பழக்கத்தையும் ஸ்ரீ வைத்தியநாதத் தம்பிரானுக்குக் கற்பித்து வைத்தார். காலக்கிரமத்தில் தம்முடைய திருமேனி அசௌக்கியப்பட்டுத் தாம் நீடித்த காலம் இருக்க மாட்டோமென்று தோன்றியவுடனே ஸ்ரீ வைத்தியநாதத் தம்பிரானுக்கு முறைப்படி ஆதீனத் தலைமைப் பட்டாபிஷேகம் செய்வித்து ஸ்ரீ சுப்பிரமணிய ரென்னும் தேசிகதீக்ஷா நாமமும் கொடுத்து, ஆதீனத் தலைமைப் பொறுப்பை அவருக்கு ஒப்புவித் தருளினார்.

"அன்னதாதா பயத்ராதா யச்சவித்யாம் ப்ரயச்சதி
உபதேஷ்டோ ஜனகச்ச பஞ்சைதே பிதரஸ்ம்ருதா:"

"அன்ன மளித்தவர், பயத்தைத் தவிர்த்தவர், கல்வி புகட்டியவர், உபதேசித்தவர், பெற்றவர் ஆகிய ஐவரும் தந்தைகளெனப் படுவார்கள்." இந்தப் பிரமாணத்தின்படி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு அம்பலவாண தேசிகரவர்கள் நான்கு வகையில் தந்தையெனத் தக்கவர்களாவார்கள். அவர்களிடத்துத் தந்தையென்னும் எண்ணமும் பக்தியும் உள்ளவராய் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஆதியிலிருந்தே நடந்து வந்திருக்கிறார்கள். எப்படியெனில்,

"ஜீவதோ வாக்கியகரணாத் ப்ரத்யப்தம் பூரிபோஜனாத்
கயாயாம் பிண்டதானாச்ச த்ரிபிஹி: புத்ரஸ்ய புத்ரதா."

"தந்தையினுடைய ஜீவதசையில் அவருடைய சொற்படி செய்வதனாலும், பின்பு ஆண்டுதோறும் அவருடைய ஞாபகத்தைப் பாராட்டி பூரி தக்ஷிணை கொடுத்துப் போசன மளிப்பதனாலும். கயையில் பிண்டஞ் சமர்ப்பிப்பதனாலும் ஆகிய இம்மூன்று காரியங்களினாலுமே மகனுக்குப் புத்திரத் தன்மை ஏற்படும்.' இவற்றுள் முதலிரண்டு வகைகளிலும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் தம்முடைய புத்திரத்துவத்தை உள்ளபடி நிறைவேற்றினவரென்று எவரும் ஒப்புக் கொள்வார்கள். மற்றும், ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்

"தந்தை மகற் காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றபடி மகறகுச் செய்ய வேண்டிய கடமையைத் திருத்தமாய்ச் செய்துள்ளாரென்பதும், 'ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

"மகன் றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்"

என்றபடி யாவரும் புகழத்தக்க விதமாக நடந்து கொள்கின்றாரென்பதும் நாம் கண்கூடாகக் கண்டு சாற்றத் தக்கவர்களா யிருக்கின்றோம்.

நிற்க,—இந்த ஆதீனத் தலைமை வாய்ந்ததனால் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய மனத்திலும் ஒழுக்கத்திலும் மாறுபாடேதேனும் உண்டாயிருக்கின்றதா வென ஆராய்ந்து பார்ப்போம்.

## கோட்பாடு

ஒருவருடைய மனோபாவத்தைத் தெரிந்து கொள்வதற்கு வாய்மொழியும் கைக் காரியமுமே சூசனைகளாகும். இவைகளைக் கொண்டு ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய மனத்தை அளந்து பார்ப்போமானால், ஆதீனத் தலைமை வாய்ந்ததனால் அவர்களுக்கு எவ்விதமான அகம்பாவமும் உண்டாகவில்லையென்று ஊன்றிச் சொல்லலாம். "எவர் செய்த தவப் பயனினாலோ, எந்த ஊழ்வினையின் நற்பயனினாலோ இந்தப் பதவி வாய்த்துளது. இது பரமேசுவரர் ஒப்புவித்துள்ள பொறுப்பு. இதனைச் சரியாக நிறைவேற்றுவதற் கேற்ற திறமையும் வசதியும் எனக்கு அளித்தருளுவது அந்தப் பரமேசுவரருடைய பொறுப்பேயாகும். நானாக வரித்து வருந்தி இந்தப் பதவியைப் பெறவில்லை. எக் காரியமும் விதியின் வசமாகவே நடந்தேறும். அந்தப் போக்கை மாற்றுவது எவராலும் ஆகாது. மானிடரை எல்லா வகைகளிலும் உய்விக்கத் தக்கது பரமேசுவரருடைய அருள் ஒன்றே:

ஆவது விதியெனி னனைத்து மாயிடும்
போவது விதியெனி னனையும் போகுமாற்
றேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ
வேவரு மறியொணா வீசற் கல்லதே.'

"ஆகையால், அவருடைய அருளைப் பெறுவதற்கு வழிதேடுவதே எனது கடமையல்லாது, வேறு கவலைப்படுவது எனக்கு உரித்தன்று. அவனுடைய அருளைப் பெறுவதற்குத் தர்மமே முதன்மையான மார்க்கமென்று சான்றோரனைவரும் சாற்றி யிருக்கின்றார்கள்.

'அறமே மறங்கண் முழுதழிக்கு
மறமே கடவு ளுலகேற்று
மறமே சிவனுக் கொருவடிவ
மாகுஞ் சிவனை வழிபடுவோர்க்
றமே யெல்லாப் பெரும்பயனு
மளிக்கும் யார்க்கு மெவ்விடத்து
மறமே யச்சந் தவிர்ப்ப தென
வறைந்தான் சாதா தபமுனிவன்.'

"ஆகலால், தர்மத்தையே நம்பித் தர்மத்தையே ஆசரிப்பேன்" என்று ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் திடசங்கற்பம் செய்து கொண்டிருப்பவர்களாய் என் புத்திக்குத் தோன்றுகின்றார்கள். ஆதீனத்து விவகாரங்களில் தர்மசிந்தனையே மேலிட்டுக் காண்கின்றது. தர்ம காரியங்கள் மும்முரமாக நடந்தேறுகின்றன. பசித்தாருக்கும் பசுக்களுக்கும் வேண்டிய வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அன்னக்கொடி நாட்டும் ஆதீனத்தவர்கள் அன்னதானம் விசேஷமாகச் செய்கிறார்களென்று நான் சொல்வது அனாவசியகமாகும்.

## தருமசிந்தனை

ஆதீனத்துச் சந்நிதானம் ஈகையினாலும் இரக்கத்தினாலும் விளக்க முற்றிருக்கின்றது. சந்நிதானத்தில் அடுத்தவரைக் காத்து ஆதரிக்கின்றார்கள். இரப்பவர்க்கு 'இல்லை' யென்னும் சொல் இல்லை. இரப்பவர் எம் மதத்தினராயினும் சந்நிதானத்து ஈகைக்கு உரியவர்களாகவே இருக்கின்றார்கள்; ஏழ்மை ஒன்றையே எண்ணி இறங்கி ஈகையளிக்கின்றார்கள். புசிப்புக் குரியவர்கள் பசித்தவர்களே, ஈகைக்குரியவர்கள் ஏழைகளே என்னுங் கொள்கை அனுதின விவகாரமாக இந்த மடாலயத்தில் காண்கின்றோம். ஆதீனத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய அன்புப் பெருக்கத்தினால் மடாலயம் நிரம்பி யிருக்கின்றது. அன்பு அன்பை ஜனிப்பிக்கின்றது. வேலைக்காரர்கள் கூலிக்கென்றல்லாமல் அன்புடன் வேலை செய்கின்றார்கள். வன்மனத்தினராய், விரோத புத்தியுடையவர்களாய், விபரீத எண்ணமுடையவர்களாய், வம்புந் தும்பும் விளைப்பவர்களாய் அந்தச் சந்நிதானத்திற்கு வருகிறவர்களும் அவ்விடத்து அன்பின் பாசத்தினாற் கட்டுண்டு அயர்ந்து ஒடுங்கி பக்தி மேலிட்டுப் பரிவு பாராட்டிப் போகவேண்டியவர்களாகிறார்கள். அன்பின் அதிசய சக்தி அத் தன்மையதா யிருக்கின்றது.

அறஞ் செய்யும் விருப்பம் அமைந்திருப்பதனாலே பண்டார சந்நிதிகள் எல்லா விவகாரங்களிலும் அறத்தையே காத்து நடக்கின்றார்கள். உள்ளத்தில் விருப்பம் ஊன்றியிருக்குமானால், அது வாக்கிலும் செய்கையிலும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்குமல்லவா? விவகாரங்களில் அக்கிரமங்கள் அநேகம் செய்து, அவைகளுக்கு ஒருவாறு பரிகாரமாகச் சிற்சில தான தருமங்கள் செய்து புகழ்பெற விரும்புகிறவர்கள் பலரைக் காண்கிறோம். அப்படியில்லாமல், இப்போதுள்ள ஆதீனகர்த்தாவர்கள் எல்லா விவகாரங்களிலும் தரும சிந்தனையையே முன்னிட்டு நடக்கின்றார்களென்று நான் கருத்தாய்க் கவனித்துக் கண்டு கொண்டேன்.

பெயரைக் கருதியாவது புகழைநாடியாவது அவர் தருமம் செய்வதன்று. தருமம் செய்வதே தமது தலைப் பொறுப்பு; அதற்கெனவே இத்துணைச் செல்வம் தமது வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது; இதனை ஜனங்களுக்கு உபயோகமான வழியில் செலவிடாதொழிவது குற்றமாகும். நற்செலவு வகைகளை எண்ணிக் கைக்கொள்வதுபோல, நல்வரவு வகைகளை நாடிப் பேணாவாய் விவகரிப்பதே தமது கடமை எனத் தேர்ந்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் தம்மாலியன்ற தரும காரியங்களைத் திருத்தமாக நாள்தோறும் நடப்பிக்கின்றார்கள்.

தனித்தனியே அவரவரும் தருமஞ் செய்வதே கீழ் நாட்டு வழக்கம். ஊரார் கூடி ஒருமித்துப் பணந்திரட்டிப் பொதுவில் தருமஞ் செய்வது மேனாட்டு வழக்கம். இதனில் கட்டுத் திட்டங்கள் இருக்குமாதலால் இதுவே ஒழுங்கான வழி; இது இந்தியாவில் இல்லை என்பார் சிலர். இந்நாட்டில் திருவாவடுதுறை ஆதீனம் போன்ற மடங்கள் இருக்கையில், மேனாட்டுப் பாங்கின்படி Friend in need Society-களும், Poor House-களும், Almonry-களும் அமைக்க வேண்டிய அவசியமில்லையே என்று நான் திருவாவடுதுறை ஆதீனத்துத் தரும காரியங்களைப் பார்த்தபோது எண்ணியதுண்டு.

## வித்தியாதானம்

தானங்களைப் பற்றிப் பேசுமிடத்து எல்லாத் தானங்களும் சிறந்தவைகளே. அவற்றுள் ஒருவகைத் தானம் விசேஷமென்றும் மற்றொன்று விசேஷமில்லையென்றும் எண்ணுவது என்னுடைய மதமன்று. எவருக்கு எது தேவையோ அவருக்கு அதனை யளிப்பது உத்தம தானமென்றே நான் சொல்வேன். இந்த மடாலயத்தில் அன்னதானம், வஸ்திரதானம், சொர்ணதானம் ஆகிய இவை விசேஷமாக நடந்துவருகின்றனவென்று எல்லாரும் அறிவார்கள். ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் பட்டத்திற்கு வந்தது முதல் வித்தியாதானமும் விசேஷமாக நடந்துவருவது வியத்தற்பாலது.

"மாணவர்க் கறிவினை வயக்கியின் புறு
மாணமார் முத்தியில் வைக்குநீர் மையால்
தானமெவ் வகையுளும் தக்க வித்தியா
தானமே சிறந்தது சாற்றுங் காலையே"

என்னும் சூதசம்ஹிதைப் பிரமாணத்தைச் சிரமேற்கொண்டு ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் வித்தியாதானத்தை வெகு விமரிசையாகச் செய்து வருகின்றார்கள் தமிழ்ப் பாடசாலையும், தமிழ் வேத [illegible] சாலையும் வைத்து நடத்தி வருகின்றார்கள். பற்பல ஊர்களினின்றும் பிள்ளைகளை வரவழைத்துப் போஷித்துப் படிப்பிக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய அன்ன வஸ்திராதிகளையும் ஆரோக்கியாதி யனுகூலங்களையும் ஆதரவுடன் கவனிக்கின்றார்கள். அவர்கள் சீர்திருத்திச் சிறப்பித்துள்ள புஸ்தகாலய சம்பந்தமாகப் புலவர்கள் பலரைக் கொண்டு அப்போதைக்கப்போது வித்தியாவிஷயங்களைப்பற்றியும மத விஷயங்களைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்விக்க வெண்ணியிருக்கிறார்களென்றும் தெரிகிறது. அவர்கள் நீடூழி வாழ்ந்து ஆதீனத்துச் சிஷ்யகோடிகளுக்கு அருள் புரிந்து அவர்களை உய்விப்பார்களாக! அவர்களுடைய

"தருமமே தலைகாக்கும்."

# "இந்துநேசன்"

## தமிழ் தினசரிப் பத்திரிகை

கலை, கைத்தொழில், விவசாயம், ராஜாங்க விஷயம், உள்ளூர் வெளியூர் கோர்ட்டு வர்த்தமானங்கள், வெளிதேச சமாசாரங்கள், வர்த்தமானக் குறிப்புகள் முதலியன தகுந்த அனுபவசாலிகளால் எழுதப்பட்டு வருகின்றன. விளம்பரம் செய்வதற்குத் தகுந்த பத்திரிகை.

வருஷ சந்தா ரூபா 15 0 0
ஆறுமீ சந்தா ரூபா 7 8 0
மூன்றுமீ சந்தா ரூபா 3 12 0

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—


மானேஜர்,
"இந்துநேசன்" ஆபீஸ்,
92, அரமனைக்காரன் தெரு, மதராஸ்

# திருவாவடுதுறை தரிசனம்

"இந்துநேசன்" அலுவலகத்திலிருந்து
எடுத்தது

வை. அனந்தய்யர்
"இந்துநேசன்" பத்திராதிபர், சென்னை

1921



திருமூலநாயனார், அவர் மாணாக்கரெழுவர், அரசவிருக்ஷம், திருவாவடுதுறை க்ஷேத்திரம், தடாக முதலியன.

Copyright Registered.

9057
(6372)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

உ

சிவமயம

# A Visit to Tiruvavaduturai

# திருவாவடுதுறைத் தரிசனம்

BY

**Mr. V. Kandasami Pillai of Jaffna**

*Brother of "Tattvamantram" Viswanatha Pillai*

## புகைவண்டிப் பிரயாணம்

நகரவாசத்திற்காளாகும் காட்சிகளிற் சலிப்புற்று நாட்டுப்புறத்து இயற்கை யழகுகளைக் கண்டு களிக்க எண்ணி இம்மாதத்திறுதி புரட்டாசி மாதத்தில் ஒரு நாள் மாலைப் பொழுதில் எழும்பூரில் புகைவண்டி பற்றினேன். மதன்னாட்டியக் காட்சிகளுள் காவிரியாற்றுப் பிரதேசத்திலுள்ளவை சிறந்தவையென்பது பிரசித்தமல்லவா? இந்நாளில் ஒரு நாளும் தென்னிந்திய ரெயில்வே மூன்றும் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யக்கூடாதென்னும் பெரும் பாடத்தை இரவு முழுதும் தீர்க்கமாய்ப் படித்துக்கொண்டேன். மறுநாள் அருணோதயத்தில் மாயூரம் சேர்ந்து காவேரியைத் தரிசித்துக் காலைக் கடனை முடித்துக்கொண்டு, பொன்னியின் பெருமையைப் பார்த்து மகிழ்வுறும் பொருட்டு மறுபடி புகைவண்டி யேறினேன். தெற்கே செல்லச் செல்ல அந்தப் பெருமை அதிகமாய்த் தோன்றியது.

பத்து மைல் தூரம் சென்ற பிறகு இருப்புப்பாதையின் இருபுறத்திலும் மங்களகரமான பசுமையைக் கண்டேன்; பயிர் நிலங்களும், நீர்க்கால்களும், குளங்களும், தாமரைத்தடாகங்களும், தோட்டங்களும், தோப்புகளும், தாவுகளும், கொடிக்கால்களும் அடுக்கடுக்காய் இருந்தன; மந்தமாருதம் மனோஹரமாயிருந்தது. அந்தப் பிரதேசத்தில் ஒரு தடம் சிறப்புற்று விளங்கியது. பால

யிற் பசுமை பளிச்செனத் தோன்றும்; தண்மையில் தண்மையும் செழுமையிற்
செழுமையும் எளிதிற் புலப்படா. ரெயிலோடும் வேகத்திலும் அத் தடத்தின்
செம்மை தெரிந்தமையின், அது எவ்வூரென விசாரித்தேன். அது திருவாவடு
துறை யெனத் தேர்ந்து, அடுத்து வந்த நரசிங்கன்பேட்டை ஸ்டேஷனில்
இறங்கினேன். அதற்கப்பால் நெடுந்தூரத்தி லோர் ஊருக்குப் போகச் சீட்டு
இருந்தும், முன்னமே நூறு மைலுக்கு அதிகம் ரெயிலில் வந்திருந்தேனாத
லால், அவ்விடத்தி லொரு நாள் தங்குவதற்கு ரெயில்வே விதிப்படி அவகாச
மிருந்தது.

## திருவாவடுதுறை

நரசிங்கன்பேட்டையிலிருந்து ஏறக்குறைய ஒருமைல் தூரம் சோலைக
ளும் தோட்டங்களுஞ் சூழ வழி நடந்து திருவாவடுதுறையின் தெற்குவீதி
சேர்ந்தேன். அந்தப் பாதையைக் கல்லுங் கப்பியு மிட்டுக் கெட்டிப்படுத்தாதது
பெருங்குறை யெனவே தோன்றிற்று. தெற்குவீதி விசாலமாயிருந்தது. வலது
புறத்தில் வீடுகள் வரிசையாயிருந்தன. இடது புறத்தில் பெரிய மாளிகை யொ
ன்று கதித் தெழுந்து நீண்டு ஓங்கி யுயர்ந்துநின்றது. அதுவே திருவாவடு
துறை ஆதீனத்தாரின் மடமாகும். அதற்குத் தோரணவாயில்கள் இரண்டு
மூன்றுண்டு. அவைகளிற் சித்திராலங்காரமான தேர்ச்சீலைகள் விழுதுபோலி
றங்கிப் பருத்துத் திரண்டு பல்வர்ணப்பட்டைகள் வட்டம் வட்டமாய்த் துலங்
கப் பொலிவுடன் அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. அஜாரவாசலில் ஆட்கள்
சிலர் நின்று கொண்டிருந்தார்கள்; பரதேசிகள் இரண்டொருவர் காவி போர்த்
துக் குந்தியிருந்தார்கள். அதனை யடுத்து நின்ற தூணிரை ஸரஸ்வதி மகா
லின் வெளியங்கமாகும்.

## ஸரஸ்வதி மஹால்

என்பது விரிந்து நீண்டு உயர்ந் தெழுந்ததொரு மண்டபம். ஒரு பகுதி
யில் தமிழ் தெலுங்கு ஸம்ஸ்கிருத ஆங்கில அச்சுப் புத்தகங்களும் ஓலைப் பிரதி
களும் நிரம்பியிருக்கின்றன. சாஸ்திரியா ரொருவர் அவைகளைத் தட்டிக்
கொட்டிக் கட்டிவைத்து அட்டவணை யெழுதிக் கொண்டிருக்கிறார். மற்றொரு
பகுதியில் பிருகஸ்பதியே போன்று அத்தியக்ஷராகிய பிரம்மஸ்ரீ மகாமகோ
பாத்தியாய உ. வே. சாமிநாத ஐயரவர்கள் ஆச்சிரமவாசியாகத் தங்கியிருக்கி
ன்றார்கள். இந்த ஆச்சிரமத்தைச் சார்ந்து கிழக்கேயோடுவது நீண்டதொரு பிர
சங்கசாலை. அதனில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் தாராளமாய் உட்காரலாம்.
இந்த மண்டபம் சேதுபதி மகாராஜா அவர்கள் முதன்முறை அங்கே விஜயஞ்
செய்தபோது அமைத்ததாம். இதனிலும் இதன் சார்பிலும் இப்பொழுது தமிழ்ப்
பாடசாலையும் தமிழ் வேத பாடசாலையும் நடந்து வருகின்றன. மேற்கூறிய
கட்டடங்களின் தொகுதியே ஸரஸ்வதி மகால் எனப்படுவது. இதன் வடபுறத்
துள்ள இரம்மியமான நந்தவனத்தில் தூயவெண்மைதுலங்கும் நந்தியாவர்த்த
மலர்ச்செடிகளும் மருகும் செழித்து விளங்குகின்றன,

ஸரஸ்வதி மகால் மூன்று பகுதிகள் கொண்டதெனக் குறிப்பிட்டேன். ஒரு பகுதியில் புஸ்தகசாலையும், மற்றொரு பகுதியில் பாடசாலைகளும், மத்தியில் வித்தியாவிசாரணைபதி வசிக்கும் ஆச்சிரமமும் உள்ளன. மாணவருக்கும் உபாத்தியாயருக்கும் அந்நியோந்நிய பழக்கமிருக்க வேண்டும். உபாத்தியாயர்களுடன் நெருங்கிப் பழகுவதனால் மாணவர்கள் உபாத்தியாயர்களுடைய நடைகளையுங் குணங்களையும் கைக்கொண்டு நல்லொழுக்கமும் நல்ல சீலமும் உள்ளவர்களாய் வளரவேண்டு மென்பது முற்காலத்துக் குருகுலவாசத்தின் கருத்தாம். இந்தத் திருவாவடுதுறைக் குருகுலத்திலோ சாமானிய உபாத்தியாயர்களுடன் பழகுவதற்கு இடமிருப்பதல்லாமல், அவர்களுக்குத் தலைவராயிருக்கும் மகா மகோபாத்தியாயருடன் பழகுவதற்கும் அனுகூலம் அமைந்திருக்கிறது. அந்த மகா மகோபாத்தியாயருடைய பெருமை கல்விச் சிறப்பினால் மாத்திரமேயல்லாமல் ஒழுக்கத் தூய்மையாலும், நியமநிஷ்டானுஷ்டானங்களினாலும், அமைதி சாந்தம் நிதானம் இன்சொல் மெல்லுரை நல்லெண்ணம் என்னும் குண விசேஷங்களினாலும் வாய்ந்ததென அவருடன் ஐந்து நிமிஷ காலம் பழகுவோரெவருக்கும் போதமாகு மெனத் திடமாய்ச் சொல்லுவேன்.

## கிராமம்

திருவாவடுதுறைக் கிராமம் சிவாலயத்தை இதயமாகக் கொண்டு, அகன்ற தேரோடுந் தெருக்களும், சந்நிதியக்கிரகாரமும், கடைகளும் கண்ணிகளும், வாவி கூப தடாகங்களும், தோட்டங்களும் தோப்புகளும் துரவுகளும், உத்தியானங்களும், விளை நிலங்களும் அமைந்துள்ளது; நில வளமும் நீர் வளமும் நிரம்பியது. ஊருக்கு வடக்கே காவேரியாறு உளதாதலின், இது திவ்விய தீரம் எனத் தகும். பிராம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திராதி வருணத்தவர்களும், பச்சிமாம்ஞயத்தை யனுஷ்டிக்கும் மகம்மதியரும் இதிற் குடி கொண்டுள்ளார்கள். ஊரைச் சுற்றிப் பல்வகைச் சோலைகளும் பயிர் நிலங்களும் நீர்க்கால்களும் ஊருணிகளும் உண்டென்பதைவிட, ஆயுராரோக்கிய ஐசுவரியப் பெருக்கத்தின் பொருட்டுப் பலரும் திருவாவடுதுறை யென்னும் ஆராமத்தை நாடி அங்கங்கே இலை வீடுகளும் கொடி வீடுகளும் குடிசைகளும் கனமாளிகைகளும் அமைத்துக் கொண்டு அமைதியாக வாழ்ந்து வருகிறார்களென்பது மிகப்பொருந்தும்.

## தொடிப்பு

புண்ணிய பூமி யெனத்தகும் இப் பெருங் கிராமமும் நொடிக்கலுற்றது. இங்கே நிரம்பியிருந்த கல்விமான்களும் மாணவர்களும் குடிகளுங் கால்நடைகளும் பக்தர்களும் சிஷ்டர்களும் நொந்து பரதேசமும் பலதொழிலும் நாடலானார்கள். முன்னாளில் இச் சிவதலத்தில் ஓதுவாரின் குடும்பங்கள் மாத்திரமே நாற்பதுக்கு அதிக மிருந்தனவாம். இப்பொழுது இரண்டொரு குடும்பம் காண்பது அருமையாயிற்று. அந்த விருத்தியிற் சீவனம் நடவாமற் போனதனால் அவர்கள் வேறு தொழில் மேற்கொண்டு வயிறு வளர்க்க வேண்டி வேற்றூர்களை நாடுவது அவசி

யமாயிற்று. வீடுகளும் விடுதிகளும் வீதிகளும் பழுதுபார்ப்பா ரில்லாமற் பாழ்த்து இடிந்து சீர்குன்றின. இத்தனைக்கும் காரணம் என்ன?

## கிராமாதிக்கியம்

திருவாவடுதுறைப் பண்டார சந்நிதியினுடையது. ஊர் முழுதும் சுற்றுப் புறத்து நிலந் தோப்பு முதலியனவும் எல்லாம் அந்தப் பண்டார சந்நிதியின் மடத்து ஆதீனம். எல்லாக் குடிகளும் எல்லாத் தொழிலாளரும் ஆதீனத்தவர்களை யடுத்தே பிழைக்க வேண்டும். அவர்களே அந்தக் கிராமத்திற்குப் பரமாதிகாரிகள். அவர்களுக்கு அந்த ஊரல்லாமல் வேறு எத்தனையோ ஊர்களில் நிலங்களும் வேறு சொத்துக்களும் உண்டு. வருஷமொன்றுக்கு ஆதீனத்தவர்களுக்குவரத்தக்க வரும்படி நான்கு அல்லது ஐந்து லட்சம் ரூபா யிருக்கலாம். இதைத் தவிர இந்த ஆதீனத்துப் பரிபாலனத்தில் பெரிய தேவஸ்தானங்கள் சிலவும், சிறிய தேவஸ்தானங்கள் பலவும் வேறு வேறு ஸ்தலங்களில் இருக்கின்றன. அவைகளுக்குரிய ஏராளமான ஆஸ்திகளும் விவகார நிர்வாகமும் ஆதீனத்தவர்களையே பொறுத்தன. ஆதலால், ஆதீனத்தலைவரவர்கள் இந்தியச் சிற்றரசர்களு ளொருவரெனவே கொள்ளல் தகும். ஆதீனத் தலைவர் திருவாவடுதுறை மடத்திலேயே இருந்து மடத்துக் காரியங்களையும் மற்ற விவகாரங்களையும் நடப்பித்து வரும் வரையில் மடம் பிரகாசமாய் உலகத்தில் விளங்கும், ஊரில் விவசாயமும் வியாபாரமும் செழித்திருக்கும், குடிகள் தழைத்திருப்பார்கள், லலித கலைகளும் வித்தியா வியாசங்களும் பக்தி சிரத்தையான வைதிக காரியங்களும் விமரிசையாய் நடைபெறும்; வருவாரும் போவாரும் திருவாவடுதுறையில் அதிகமாயிருக்கும்; எந்த வேளையிலும் ஊர் கலகலவென்று களிப்புற்றிருக்கும். ஆனால் சில வருஷங்களுக்கு முன், காலவசத்தினால் இருப்பிடம் திருவிடை மருதூருக்கு மாறியது. இந்திய ராஜாங்கத் தலைநகரம் கல்கத்தாவினின்று டெல்லியாக மாறின பிறகு கல்கத்தாவின் யோக்கியதை குறைவுபட்டது போல, ஆதீனத்து ராஜஸ்தானம் திருவிடைமருதூரான பிறகு திருவாவடுதுறை மங்கித் தூங்கலுற்றது. ஊரில் விவகாரமும் சந்தடியும் குறைந்தன. உற்சாகமூட்டித் தொழில்களை வளர்க்கத்தக்க அதிகாரிகள் இல்லாமையின், குடிகள் சோர்ந்து வேற்றிடம் சேர்ந்தார்கள்; ஊரைவிட்டுப் போகாமல் தங்கியிருந்தவர்கள் வாடிக் குன்றினார்கள். இவ்வாறு திருவாவடுதுறையின் பெருமை நொடித்தது.

## கிளைப்பு

இப்போது ஆதிபத்தியம் கைமாறியது. மழை விட்டபோதிலும் தூவானம் விடாததலால் பழைய நிலைமையின் வாதைகளும் இடையூறுகளும் முற்றுந் தெளியாது இன்னும் இருப்பினும், இந்த மாறுபாட்டினால் ஆதீனத்தின் நன்மைக்கு வித்திடப்பட்டதெனவே சொல்லலாம். புதியவர் பட்டத்துக்கு வந்தவுடன் பல திருத்தங்களையும் ஏககாலத்தில் செய்ய முடியாதென்பது எவருக்குந் தெரிந்த விஷயமே. ஆனால், திருத்தங்க

ஞான் முதன்மையானது தலைமை ஸ்தானத்தைத் திருவிடைமருதூரினின்றும் ஆதி பீடமாகிய திருவாவடுதுறைக்கு மாற்றுவதேயாகுமென்று புதிய ஆதீனத் தலைவருக்குத் தோன்றியது ஈசுவர பிரேரணை யென்றே எண்ணுகிறேன். இடம் மாறத் தேசக் காட்சியும் மனக்காட்சியும் மாறுபாடெய்தும். பழைய ஞான் பங்களின் ஆவரணத்தை யொழித்து புதிய ஆவரணத்தை மேற்கொண்டு சந்தர்ப்பங்களையும் விவகாரங்களையும் புதிய மாதிரியில் அமைக்கவெண்ணிப் புதிய ஆதீனத் தலைவர் திருவிடைமருதூரினின்று காரியஸ்தானத்தைப் பெயர்க்கப் பிரயத்தனப்பட்டார். பட்டத்திற்கு வந்து ஐந்தாறு மாதத்திற்குள் திருவாவடுதுறையிலுள்ள பழைய மடத்தில் வந்து நிலை கொண்டார்.

தலைவரில்லாததனாலே, பாலித்துப் படியளப்பவரில்லாததனாலே, திருவின்றித் தேற்றமின்றித் திகைத்துத் தடுமாறி நின்ற திருவாவடுதுறை, பண்டார சந்நிதியின் விஜயத்தினால் இப்போது உயிருற்று உற்சாகப்படுகின்றது. ஊரைவிட்டுப் போனவர்கள் விரும்பித் திரும்பி வருகிறார்கள்; வேறு பல ஜனங்கள் பல பல காரியங்களையும் கருத்துக்களையும் முன்னிட்டு அவ்வூருக்கு வரத் தலைப்பட்டிருக்கிறார்கள். சிதைந்து கிடந்த கட்டடங்களும் சாவடிகளும் சாலைகளும் ஆதீனத்தவர்களுடைய பரிபாலனத்தில் புதுப்பிக்கப்படுகின்றன; மாடுங் கன்றும் நடமாடலாயின; வேளாண்மையும் வியாபாரமும் வளர்கின்றன. ஜன நடமாட்டத்திற்குத் தக்கவாறு ஊரில் விவகாரமும் கலகலப்பும் அதிகமாயிருக்கின்றன; கோவிலுங் குளமும் விளக்கமுற்றுத் திருத்தமாயிருக்கின்றன. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" என்பார்கள். கோவிலில் ஈசுவர ஸாந்நித்தியம் அதிகமாயிருப்பது போல இப்பொழுது தோற்றுகின்றது. பராமரிப்பின்றிக் கிடந்த பழைய மடத்தின் அமைப்பும் அருமையும் பெருமையும் பார்ப்பவர் மனத்தில் பதிகின்றன. தவமுந் தருமமும் தலைகாட்டியிருக்கின்றன. ஆகையால், திருவாவடுதுறை இனித் தழைத்துக் கிளைத்துத் திறம்பெறவேண்டுமென்பது தேவர்களின் திருவுளமென்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. இந்த

## ஸ்தல விசேஷம்

மிகச்சிறந்தது. இது காவிரியின் தென்கரையிலுள்ளது. இதற்கு (ஆ+அடுதுறை) ஆவடுதுறை என்று பெயர். பார்வதிதேவியார் ஒரு சமயத்தில் காரணாந்தரத்தினால் பசு வடிவமெய்தி உழன்று கொண்டிருந்தனர். இவ்வூர்க்கோவில் சந்நிதானத்திற்கு எதிரிலுள்ள திருக்குளத்தில் நீராடியெழுந்தவுடனே பசு வடிவம் நீங்கித் தேவியார் பரமேசுவரன்பால் எய்திய காரணத்தினால் அந்தத் தீர்த்தத்திற்கு கோமுக்தி தீர்த்தமென்றும், ஆலயங்கொண்டருளிய ஈசுவரருக்கு கோமுக்தீசுவரர் என்றும், அம்பிகையை அணைத்துக் கொண்டதால் அணைத்தெழுந்த நாதர் என்றும் பெயர். அந்த ஈசுவரரையே மாசிலாமணீசுவரரென்றும் வழங்குவார்கள். அம்பிகைக்கு ஒப்பிலாமுலையம்மை என்று பெயர்.

இந்த க்ஷேத்திரத்தில அரசமரம விசேஷம்; இங்குள்ளது படர்ந்த அரச. அரசவனமென்றே இவ்வூர் வழங்கப் பெற்றிருக்கின்றது. அரச மரத்தின் அருமையை அறியாதார் யாவர்! விருக்ஷங்களுக் கெல்லாம் அது அரசு போன்றது என்பது பெயரினாலேயே விளங்குகின்றது பிரபஞ்சத்தில் எங்கெங்கு உருவத்தில் ஈசுவரவிபூதி நிரம்பி யிருக்கிறதென்று சொல்லுமளவில், "விருக்ஷ வகைகளுள் அசுவத்தமே நானாவேன்" என்று பகவத் கீதையில் பகவான் பிரகடித்திருப்பதனாலேயே அரசமரத்தின் பெருமை அனைவருக்கும் தோன்றத்தக்கதாகும். பல வகை ரோகிகளால் பலவகை ரோகங்களுக்கும் பீடைகளுக்கும் அசுவத்தப் பிரதக்ஷிணம் பரிகாரமாக அது ஆசிரயிக்கப்படுகின்றதனால், அந்தமரம் ஜீவகளை நிரம்பியது என்பது தெளிவு. அது ஜீவகளைக்கு ஊற்றுப்போன்றது. ஈசுவர சாந்நித்திய முள்ளது, பூஜார்ஹமான . மகப்பேறு வேண்டி வந்தியர் அதனை வழிபடுவார்கள்; தவத்தோர் அதன் தண்ணிழலில் தங்கி யிருப்பார்கள். அதனில் வித்யுச்சக்தி விசேஷமாய் நிரம்பியிருக்கிறதெனக் கண்டு 'மெஸ்மெரிஸம்' என்னும் ஜீவாகர்ஷண வித்தையாடிகள் தமக்குப் பலமும் சக்தியும் குறைவுபட்ட காலத்து மறுபடி தமக்கு ஜீவகளை பெருகும் பொருட்டுச் சிறிது காலம் அரசமரத்தை நாடி, அதனைப் பரிசித்துக் கொண்டிருப்பார்கள். ஜீவகளை மிகுந்ததென்பதனாலே அரசமரம் புஷ்டிவர்த்தனமானதென்று சொல்ல வேண்டியதே யில்லை. திருஷ்டாந்தமாக மெலிந்து நொந்த ஆடு அரசந்தழை தின்றால் வெகு சீக்கிரத்தில் கொழுப்புற்றுச் செழுமையாய்த் தோன்றும். இரஸாயன வர்க்கத்தில், அரச மரத்தில் அபூர்வமான ஔஷத சத்து அமைந்திருப்பதனாலே பெரிய இரஸாயனக்கிரியை எனத் தகும் அக்கினிஹோத்திராதிகளில் உபயோகிக்கத் தக்க சமித்துக்களுள் அரசஞ் சுள்ளியே முதன்மை பெற்றது. ஓர் அரசமரமே இவ்வளவு யோக்கியதை யுடையதாயின், அரச வனமெனும் திருவாவடுதுறை எத் தன்மையதாம்’

பூவுலகில் தேவர்கள் வந்து உறைவதற்கான விசேஷ ஸ்தலமாகவே இது இயற்கையில் அமைக்கப்பெற்றிருக்கின்றது. எண்ணிறந்த சித்தர்கள் இவ்வரசவனத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்ததாகச் சொல்வார்கள்; பதிவாய்ப் பல சித்த சிரேஷ்டர்கள் இங்கே தங்கியிருப்பதும் உண்டு. சித்தகணங்களின் சஞ்சாரமிகுந்த ஸ்தலமென்பதைக் குறிக்கும்பொருட்டு இவ வூருக்கு "நவகோடிசித்தவாஸபுரம்" என்னு மொரு நாமமும் வியவகாரத்திலுள்ளது.

சிவயோக நுட்பங்களைத் தமிழுலகத்தவருக்குத் தெள்ளிதில் விளக்கத் திருவருள் கொண்டு திருமூலநாயனார் வருஷத்திற்கொரு பாடலாக மூவாயிரம் திருப்பாடல்களால் திருமந்திரம் என்னும் அருமையான நூலைச் செய்தருளிய ஸ்தலம் இதுவே. நமது மூதாட்டியாகிய ஔவைப் பிராட்டியார் திருக்குருகூருக்குச் சென்று, நம்மாழ்வாரைத் தரிசித்து, அவர் திருவாய்மலர்ந்தருளிய திருவாய் மொழியைக் கண்ணுற்று, அதனாலுண்டாகிய ஆனந்த மேலீட்டினால்,

"தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்"

என்று பாடியதில் "திருமந்திரத்தை" மறை முடிவுக் கொப்பிட்டிருப்பதனாலேயே இந்நூலின் பெருமை நன்கு விளங்கும். இவ்வூர் ஆலயத்தின் மேலைப்பிராகாரத்தின் வடகோடியில் திருமூல நாயனாருடைய ஆலயம் இன்றைக்கும் இலங்குகின்றது.

திருவிசைப்பா பாடியருளியவர்களுள் ஒருவராகிய திருமாளிகைச் சித்தர் (இவர் வைஷ்ணவத் திருமேனி) சமாதி திருக்கோயிலும், அதில இவருடைய பரமகுருவாகிய போகமா முனிவருடைய திருவடிகளும் இந்த க்ஷேத்திரத்தின் ஆலயத்திற்குத் தென்புறத்திலுள்ள மடாலயத்தில் உள்ளன. இப்படிப்பட்ட க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசனார் பிரத்தியக்ஷப் பிரசாத மருளத்தக்க மூர்த்தியென்பது சைவசமயாசாரியர்களினால் வெளிப்பட்டிருக்கின்றது. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய பிதா யாகஞ் செய்யும்பொருட்டுப் பதிகம் பாடிப் பொற்கிழி பெற்ற ஸ்தலம் இதுவே. இவ் விஷயத்தை அப்பர் சுவாமிகள் திருவாவடுதுறை—திருநேரிசைப் பதிகத்தில்

"காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க் கம்பொன்
ஆயிரங் கொடுப்பர் போலும் ஆவடு துறைய னாரே"

என்று பாராட்டியுள்ளார்கள்.

## மடத்தின் ஆவசியகம்

இவ்வளவு மகத்துவம் பொருந்திய திவ்விய க்ஷேத்திரத்தை வெறும் இலௌகிகருடைய பரிபாலனத்திற்கு விட்டால் அவர்கள் பாரமார்த்திக சிந்தையின்றி, ஸ்தலத்தின் பெருமையை உள்ளவாறு உணராமல், அதனைப் போற்ற மாட்டார்களென் றஞ்சி, ஸ்தலத்திற்கு உரியவர்களாகிய சித்த புருஷர்கள் தமது சிஷ்ய ஜன சமூகத்தில் ஒருவரைத் திட்டம் செய்து இதன் ஆதிபத்தியத்தை நடத்திவரும்படி ஒப்புவித்தார்களென ஊகிக்கின்றேன். அதற்கு நிதரிசனமாக மேலே குறிப்பிட்ட திருமாளிகைத் தேவருடைய திருக்கோவிலை யடுத்தே திருவாவடுதுறை மடத்துக்கு ஆதிபுருஷராகிய நமச்சிவாய மூர்த்திகள் சமாதியில் அடங்கியிருக்கின்றார்கள். இவ் விருவர் கோவிலையும் இதயமாகக்கொண்டே திருவாவடுதுறை மடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆதீனத் தலைவராகும் பண்டார சந்நிதிகள் தம் ஆஸ்தானம் விட்டெழுந்து முதலடி வைப்பது இந்தக் கோவிலின் மேலைப் பிராகாரத்திலாகும். நான்கு பிராகாரங்களும் நல்ல கற்சாந்து மச்சினால் மூடப்பெற்றுள்ளன. அவர்கள் பிராகாரத்தின் வழியே வலம் வந்து திருமாளிகைத் தேவரைத் தரிசித்து வணங்கி, ஆதீனத்து ஆதிமூர்த்திகளை வணங்குவார்கள். இந்த மடத்தின் மூல புருடர் நந்திதேவர் மரபிலிருந்து

தோன்றியவராகச் சொல்லுவதால், இவ் ஆதீனம் திருக்கைலாய பரம்பரை என்னும் அடைமொழியோடு வழங்குகிறது.

## ஆதீனத்து மடம்

இவ்வாறு மடமொன்று ஏற்பட்ட பின்பு, அந்த மடத்தின் ஆதீனத்தில் சிஷ்ய வர்க்கங்களும், பரிபாலனத்தில் அனேக சிவாலயங்களும், மடத்திற்காகவும் ஆலயங்களுக்காகவும் குடிகளாலும் கோமகர்களாலும் அளிக்கப்பட்ட ஏராளமான பூஸ்திதிகள் முதலியனவும் காலக்கிரமத்தில் ஏற்பட்டன. மடத்துக்கு மேன்மையும் பிரதிஷ்டையும் ஆதிபத்தியம் வகிக்கும் மடாதிபதிகளின் யோக்கியதா விசேஷத்தினால் பிரகாசமாய் ஒளிர்தலாயின. இம் மண்ணுலகில் முழுமையாகத் தனி நன்மையும் முழுமையாகத் தனித் தீமையும் இல்லை. நன்மையும் தீமையும் கலந்தே உழலும், இரவும் பகலும் புரண்டே வரும், எல்லாந் தொந்தமே. உலக மனைத்திற்கும் ஒளி தரும் ஆதித்தனும் ஒரு கால் ஒளி மழுங்கிக் காண்பது உண்டெனின், திருவாவடுதுறை ஆதீனத்து மடத்தின் ஒளி மாத்திரம் மழுங்காமல் எந்நாளும் வளர்ந்து கொண்டே வருமென்று எண்ணலாமோ? அப்படிப்பட்ட காட்சியொன்றிருக்குமானால் இது மண்ணுலகம் என்பது பொய்யாகும். இந்த மெய்யுரை பொய்யாதிருக்கும் பொருட்டே சூரியனுக்கும் கிரகணம் பிடிக்கின்றது. ஆனால், கிரகணத்தின் பயனாகச் சூரியனது காந்தி நமக்குப் புலப்படாதிருப்பதன்றிச் சூரியனுக்கு இயல்பாயுள்ள காந்தியும் தேஜஸும் குறைவுபடுகின்றனவோ? அது போலவே இம்மடத்தின் ஒளி ஒருகால் மழுங்கிக் காணினும், அவ்வொளி ஒழிந்து போகாது. ஆதிபத்திய பீடத்தின் மகிமை மறைந்துபோகாமல் எப்பொழுதும்போல், மங்கல் நீங்கிய பின்பு பிரகாசிக்குமென்பது திண்ணம்.

ஒளியென்பது நமது கண்ணுக்கு எப்படிப் புலப்படுகின்றது? ஒரு வஸ்துவினின்றும் வீசப்பெறும் காந்திக்கிரணம் அதனை யடுத்துள்ள ஆகாசத்திற்பாய்ந்து, அங்கிருந்து படிப்படி அலைவடிவமாக அது நம்முடைய கண்ணுக்கு எட்டுகின்றது. காந்தியலையின் வேகம் மிகச் சொற்பமாயிருந்தால் ஒளி நமக்குப் புலப்படாது; சாமானியமாயிருந்தால் புலப்படும்; நம்முடைய கண் தாங்க முடியாத அளவு அதிக வேகமானாலும் அதிகக் காந்தியானாலும் நமக்குப் புலப்படாது. இவ்வாறு அதிகக் குறைவும் அத்தியதிகமும் புலப்படா. ஆதலால், இருளென்பது நம்முடைய கண் தாங்கமுடியாத அதிகப் பிரகாசம் என்று சொல்வதும் பொருந்தும். இதனால் நாம் தெரிந்து கொள்வது என்ன? மிக்க அதிகத்தினால் விளையும் பயனும், மிகக் குறைவினால் விளையும் பயனும் ஓரே தன்மையனவாகும். ஒரு சக்கரத்தை மிக விரைவாய்ச் சுற்றினால், அது அசையாமல் ஒரு நிலையில் நிற்பதுபோல நமக்குத் தோற்றும். ஜோதிஷ சாஸ்திரத்தின்படி ஒருவனுக்கு மிக உச்சமான தசை வரத் தக்கதெனக் குறிப்பிடுங் காலத்தில் அந்த ஜாதகனுக்கு அதிநீசமான தசை பிராப்தமாவதைக் கண்டிருக்கிறோம்; யோகாதிபதியெனச் சாஸ்திரம் சொல்ல, அவன் பரமதரித்திரனாய் எல்

லாக் துரந்து, நிற்க நிலையில்லாமல் அலைவதும் உண்டு. அதுபோலவே, புத்திக் கூர்மை மிகுந்தவன் புத்தியில்லாதவனைப்போல விவகரிப்பதும் இயற்கை விதிக்கு விரோதமன்றென்று ஊகிக்கத்தகும்.

## ஸ்ரீ அம்பலவாண தேசிகர்

புத்திசாலிகளனேகர் திருவாவடுதுறைப் பீடத்தை அலங்கரித்து வந்தார்களென இதுவரையிற் பிரஸ்தாபித்து வந்தோம். அந்தப் பரம்பரையில் 1888 ஆம் ஆண்டில் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் என்னும் தீக்ஷாநாமம் படைத்தவர் இந்த ஆதீனத் தலைவராகப் பட்டம் பெற்றார். அவருடைய இயற்பெயர் இன்னதென்று நான் விசாரிக்கவில்லை. அவர் பல கலை பயின்றவர், மகா மேதாவி, அசகாயசூரர். அவருடைய குண விசேஷங்களைச் சொல்லுமளவில் அவர் தமிழில் நல்ல பாண்டித்திய முள்ளவர்; சங்கீதத்திலும் தேர்ச்சியுள்ளவர்; பண்டிதர்களுக்குச் சம்மான மளிப்பதிலும், பிராமணர்களுக்கும் மற்றச் சாதியினருக்கும் நன்கொடை யளிப்பதிலும் வெகு கீர்த்திபெற்றவர்; தெய்வபக்தியும் சிவாலய உற்சவம் நடத்துவதில் சிரத்தையும் வாய்ந்தவர். பண்டிதர்களுடைய யோக்கியதையை அறிவதில வெகு திறமையுள்ளவர்; சுருக்கிச்சொல்லின், இராஜபோகங்களை அனுபவித்துவந்த சற்குண சம்பன்னர்; தென்னிந்தியாவுக்குக் கர்ணனை போன்றவர் என்று சொல்வார்கள்.

இது ஒரு சார்பான அபிப்பிராயம். எதற்கும் சுபக்ஷமும் விபக்ஷமும் என இரண்டு பக்கங்கள் உண்டல்லவா? மற்றோர் சார்பான அபிப்பிராயத்தை விசாரிக்குமளவில், "அவர் மிகக் கெட்டிக்காரரென்பதிற் சந்தேகமே யில்லை. தேர்ந்த புத்திசாலிகளே தவறுதல் செய்வார்கள், தவறுதல் செய்தால் தப்பித்துக் கொள்ளும் திறமையும், தப்பை ஒப்பெனச் சாதிக்கும் வல்லமையும் தமக்கு உண்டென்னும் துணிவினாலே அவர்கள் சிறிதும் இலக்ஷியமில்லாமல் தவறு செய்யத் தலைப்படுவார்கள். அதிபுத்திசாலியா யிருப்பவனை நம்மிடத்தில் உத்தியோகத்திற்கு அமைத்துக் கொள்வதனால் விளையத் தக்க தீமையைவிடச் சாமானிய புத்தியுடையவனை அமர்த்திக்கொள்வதனால் உண்டாகும் நஷ்டம் குறைவென்பது நம்முடைய அனுபவசித்த மல்லவா?"

என்பார்கள் மற்றோர் சார்பினர். இவர்களுடைய அபிப்பிராயத்தின்படி, முன்னிருந்த ஆதீனத்தலைவர்களுக்குத் தேவாபிமானம் அதிகமாயிருந்ததெனின், ஸ்ரீ அம்பலவாண தேசிகருக்குத் தேகாபிமானம் அதிகமாயிருந்தது. இதனால் தூகவசாரம் ஜனித்தது. சம்மானமும் வெகுமானமும் அவருடைய அபிப்பிராயத்தைப் பொறுத்தே யல்லாமல், யோக்கியதையைப் பொறுத்தா யிருக்கவில்லை. இதனால் எல்லாம் தலைகீழாயிற்று. யோகசிந்தையினும் போகசிந்தையே அவருக்கு மிகச் சிறந்தது தெய்வகதியாய்த் தம் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்த அபரிமிதமான செல்வத்தையும் செல்வாக்கையும் பேணிப் பெருக்குவதை விட்டு அவர் விரயஞ் செய்யலாயினர். ஆக்கத்தில் "திருஷ்டிவைக்காததனால்

அழிவும் சிதைவும் ஏற்பட்டன. எரிகிற வீட்டிற் பிடுங்கியது இலாபமென வம்பர் அனேகர் அவருக்கு வழித்துணையாயினர். வம்பும் வழக்கும் வியாச்சியமும் பெருக, ஆழும் பாழும் மிகுந்தன. சிஷ்ய வர்க்கங்களில் அல்லோல்லோலமும் அமளியும் அதிகமாயின. மடத்துச் சொத்துக்களைக் கிரமமாய் நிர்வகிப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று சிஷ்யகோடிகளிற் சிலர் சர்க்காரில் பிராது செய்யவும் முன்வந்தார்கள். அது பெருவழக்காய்த் தொடர்வழக்காய்ப் பிடிக்கலாயிற்று. ஆதீனத் தலைவரிடத்துப் பணப் பெருமை மாத்திரமே யல்லாமல், மடாதிபத்தியத்திற்கு உரிய குருத்துவம் பாராட்டுவார் அரியராயினர். இந்த நிலைமையில் ஸ்ரீ அம்பலவாண தேசிகர் 1920-ஆம் வருஷம் ஏப்ரில் மாதம் 13-ஆந் தேதி தேக வியோக மெய்தினர். பின் பட்ட மேற்கத்தக்கவர்க்கு அவர் விட்டுப்போனது வழக்குகளினாலும் சீர்குலைவினாலும் ஏற்பட்ட துக்கபரம்பரையே யென்று மற்றொரு சாரார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

எது எப்படி இருப்பினும், அவருடைய புத்திக்கும் திறமைக்கும் அவர் இந்த மடத்தை மிக்க உன்னத ஸ்திதியில் வைத்துப் போயிருக்கலாமென்றே மேற்சொல்லிய இரண்டு பக்ஷங்களுந் தெரியாத என்போலியர் சொல்லத்தகும். திருவாவடுதுறை மடத்திற்கு வாய்த்த இவ்வனுபவமும் ஒரு திருக்கூத்தே போலும். பயனைப் பார்த்துக் காரணம் ஊகிப்பவர்களாகிய நாம் தவறுதல் கூடும். ஏனெனில்;

## தேவ ரகசியம்

என்னவென்று யார் அறிவார்? ஸ்ரீ அம்பலவாண தேசிகர் பட்டத்திற்கு வந்து சில நாளைக்கே அவருடைய போக்கு இத் தன்மையதென்று தெரிந்திருக்குமே. மடத்துக்கு அபிமான புருஷர்களாய், நமது கண்ணுக்குப் புலப்படாத குருமூர்த்திகளாய், இருக்கும் மகான்கள் என்ன எண்ணத்தைக் கொண்டு அவருடைய பிரபுத்துவத்தை நீடித்தார்களென்று சொல்லுந் திறமை நமக்கு இல்லை. ஆனால், மடம் சிதைவுறாமல் காத்து, எப்பொழுதும்போல அது உலகத்தில் விளங்குவதற்கேற்ற ஏற்பாடுகளை அம் மகான்கள் செய்துகொண் டிருந்தார்க ளெனவே தோன்றுகிறது. திருவாவடுதுறை மடம் என்பது மகாசமுத்திரத்திற்கு ஒப்பானது. பெரியது என்பதற்காகவும், மிக விசாலமானது என்பதற்காகவும் மாத்திரமே அதனைச் சமுத்திரத்திற்கு ஒப்பிடவில்லை. பெருமையிலும் கனத்திலும் கௌரவத்திலும் கம்பீரத்திலும் அது கடலேயாகும். கடலில் ஒரு புறத்தில் மகாவிஷ்ணுவே இருக்கின்றார்; அவருக்குச் சத்துருக்களாகிய அசுரகுலசமூகம் மற்றோர் புறத்தி லிருக்கின்றது; தேவேந்திரனுடைய வச்சிராயுதத்திற்கு அஞ்சிப் பர்வதங்க ளனேகம் தஞ்சமென்று அதனை அடைந்திருக்கின்றன. சிறுமீன், பெருமீன், திமிங்கலம், முதலை முதலாகிய கொடிய ஜலஜந்துக்களும் அதனில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன; இவையல்லாமல், வடவனல் ஒன்று தகித்துக் கொண்டிருக்கின்

றது. இத்தனையும் மடத்தில் உதகரிக்கப் பட்டிருக்கின்றன வென்பதே எனது கருத்து. இப்படிப்பட்ட கடலை வகையறிந்து கடைகிறவ னுண்டானால், அதனின்று அமிர்தமே சித்திக்கும்; இலக்குமி தேவியே தோன்றுவள். இதனினும் மிக்க பாக்கிய முண்டோ

அவ்வாறு கடைந்து, தானும் பயன் பெற்றுப் பிறருக்கும் பயன்படுத்தத் தக்க பெரியானைத் தேடித் தெரிவதே காரியமாக அம் மகான்கள் இருந்தார்கள் போலும். அந்த வேளையில், உலகத்தவர்க்கு நீதி புகட்டுவதற்காகத் தோன்றிய கலைமகளின் திருவவதாரமெனப் புகழப் பெறும் ஔவைப் பிராட்டியார் திருவாய் மலர்ந்தருளிய

> "வேழ முடைத்து மலை நாடுமே தக்க
> சோழ வளநாடு சோறுடைத்துப் - பூழியர்கோன்
> தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
> நன்னாடு சான்றோருடைத்து"

என்னும் பாடல் ஞாபகத்துக்கு வரதலையின், கலைமை வாய்ந்த சான்றோரொருவனைத் தோந்தெடுப்பதற்காகத் தொண்டை நாட்டினில் அவர்கள் திரியலுற்றார்கள்.

## வா[illegible]

ஒருவரை ஒரு காரியத்திற்கு வரிக்குமுன் அவருடைய குண விசேஷங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ள வேண்டுமென்றும் பெரும்பாலும் குலத்தைப் பொறுத்திருக்கு மென்று சொல்லுவார்கள். குலம் என்னுமையில் நாற்குலங்களை மாத்திரமேயல்லாமல் குடும்பத்தையும் குறித்ததாகும். ஒவ்வொரு குடும்ப பரம்பரையில் ஒவ்வொரு விசேஷமான ஒழுக்கமும் பழக்கமும் ஏற்பட்டிருக்கும். ஆகையினால், பரம்பரையினால் குணவிதந்நியாசங்களும் குணவிசேஷங்களும் அமைதல் கூடும். தேவாரன் உத்தேசித்து வெளிப்போந்த காரியம் திருவாவடுதுறை மடத்துப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவரொருவரைத் தேட வேண்டு மென்பதே யல்லவா? அப்படிப் பட்டவர் குணசாலியாயும் புத்திசாலியாயும் இருப்பதல்லாமல், "வைத்த பாரம் தாங்கி" யாகவும் இருக்கவேண்டும், நல்ல பரம்பரையினராகவும் இருக்க வேண்டும். ஆண்டிகளுள் "பரம்பரை யாண்டி"யே உத்தமனாவன். தொண்டை நாட்டில் பக்ஷி தீர்த்தமெனப் பிரசித்திபெற்ற திருக்கழுக்குன்றத்தில் சிவபக்தி யனுஷ்டானங்களிற் பெரிதும் ஈடுபட்டுப் பெயர்பெற்ற பேரம்பல தேசிகரவர்களுடைய மரபில் தோன்றிய இளைஞரொருவர் இருப்பதை யுணர்ந்து, அவ் வூருக்குச் சென்று அவ் விளைஞருக்கு நல்ல குணவிசேஷங்கள் பொருந்தி யிருப்பதைக் கண்டு, அவரை யாட்கொண்டு, திருவாவடுதுறை ஆதீனத்திற் கொணர்ந்து 1892–இல் சேர்த்தார்கள்.

## வைத்தியநாத தேசிகர்

அவ விளங்கோன்றல் வைத்தியநாத தேசிகரென்னும் இயற்பெயரோடு மடத்தில் இலக்கண இலக்கியங்களும் சமய நூல்களும் பயின்று தேறினர். அவரிடத்து அதிசயமான யோக்கியதைகள் அங்குராகாரமாக அமைந்திருப்பதை ஆசிரியர்கள் அப்பொழுதே தெரிந்து கொண்டாடினர்கள். உண்மையான யோக்கியதையும் திறமையும் உலகத்தில் சுலபமாக ஓங்கிப் பிரகாசிப்பதில்லை. யோக்கியதையுள்ளவர்கள் தலையெடுக்காமல் தடுப்பதற்கு அனேக சந்தர்ப்பங்கள் ஏற்படுவது எந்நாளிலும் எந்நாட்டிலும் உண்டு. ஆங்கில நாட்டில் ஆங்கில பாஷைக்கே தந்தையெனச் சொல்லத் தக்கவாறு தேர்ச்சி மிகுந்து விளங்கிய ஜான்ஸன் என்னும் புலவர் பெருமானுடைய திறமையும் புத்திக் கூர்மையும் எளிதில் பிரகாசியாவாயின. அவரைப் பற்றிச் சொல்லும்போது,

"Slow rises worth by poverty depressed"

> மெல்லென வோங்குந் தகைமை வல்லென
> வாட்டினும் வன்கண் வறுமையே

என்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே வறுமையென்றது பொருளின்மையைக் குறிக்கும் பொருட்டேயல்லாமல், வருத்தும் சந்தர்ப்பங்களுள் கொடியது என்பதனாலேயாம்.

> கொடிது கொடிது வறுமை கொடிது'

என்று ஔவைப் பிராட்டியார் சொல்லியிருப்பதுபோல, வருத்தும் பீடைகளுள் முதன்மையானதுபற்றிப் பிரதிகூலங்களைப் பொதுப்படக் குறிக்கும் பொருட்டு, 'வல்லென வாட்டினும் வன்கண் வறுமையே' யென்று கூறினர் போலும். வைத்தியநாத தேசிகருடைய சீலமும் சிரத்தையும் சீரியதன்மையும் காலக்கிரமத்தில் ஆதீனத்தவர்களுடைய மனத்தைக் கவரலாயின. பய பக்தி ஆசாரமும் பலகலைப் பழக்கமும் பாலியத்திலேயே பொருந்தி அவர்

> "விளையும் பயிர் முளையிலே"

என்பதுபோல விளங்கிக்கொண்டிருந்தார்.

## கல்விச் செல்வம்

பொருட்செல்வம் படைப்பதற்கு எத்தனையோ மார்க்கங்கள் உள. அவைகளில் எளிதான மார்க்கங்களும் உண்டு. கல்விச் செல்வம் படைப்பதற்குள்ள மார்க்கங்கள் சிலவேயாம். அவையெல்லாம் கஷ்டதரமானவைகளே யென்பதைக் குறிப்பிடும் பொருட்டு

"There is no royal road to learning"

> "கல்வி கற்பதற்கு இராஜரிகமான சுலபமார்க்கம் ஒன்றும் இல்லை"

என்று ஆங்கிலத்தவர்கள் சொல்வார்கள். நம்மவர்களுடைய சித்தாந்தத்தின்படி கல்வி கற்பதற்குள்ள மார்க்கங்கள் மூன்றேயாம். அவையாவன:—

"குருசுச்ருஷயா வித்யா புஷ்கலேன தனேனவா
அதவா வித்யயாவித்யா சதுர்த்தம் நோபஜாயதே"

"ஆசானுக்குப் பணிவிடை செய்து கல்வி கற்கவேண்டும்; ஏராளமாகப் பொருள்கொடுத்தேனும் கற்கவேண்டும்; அதுவுமில்லையாயின், ஒரு வித்தையைக் கொடுத்து மற்றொரு வித்தையைப் பெறவேண்டும். இம் மூன்றுமல்லாமல், கல்வி கற்பதற்கு நான்காம் வழி இல்லை." இம் மூன்று முறைகளுள் வைத்தியநாத தேசிகர் முதன்முறையைக் கடைப்பிடித்து, உய்யும் மார்க்கம் அதுவேயென வுன்னிக் கல்வி கற்று வந்தார்.

ஆசானிடத்துப் பாடம் படிப்பதனாலும், அவருடன் பழகி அப்போதைக் கப்போது அவர் மொழியும் வார்த்தைகளையும் விஷயங்களையும் வர்த்தமானங்களையுங் கதைகளையும் கேட்டுத் தெரிந்துகொள்வதனாலும் அவருக்கு நூல்களின் பழக்கமும் உலகத்தின் வழக்கமும் நன்கு பதிந்தன. நாளுக்கு நாள் இவ் வகைச் செல்வம் அவருக்குப் பெருகிக்கொண்டே வந்தது. அவருடைய அறிவையும் ஆற்றலையும் அனைவரும் பாராட்டலானார்கள். அவருடைய பண்பின் பெருமை ஆதீனத்தலைவரவர்களுக்கு எட்டலாயிற்று.

## தீக்ஷை

இளம் வயதும், இளமைக்குரிய சுறுசுறுப்பும், கல்வியிற் கவலையும், அடக்க வொடுக்கமும் பொருந்திய இளைஞரை ஆதீனகர்த்தரவர்கள் மகவினைக் காணும் மகிழ்ச்சியுடன் மருவினார்கள். தமக்குள்ள ஆமோதத்தை ஒருவாறு வெளியிடும் பொருட்டு ஆதீனகர்த்தரவர்கள் வைத்தியநாத தேசிகருக்குச் சமய தீக்ஷை செய்வித்தார்கள். இளைஞராயிருப்பினும் வைத்தியநாத தேசிகர் இல்லற சுகபோக இச்சையில்லாதவராயிருக்கக் கண்டு திருப்தியடைந்தார்கள். நெருங்கிய பழக்கத்தினால் அந்தத் திருப்தி தழைத்து அன்பாகப் பரிணமித்தது. மடத்துக் காரியங்களில் சிரத்தையும் ஊக்கமும் அவரிடத்து அதிகமாகத் தோன்றினமையின், அவ் விளைஞருடைய வேண்டுகோட் கிணங்கி ஆதீனகர்த்தரவர்கள் விசேஷ தீக்ஷையும் பார்த்திவ பூஜையும் மந்திரகாஷாயமும் நல்கியருளினார்கள். அப்போது வைத்தியநாதத் தம்பிரான் என்னும் தீக்ஷாநாமமும் அருளினார்கள்.

## ஒடுக்கம்

வைத்தியநாதத் தம்பிரானிடத்துத் தலைவருக்கு உள்ள அபிமானம் அதிகப்படுவதற் கேற்றவாறு அவர் நடந்துகொண்டமையினாலும், அவரிடத்து அடக்கமும் ஒடுக்கமும் அமைந்திருந்ததனாலும், 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்னும் வாக்குப் பொய்படாவண்ணம் அவரிடத்து ஆதீனத் தலைவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. பின்னர்ப் பெருங் காரியங்களுக்கு வைத்தியநாதத் தம்பிரான் இலக்காயிருக்கத் தக்கவ ரென்னும் எண்ணம் தலைவர் மனத்தில் தோன்றியது போலும். ஆதீனத்து விவகாரங்களில் அந்தரங்க பழக்கமும் மனவொடுக்க

மும் அந்த நவசீஷனுக்குச் சிறப்பிக்கக் கருதி அவரைத் தலைவர்கள் "ஒடுக்கம் தம்பிரா"னாக நியமித்தார்கள். "ஒடுக்கம்" என்னும் பதவியை Personal Assistant உத்தியோகத்திற்கு ஒப்பிடலாம். ஒடுக்கத்திலிருப்பவர் இடைவிடாமல் தலைவரை யடுத்தே இருக்க வேண்டும். சோம்பல் சிறிது மின்றித் தலைவருடைய குறிப்பறிந்து எல்லாக் காரியங்களையும் நடப்பிக்கவேண்டும்; தலைவருடைய உத்தரவுப்படிக் கைச்சாத்திட்டுக் கடிதங்க ளெழுதும் பொறுப்பும் ஒடுக்கம் தம்பிரானுக்கு உண்டு. மடாலயத்துக் காரியங்களைக் கவனிப்பதல்லாமல், வெளியேறி வேற்றூர்க் காரியங்களையும் கவனிக்க வேண்டியவராவர். 'தான்' என்னும் அகந்தை யழிந்து, ஆசாரிய சேவையே பெரிதா யெண்ணி விவகரிக்கும் பழக்கம் ஒடுக்க உத்தியோகத்தில் உண்மையானவரெவருக்கும் உண்டாகும். ஆதீனகர்த்தர் எவரெவரோடு எவ்விதமாகப் பழகுகிறார், எவரைப்பற்றி என்ன அபிப்பிராயம் கொள்ளுகிறார், மடத்துக் காரியங்களில் உண்மையா யுழைப்பவர்கள் எவர்கள், எவரை எந்த இடத்தில் வைக்க வேண்டும் என்பனவாகிய விஷயங்களை யெல்லாம் வைத்தியநாதத் தம்பிரான் "ஒடுக்கம்" உத்தியோக முறையில் பழகித் தெரிந்துகொண்டார்.

அந் நாள் ஆதீனத் தலைவரிடத்து 'ஒடுக்கம்' உத்தியோகம் செய்வது மிகக் கஷ்டமாம். பரீக்ஷார்த்தமாகவேனும் அவர் கடினமான வேலைகளிடுவாராம். அவரைத் திருப்திப் படுத்துவது சாமானியமாக இயலாதாம். மிக்க நுட்பத்திற பிழை கண்டு அவர் கடிந்துகொள்வாராம். அவருடைய சந்நிதானத்திற்குப் போய்ப் பரிபவப் படாமல் திரும்பி வருவதெனின், சாமானியமாக எவரும் சிங்கத்தின் வாயிற் புகுந்து வருவதுபோலப் பதைத்துப் பதுங்குவாராம். அப்படிப்பட்ட தலைவரிடத்து 'ஒடுக்கம்' உத்தியோகம் செய்வதில் வைத்தியநாதத் தம்பிரான் பசி தாகம் இளைப்பு முதலியவைகளைப் பாராட்டாமல், அவைகளை மறந்து ஒரு மனமா யுழைத்து வந்தது சிற்சிலருக்குப் பரிகாசகரமாகக் கூட இருந்ததென்று கேள்விப்பட்டேன். சந்நிதானத்தை மெய்ப்பிப்பதற்கு எவ்வளவோ அவ்வளவு மாத்திரம் பகட்டுச் செய்து ஓய்வுற்று உடம்பைப் பாதுகாத்துக் கொள்வதை விட்டு வைத்தியநாதத் தம்பிரான் திருவாவடுதுறை மடாலயத்தைத் தாமே தலைமீது தாங்கிக்கொண்டிருப்பவர்போல் நினைத்துக் கட்டிக் காத்து இரவும் பகலும் கவலை மிகமேற்கொண்டு சிரிசித்துப் போவது அவருடைய அசட்டுத்தன மெனச் சிலர் ஒளிவு மறைவாகவும், சிலர் வெளிப்படையாகவும் அந்தக் காலத்திற் பேசிக்கொள்வார்களாம்.

இந்த வார்த்தையைக் கேட்டவுடனே ஆங்கில தேசத்து வர்த்தமானமொன்று எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. அங்குள்ள பெரிய நகரமொன்றில் ஜட்ஜுகள் கோர்ட்டு நாற்காலிகளையும் மேஜைகளையும் பெஞ்சுகளையும் புதுப்பிப்பதற்கு கண்டிராக்ட் எடுத்துக் கொண்டவரொருவரிடத்தில் தச்சர்கள் அனேக வேலை செய்து வந்தார்கள். அவர்களில் ஒருவன் மற்றவர்களைப்போலக் கூலிக்கென வேலை செய்யாமல் மிக அக்கறையுடன் நிதானமாகவும் கருத்தாகவும்

நாணயமாகவும் வேலை செய்து கொண்டிருந்தான். மற்றத் தச்சர்கள் அவனைப் பார்த்து இளித்தவாயனென்று ஏளனம் செய்து, "உன்னுடைய சொந்த உபயோகத்திற்குப் பலகை இழைப்பது போல இழைத்துக் கொண்டு காலங் கழிக்கின்றாயே! இப்படிச் செய்தால் கூலி கிட்டுமா? நீ வயிறு வளர்ப்பது எப்படி?" என்று ஏசினார்கள். அந்த ஏச்சைப் பொருட்படுத்தாமல் அவன் தன்னுடைய மனச்சாக்ஷிக் கொப்பத் திருப்தியாகவும் திருத்தமாகவும் எப்பொழுதும்போலவே வேலை செய்தான். நாளடைவில் அவனுடைய நாணயம் பிரகாசிக்கலாயிற்று. நாணயத்தினால் நல்லிணக்கமும் நல்ல சம்பளமும் வாய்த்தன. இவ்வாறு பணமும் பலமும் புத்தியும் பெருமையும் பெருகிவர, அவன் காலக்கிரமத்தில் 'நாணயஸ்தன்' என்னும் சிறப்புப் பெயரோடு, ஆதியில் அவன் அக்கறையாகவும் அமைதியாகவும் அழகாகவும் இழைத்தமைத்த தர்மாஸனத்தின்மீது அந்தக் கோர்ட்டு நியாயாதிபதிகளில் ஒருவனாக வீற்றிருக்கப் பெற்றான். உண்மை உயர்வளித்தது.

இந்தக் கதை 'ஒழுக்கம்' வைத்தியநாதத் தம்பிரானுக்கும் ஒப்புமென எண்ணினேன். மகா மேதாவியான ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் அவருடைய உழைப்புக்கும் பொறுமைக்கும் திறமைக்கும் மெய்ச்சி, அவருக்கு இனித் தனிப் பொறுப்பு அளிக்கக் கருதினார்கள்.

## கட்டளைத் தம்பிரான்

மாயூரத்துத் தேவாலய பரிபாலனப் பொறுப்பு வைத்தியநாதத் தம்பிரானுக்கு ஏற்பட்டது. சிவாலய கைங்கரியத்தில் சிரத்தை மிக்கவராய் அவர் தமக்கு இயல்பாயுள்ள வழக்கம்போலச் சோம்பலின்றிச் சுணக்கமின்றிச் சுறுசுறுப்பாக ஆலயத்து விவகாரங்களை அப்போதைக்கப்போது கவனித்துக் கண்டிதமாகவும் பரிஷ்காரமாகவும் நடத்தி வந்தார். அந்தப் பொறுப்பை அவர் நிர்வகித்த விதத்திலும் ஆதீனத் தலைவருக்குத் திருப்தியுண்டானமையினால், வைத்தியநாதத் தம்பிரானுக்கு அவர், முன்னினும் பொறுப்பு அதிகமாகிய, திருவிடைமருதூர் சிவாலய பரிபாலனத்தை ஒப்புவித்தார். அந்த வகையில் பொறுப்பு அதிகப்பட்டதற்குச் சந்தோஷித்து வைத்தியநாதத் தம்பிரான் ஊக்கமும் உற்சாகமும் அதிகமாகக் கொண்டு சிவ கைங்கரிய மொன்றைத் தவிர மற்றெதனையும் நினையாமல், பயபக்தி சிரத்தை மிகுந்தவராய்த் திரிகால ஸ்நானமும் அநுஷ்டானமும் தவறாமல், ஆலயத்து அன்றாடம் பூஜைக் கிரமங்களையும் உற்சவாதி அதிகப் படிகளையும் சிறப்பாக நடப்பித்து, எல்லாருடைய நன்குமதிப்புக்கும் உரியவராயினார். அவருடைய யோக்கியதையையும் பொறுப்பையும் பெருமையையும் எண்ணி அவருடைய பதவிக்குத் தக்கவாறு ஆதீனத் தலைவர் பல்லக்கு முதலிய கௌரவச் சின்னங்களைக் கொடுத்தருளினார்.

## "கார்வாரி"

வைத்தியநாதத் தம்பிரானுக்குச் சமானமாகச் சமீபத்தில் பொறுப்பும் பொறுமையும் தகைமையும் சிரத்தையும் ஊக்கமும் உள்ளவர் கிடைப்பது அரிதெனக் கருதி அவரையே ஆதீனத் தலைவர் தம்முடைய 'கார்வாரி' ஆக்கினார். "கார்வாரி" என்பவர் சர்வ 'முக்தியார்நாமா' (General Power of Attorney) பெற்றவர்; ஆதீனத் தலைவருக்குப் பிரதிபுருஷராகக் கையெழுத்துச் செய்யவும், கட்டளையிடவும், எல்லா விவகாரங்களையும் நடத்தவும் அதிகாரம் வாய்ந்தவர்; ஓரிடத்திலேயே தங்கியிராமல் பற்பல ஊர்களுக்கும் அடிக்கடி போய் எல்லாக் காரியங்களையும் கவனிக்கவேண்டியவர். ஆதீனத் தலைவர் ஒருவர் வேறாக இருப்பினும், காரியாம்சத்தில் எல்லா விவகாரங்களுக்கும் வைத்தியநாதத் தம்பிரானே பொறுப்பாளியாயினார். தலைவருடைய விருப்பு வெறுப்புக்களை யனுசரித்து, தம்முடைய சொந்த அபிப்பிராயங்களை மறுத்து ஒறுத்து, வைத்தியநாதத் தம்பிரான் "கார்வாரி" உத்தியோகத்தை நிர்வகித்து அவரைத் திருப்திப்படுத்தியது ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகருடைய மனப்போக்கை யறிந்தவர்களுக்கு மிக ஆச்சரியமாயிருந்தது.

## ஆதீனத் தலைமை

இவ்விதமாக ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள் அறிந்தோ அறியாமலோ, தாமாகவேயோ ஆதீனத்து அபிமான புருஷர்களாயுள்ள சூக்ஷ்ம தேகிகளின் பிரேரணையினாலேயோ, தம்முடைய ஸ்தானத்திலிருந்து ஆதீனத்துக் காரியங்களை நன்றாக நிர்வகிக்கத் தக்க யோக்கியதையையும் பழக்கத்தையும் ஸ்ரீ வைத்தியநாதத் தம்பிரானுக்குக் கற்பித்து வைத்தார். காலக்கிரமத்தில் தம்முடைய திருமேனி அசௌக்கியப்பட்டுத் தாம் நீடித்த காலம் இருக்க மாட்டோமென்று தோன்றியவுடனே ஸ்ரீ வைத்தியநாதத் தம்பிரானுக்கு முறைப்படி ஆதீனத் தலைமைப் பட்டாபிஷேகம் செய்வித்து ஸ்ரீ சுப்பிரமணியரென்னும் தேசிகதீக்ஷா நாமமும் கொடுத்து, ஆதீனத் தலைமைப் பொறுப்பை அவருக்கு ஒப்புவித் தருளினார்.

"அன்னதாதா பயத்ராதா யச்சவித்யாம் ப்ரயச்சதி
உபதேஷ்டா ஜனகச்ச பஞ்சைதே பிதரஸ்ம்ருதா:"

"அன்ன மளித்தவர், பயத்தைத் தவிர்த்தவர், கல்வி புகட்டியவர், உபதேசித்தவர், பெற்றவர் ஆகிய ஐவரும் தந்தையெனப் படுவார்கள்." இந்தப் பிரமாணத்தின்படி ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருக்கு அம்பலவாண தேசிகரவர்கள் நான்கு வகையில் தந்தை யெனத் தக்கவர்களாவார்கள் அவர்களிடத்துத் தந்தை யென்னும் எண்ணமும் பக்தியும் உள்ளவராய் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் ஆதியிலிருந்தே நடந்து வந்திருக்கிறார்கள். எப்படியெனில்,

"ஜீவதோ வாக்யகரணாத் ப்ரத்யப்தம் பூரிபோஜனாத்
கயாயாம் பிண்டதானாச்ச த்ரிபிஹி: புத்ரஸ்ய புத்ரதா."

"தந்தையினுடைய ஜீவதசையில் அவருடைய சொற்படி செய்வதனாலும், பின்பு ஆண்டுதோறும் அவருடைய ஞாபகத்தைப் பாராட்டி பூரி தக்ஷிணை கொடுத்துப் போசன மளிப்பதனாலும், கயையில் பிண்டஞ் சமர்ப்பிப்பதனாலும் ஆகிய இம்மூன்று காரியங்களினாலுமே மகனுக்குப் புத்திரத் தன்மை ஏற்படும்.' இவற்றுள் முதலிரண்டு வகைகளிலும் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் தம்முடைய புத்திரத்துவத்தை உள்ளபடி நிறைவேற்றினவரென்று எவரும் ஒப்புக் கொள்வார்கள். மற்றும், ஸ்ரீ அம்பலவாண தேசிகரவர்கள்

"தந்தை மகற் காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்"

என்றபடி மகற்குச் செய்ய வேண்டிய கடமையைத் திருத்தமாய்ச் செய்துள்ளாரென்பதும், 'ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

"மகன் றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்"

என்றபடி யாவரும் புகழத்தக்க விதமாக நடந்து கொண்டாரென்பதும் நாம் கண்கூடாக் கண்டு சாற்றத் தக்கவர்களா யிருக்கின்றோம்.

நிற்க,—இந்த ஆதீனத் தலைமை வாய்ந்ததனால் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடைய மனத்திலும் ஒழுக்கத்திலும் மாறுபாடேதேனும் உண்டாயிருக்கின்றதா வென ஆராய்ந்து பார்ப்போம்.

## கோட்பாடு

ஒருவருடைய மனோபாவத்தைத் தெரிந்து கொள்வதற்கு வாய்மொழியும் கைக் காரியமுமே சூசனைகளாகும். இவைகளைக் கொண்டு ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய மனத்தை அளந்து பார்ப்போமானால், ஆதீனத் தலைமை வாய்ந்ததனால் அவர்களுக்கு எவ்விதமான அகம்பாவமும் உண்டாகவில்லை யென்று ஊன்றிச் சொல்லலாம். "எவர் செய்த தவப் பயனினாலோ, எந்த ஊழ்வினையின் நற்பயனினாலோ இந்தப் பதவி வாய்த்துளது. இது பரமேசுவரர் ஒப்புவித்துள்ள பொறுப்பு. இதனைச் சரியாக நிறைவேற்றுவதற் கேற்ற திறமையும் வசதியும் எனக்கு அளித்தருளுவது அந்தப் பரமேசுவரருடைய பொறுப்பேயாகும். நானாக வரித்து வருந்தி இந்தப் பதவியைப் பெறவில்லை. எக்காரியமும் விதியின் வசமாகவே நடந்தேறும். அந்தப் போக்கை மாற்றுவது எவராலும் ஆகாது. மானிடரை எல்லா வகைகளிலும் உய்விக்கத் தக்கது பரமேசுவரருடைய அருள் ஒன்றே:

'ஆவது விதியெனி னனைத்து மாயிடும்
போவது விதியெனி னனைவையும் போகுமாற்
றேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ
வேவரு மறியொணா வீசற் கல்லதே.'

"ஆகையால், அவருடைய அருளைப் பெறுவதற்கு வழிதேடுவதே எனது கடமையல்லாது, வேறு கவலைப்படுவது எனக்கு உரித்தன்று. அன்னாருடைய அருளைப் பெறுவதற்குத் தர்மமே முதன்மையான மார்க்கமென்று சான்றோரனைவரும் சாற்றி யிருக்கின்றார்கள்.

'அறமே மறங்கண் முழுதழிக்கு
மறமே கடவு ளுலகேற்று
மறமே சிவனுக் கொருவடிவ
மாகுஞ் சிவனை வழிபடுவோர்க்
கறமே யெல்லாப் பெரும்பயனு
மளிக்கும் யார்க்கு மெவ்விடத்து
மறமே யச்சந் தவிர்ப்ப தெனை
வறைந்தான் சாதா தபமுனிவன்.'

"ஆகலால், தர்மத்தையே நம்பித் தர்மத்தையே ஆசரிப்பேன்" என்று ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் திடசங்கற்பம் செய்து கொண்டிருப்பவர்களாய் என் புத்திக்குத் தோன்றுகின்றார்கள். ஆதீனத்து விவகாரங்களில் தர்மசிந்தனையே மேலிட்டுக் காண்கின்றது. தர்ம காரியங்கள் மும்முரமாக நடந்தேறுகின்றன. படித்தாருக்கும் பக்தருக்கும் வேண்டிய வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அன்னக்கொடி நாட்டும் ஆதீனத்தவர்கள் அன்னதானம் விசேஷமாகச் செய்கிறார்களென்று நான் சொல்வது அனாவசியகமாகும்.

## தரும சிந்தனை

ஆதீனத்துச் சந்நிதானம் ஈகையிலும் இரக்கத்திலும் விளக்க முற்றிருக்கின்றது. சந்நிதானத்தில் அதிதிகளைக் காத்து ஆதரிக்கின்றார்கள். இரப்பவர்க்கு 'இல்லை' யென்னும் சொல் இல்லை. இரப்பவர் எம்மதத்தினரா யினும் சந்நிதானத்து ஈகைக்கு உரியவர்களாகவே இருக்கின்றார்கள். ஏழைமை ஒன்றையே எண்ணி இறங்கி ஈகையளிக்கின்றார்கள். புசிப்புக் குரியவர்கள் பசித்தவர்களே, ஈகைக்குரியவர்கள் ஏழைகளே என்னுங் கொள்கை அனுதின விவகாரமாக இந்த மடாலயத்தில் காண்கின்றோம். ஆதீனத் தலைவராகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்களுடைய அன்புப் பெருக்கத்தினால் மடாலயம் நிரம்பி யிருக்கின்றது. அன்பு அன்பை ஜனிப்பிக்கின்றது. வேலைக்காரர்கள் கூலிக்கென்றல்லாமல் அன்புடன் வேலை செய்கின்றார்கள். வன்மனத்தினராய், விரோத புத்தியுடையவர்களாய், விபரீத எண்ணமுடையவர்களாய், வம்புந் தும்பும் விளைப்பவர்களாய் அந்தச் சந்நிதானத்திற்கு வருகிறவர்களும் அவ்விடத்து அன்பின் பாசத்தினாற் கட்டுண்டு அயர்ந்து ஒடுங்கி பக்தி மேலிட்டுப் பரிவு பாராட்டிப் போகவேண்டியவர்களாகிறார்கள். அன்பின் அதிசய சக்தி அத்தன்மையதா யிருக்கின்றது.

அறஞ் செய்யும் விருப்பம் அமைந்திருப்பதனாலே பண்டார சந்நிதிகள் எல்லா விவகாரங்களிலும் அறக்கருத்தோடே காரியம் நடத்துகின்றார்கள். உள்ளத்தில் விருப்பம் ஊன்றியிருக்குமானால், அது வாக்கிலும் செய்கையிலும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்குமல்லவா? விவகாரங்களில் அக்கிரமங்கள் அனேகம் செய்து, அவைகளுக்கு ஒருவாறு பரிகாரமாகச் சிற்சில தான தருமங்கள் செய்து புகழ்பெற விரும்புகிறவர்கள் பலரைக் காண்கிறோம். அப்படியில்லாமல், இப்போதுள்ள ஆதீனகர்த்தாவர்கள் எல்லா விவகாரங்களிலும் தரும சிந்தனையையே முன்னிட்டு நடக்கின்றார்களென்று நான் கருத்தாய்க் கவனித்துக் கண்டு கொண்டேன்.

பெயரைக் கருதியாவது புகழைநாடியாவது அவர் தருமம் செய்வது மன்று. தருமம் செய்வதே தமது தலைப் பொறுப்பு; அதற்கெனவே இத்துணைச் செல்வம் தமது வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது; இதனை ஜனங்களுக்கு உபயோகமான வழியில் செலவிடாதொழிவது குற்றமாகும். நற்செலவு வகைகளை எண்ணிக் கைக்கொள்வதுபோல, செல்வரவு வகைகளை நாடிப் பேணாவாய் விவகரிப்பதே தமது கடமை என வோர்ந்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் தம்மாலியன்ற தரும காரியங்களைத் திருத்தமாக நாள்தோறும் நடப்பிக்கின்றார்கள்.

தனித்தனியே அவரவரும் தருமஞ் செய்வதே கீழ் நாட்டு வழக்கம். ஊரார் கூடி ஒருமித்துப் பணந்திரட்டிப் பொதுவில் தருமஞ் செய்வது மேனாட்டு வழக்கம். இதனில் கட்டுத்திட்டங்கள் இருக்குமாதலால் இதுவே ஒழுங்கான வழி; இது இந்தியாவில் இல்லை என்பார் சிலர். இந்நாட்டில் திருவாவடுதுறை ஆதீனம் போன்ற மடங்கள் இருக்கையில், மேனாட்டைப் பார்க்கின்படி Friend in need Society-களும், Poor House-களும், Almonry-களும் அமைக்க வேண்டிய அவசியமில்லையே என்று நான் திருவாவடுதுறை ஆதீனத்துத் தரும காரியங்களைப் பார்த்தபோது எண்ணியதுண்டு.

## வித்தியாதானம்

தானங்களைப் பற்றிப் பேசுமிடத்து எல்லாத் தானங்களும் சிறந்தவைகளே. அவற்றுள் ஒருவகைத் தானம் விசேஷமென்றும் மற்றொன்று விசேஷமில்லையென்றும் எண்ணுவது என்னுடைய மதமன்று. எவருக்கு எது தேவையோ அவருக்கு அதனை யளிப்பது உத்தம தானமென்றே நான் சொல்வேன். இந்த மடாலயத்தில் அன்னதானம், வஸ்திரதானம், சொர்ணதானம் ஆகிய இவை விசேஷமாக நடந்துவருகின்றனவென்று எல்லாரும் அறிவார்கள். ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் பட்டத்திற்கு வந்தது முதல் வித்தியாதானமும் விசேஷமாக நடந்துவருவது வியத்தற்பாலது.

"மானவர்க் கறிவினை வயக்கியின் பரு
மானமார் முத்தியில் வைக்குநீர் மையால
தானமெல் லவையுளும் தக்க வித்தியா
தானமே சிறந்தது சாற்றுங் காலையே"

என்னும் சூதசம்ஹிதைப் பிரமாணத்தைச் சிரமேற்கொண்டு ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் வித்தியாதானத்தை வெகு விமரிசையாகச் செய்து வருகின்றார்கள். தமிழ்ப் பாடசாலையும், தமிழ் வேத பாடசாலையும் வைத்து நடத்தி வருகின்றார்கள். பற்பல ஊர்களினின்றும் பிள்ளைகளை வரவழைத்துப் போஷித்துப் படிப்பிக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய அன்ன வஸ்திராதிகளையும் ஆரோக்கியாதி யனுகூலங்களையும் ஆதரவுடன் கவனிக்கின்றார்கள். அவர்கள் சீர்திருத்திச் சிறப்பித்துள்ள புஸ்தகாலய சம்பந்தமாகப் புலவர்கள் பலரைக் கொண்டு அப்போதைக்கப்போது வித்தியாவிஷயங்களைப்பற்றியும் மத விஷயங்களைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்விக்க வெண்ணியிருக்கிறார்களென்றும் தெரிகிறது. அவர்கள் நீடூழி வாழ்ந்து ஆதீனத்துச் சிஷ்யகோடிகளுக்கு அருள் புரிந்து அவர்களை உய்விப்பார்களாக! அவர்களுடைய

"ஞானமேஜலைகாக்ஷம்."

# "இந்துநேசன்"

## தமிழ் தினசரிப் பத்திரிகை

கல்வி, கைத்தொழில், விவசாயம், ராஜாங்க விஷயம், உள்ளூர் வெளியூர் கோர்ட்டு வர்த்தமானங்கள், வெளிதேச சமாசாரங்கள், வர்த்தமானக் குறிப்புகள் முதலியன தகுந்த அனுபவசாலிகளால் எழுதப்பட்டு வருகின்றன. விளம்பரம் செய்வதற்குத் தகுந்த பத்திரிகை.

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா ரூபா | 15 | 0 0 |
| ஆறுமீ சந்தா ரூபா | 7 | 8 0 |
| மூன்றுமீ சந்தா ரூபா | 3 | 12 0 |

வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

மானேஜர்,
"இந்துநேசன்" ஆபீஸ்,
82, அரபனைக்காரன் தெரு, மதராஸ்

[library stamp]

சிவமயம்

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்

---

இவ்விஷயம்

மகிபாலன்பட்டி வித்துவான் ஸ்ரீமத்

**மு. கதிரேசச்செட்டியாரவர்களால்**

எழுதப்பெற்று,

[illegible] சைவசித்தாந்த சபையின்

ஆண்டு நிறைவுக் கொண்டாட்ட சபையில்

(7-2-15.) வாசிக்கப்பெற்றது

திரு [illegible] சைவசித்தாந்த சங்கத்தின் பரிபாலகர்

தி. கா. நன்மங்கலம் ஜமீன்தார் ஸ்ரீமாந்

**கு. ஆதிநாராயணபிள்ளை அவர்களால்**

சென்னை

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1915

கணபதி துணை.

# சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்.

---

(இது, பூவாளூர்ச் சைவ சித்தாந்த சங்கத்தின் ஐந்தாம் வருட நிறைவுக் கொண்டாட்ட காலமாகிய 7-3-15-ல் சென்னைப் பிரஸிடென்ஸிக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மஹாமஹோபாத்தியாய ப்ருஹ்மஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள் அக்கிராசனத்திற் கூடிய வித்வான்களும் பிரபுக்களும் நிறைந்த மஹாசங்கத்தில் மகிபாலன் பட்டி வித்துவான் ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்களால் உபந்யாஸஞ் செய்யப்பெற்றது)

அறிவிற்சிறந்து விளங்கு மாட்சிமிக்க அக்கிராசனாதிபதியவர்களே!
இவ்வவைக்கண் விளங்கும் அன்புமிக்க ஆன்றோர்களே!

பெரியோர்களாகிய நுங்கள் அன்புரிமைசான்ற ஆணையைக் கடக்க வன்றியொல்லும் வகையான் மேற்கொள்ள விரும்பியும், திருவருட்டுணைகொண்டும் இப்பொழுது செயக்கடவதாகிய என் கடமையை நிறைவேற்றத் துணிகின்றேன்.

யான் மேற்கொண்ட "சிவபிரான் கருணையுஞ் சீவர்கள் கடமையும்" என்னும் இவ்விஷயத்தை விரித்துக் கூறற்கு இடந்தருந் தேவாரத் திருப்பாசுரம் வருமாறு:—

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
றென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
றன்கடன்னடி யேனையுந் தாங்குதல்
என்கடன்பணி செய்து கிடப்பதே.

இப்பாசுரத்தின் அருளொளியும் பொருளுமே இவ்விஷயத்தை விளக்கற் குதவியாயின வென்பதை யிறுதியிற் கூறப்படுந்தொகையுரைக்கண் முடித்துக் காட்டுவேன்.

பெரியோர்களே!

மறையாகமங்களானும், அவற்றின் முடிவு நூல்களானும் பொதுவாகவுஞ் சிறப்பாகவும் விளக்கப்பட்ட பதிப்பொருள் சிவபிரானே யென்பது அந்நூல்களைச் செவ்விதினுணராயு நுண்ணறிஞர்க்கெல்லாம் ஒத்தமுடிபொன்றாம். இப்பதிப்பொருளைக் கடவுள் முதலிய பொதுப்பெயர்களான் வேதநெறிபொழுகும் எல்லாச்சமயத்தார்களும், சிவன் முதலிய சிறப்புப்பெயர்களாற் சமயாதீதமாகிய சைவநெறிநிற்போருங் கூறுப. கடவுள் என்னும் சொற்குப் பொருள் கடந்தவரென்பதாம். எவற்றைக் கடந்தவரெனின், சுட்டியறியப்படுங் காரிய ரூபப்பிரபஞ்சத்தையும், அதனுற் றத்துவ தாத்துவிகங்களையுங் கடந்தவரென்க. இப்பொருள் ஏனைய தேவர்களுக்கு உண்மையிற் பொருந்தாதென்பது, அன்னார் சிவாகமங்களுட் கூறப்படுமுப்பத்தாறு தத்துவங்களுக் குட்பட்டவர்களாதலானும், பேராற்றலுடைய சிவபிரானியக்கத்தான் ஒவ்வோரதிகாரங்களைப் பற்றி நிற்பவராகலானுமாம். மற்றைச்சமய நூல்கள் போலாது சைவசமயத்திற்குறைவின்றிக் கூறப்படுந் தத்துவங்கள் முப்பத்தாறும். அவற்றைக்கடந்து நிற்பவர் பரம்பொருளாகிய சிவபிரான் ஒருவரேயாவர். இம்முப்பத்தாறு தத்துவங்களு முப்பகுதியினவாம். அவற்றுள், கொடக்கப்பகுதியாகிய ஆன்மதத்துவ விரியுள் ஒவ்வொன்றே ஏனைய சமயக்கடவுளர்களின் நிலயமாகும். ஆதலிற் கடவுண் முதலிய சொற்களும் உண்மையிற் சிவபிரானையும் உபசாரத்தான் மற்றைத் தேவர்களையுங் கூறுவனவாம். இங்ஙனமே வடமொழிக்கட் கூறப்படும் பிரமசப்த முதலியவை உண்மையிற் சிவபிரானையும் உபசாரத்தாற் பிறதேவர்களையுங் குறிப்பிடும் பொருளுடைய வென்பது, சுவேதா சுவதரம், கேநம் முதலிய உபநிடதங்களானும், அவற்றை விரித்து விளக்கிய வாயுசங்கிதை முதலிய புராணங்களானும் நன்குணரலாம். இன்னும் இவ்விஷயமாக வேதாந்தங்களை நிலைகண்டுணர்ந்த நீலகண்டவாசிரியர், அரதத்தாசாரியர், அப்பயதீக்ஷிதர் முதலிய சைவப்பெரியோர்கள் சிறிதும் ஐயமின்றி ஆராய்ந்துரைத்தருளிய அரிய வடநூல்களானுந் தெளியலாம். பிரபஞ்ச நிகழ்ச்சியினிமித்தம் ஒவ்வொரு தேவர்களையும் அதிட்டித்து நின்று சிவபிரான் ஒருவரே சிருட்டியாதி யருட்டொ

ழில்களைப் புரிவர். அதனாலன்றே,

"𑌶𑌿𑌵𑍋𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌶𑍍𑌚𑍈𑌵𑌰𑍁𑌦𑍍𑌰𑍋𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃।
𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑍈𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌃𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑌃।
𑌨𑌾𑌮𑌾𑌷𑍍𑌟𑌕𑌮𑌿𑌦𑌂𑌨𑌿𑌤𑍍𑌯𑌂𑌶𑌿𑌵𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌮𑍍॥" என்று வாயுசங்கிதை கூறியாங்கு தொழிலதிகாரிலயராகிய முக்கியதேவர்களின் பெயர்களெல்லாஞ் சிவபிரானுக்குப் பொருந்தின. சிவனென்னும் வாசகமோ "சிவனெனு நாமந்தனக்கேயுடைய செம்மேனி யெம்மான்" என்னுந் தமிழ்வேதத்தான் ஏனையோர்க்குச் சொல்லாதென்பது போதரும். இதனாற் சிவபிரானுக்குள்ள முழுமுதன்மை வேறு தேவர்களுக்கின்றென்பது முணர்க. இங்ஙனமின்றி நித்தியமங்களார்த்த வாசகமாகிய இச்சிவசப்தத்தை பிறசமயத்தார் தஞ்சமய தெய்வங்களுக்குக் கூறிக்கொள்ளின், அஃது அன்வர்த்த நாமமாகப் பொருந்தாதென்பதுண்மை யெனினும், நம் சிவபிரான் மாட்டு அமைந்துகிடக்கும் உயர் நலங்களை அன்னாரையவ்வாறு கூறச்செய்தன வென்றும், அதனாற் சைவ மக்களாகிய நம்மனோர்க்குப் பெருமையே யென்றும் நினைந்து மகிழ்வேமாக. இத்துணையும் ஒருவாறு சுருக்கியுரைத்த சிவபரத்துவ விஷயம் தனியான ஓரரிய உபந்யாசமாக விளக்கவேண்டியதொன்றாகலின், இதனை நிறுத்தி மேல் இப்பெருமான் கருணைத்திறத்தைச் சிறிது கூறுவேன்.

## (க) கருணையினிலக்கணம்.

கருணை, தயை, இரக்கம், அருள் என்பன ஒருபொருட்சொற்கள். இது:—பரமபதியாகிய சிவபிரானுக்குரிய குணங்கள் எட்டனுள் முக்கியமானதொன்றாகும். இதுவே, அப்பெருமானிடத்து அலுப்த சக்தி, அல்லது பேரருளுடைமை யென்று சொல்லப்படும். இக்கருணைக் குணத்தின் இலக்கணமாவது, ஒருவர் தமக்குரியாரை நோக்கி இவர் எமது தந்தையார்; இவர் எமது தாயார்; இவர்கள் எம் உடன்பிறப்பாளர்; இவர்கள் எம்உறவினர்; இவள் எமது மனைக்கிழத்தி; இவர்கள் எம்புதல்வர்கள் என்றின்னோரன்ன தொடர்பு பற்றி மேற்கொள்ளும் அன்புபோலாது எல்லாவுயிர்கண் மாட்டும் இயல்பாக நிகழ்கின்ற அருளேயாகும். இவ்வுயர்குணம் நம்மனோர்க்கு ஒருசிறிது வாய்க்குமாயின், அது தொடர்பு பற்றியெழும் அன்

பின் முதிர்ச்சியா னுண்டாயதென் றறிதல்வேண்டும். இது கருதியே "அருளென் னுமன்பீன்குழவி" யென்றார் திருவள்ளுவ தேவரும். இவ்விடத்துத் திருத்தொண்டர் புராணத் திருப்பாட்டினிமையு ஒன்றனைப் புலப்படுத்தி மகிழாமலிருக்கக் கூடவில்லை யாதலின், அதனையுஞ் சிறிதுகாட்டுத லவசியமாகின்றது. திருஞானசம்பந்த சுவாமிகளும், திருநாவுக்கரசு சுவாமிகளும் சீகாழியில் திருத்தோணியப்பரையும், அம்மையாரையுந் தரிசிப்பான் செல்லுங்கால் அவ்விருவர்களும் ஒருங்குக் கூடிச்செல்லுந் திப்பிய காட்சியை நூலாசிரியராகிய சேக்கிழார் சுவாமிகள், தம்மனத்தின்கண், தியானமுகமாக எழுதிப் பார்த்துப்பார்த்து மகிழ்ந்தின்புற்று, அம்மகிழ்ச்சி யின்பங்களை நம்மனோருஞ் சிறிது பெற்றுய்யுமாறு, தாந்துய்க்கும் இன்பம்பொங்கி வெளிப்படுதல்போல ஓரருமைப் பாசுரத்தை யருளியிருக்கின்றார்கள். அப்பாசுரத்தின் கருத்து, அந்நாயன்மார்க ளிருவர்களது ஒன்றுபட்ட தோற்றத்துக்கு ஒப்புக் கூறுவதேயாகும்.

அது வருமாறு:—

"அருட்பெருகு தனிக்கடலு முலகுக் கெல்லா மன்புசெறி கடலுமா மெனவு மோங்கும், பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக்கண் ணிரண்டெனவும் புவன முய்ய, இருட்கடிவுண் டவாருளு முலகமெல்லா மீன்றாடன் றிருவருளு மெனவுங் கூடித், தெருட்கலைஞா னக்கன்று மாசுஞ் சென்று செஞ்சடைவா னவர்கோயில் சேர்ந்தா ரன்றே" என்பதே.

இதன்கட் கூறப்பட்ட வுவமைகளையன்றி வேறு எத்துணை நீண்டுநினைப்பினும் "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை" யென்னும் உவமவி லக்கணத்துக்கு மாறுபாடின்றி யீண்டுக்கூறத்தக்கது யாதுளது? என்னே இவ்வுவமைகளின் அருமைநயங்கள்! இங்ஙனங் கூறுதலன்றே ஆன்ற அருட்கவிகளினியற்கை. இப்பாசுரத்தினரும் பொருள்களை முற்றக்கூறினீண்டு விரியுமாதலின், இயைபுடைய முதலடியின் பொருளைமாத்திரஞ் சுருக்கிக் கூறுவேன். இதனிறுதியடியில் "தெருட்கலை ஞானக்கன்று மாசும்" என்று கூறுவதால் நிரனிறையாகப் பொருள்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனங்கொள்

ளுங்கால் அருட்பெருகு தனிக்கடல் திருஞானசம்பந்த சுவாமிகளும், அன்புசெறிகடல் திருநாவுக்கரசு சுவாமிகளுமாவார். இவ்விருவரிடத்தும் அருள் அன்பு என்னும் இருகுணங்களுமுளவெனினும் அவற்றாலாம் பயனை நோக்கி விசேடமாக ஆராயுங்கால் அப்பர் சுவாமிகள், சிவபிரானும், சிவனடியார்களுமே தமக்குரியவர்களாகக்கொண்டு அன்பு செய்தமையானும், தாதமார்க்கத்தில் வெளிப்பட நின்று ஒழுகியமையானும், அம்மார்க்க ஒழுக்கத்துக்குத் தலைவன் ஒருவனை மேற்கொண்டு அன்பு செய்தலே முக்கியமாதலானும், அவர்களிடத்துள்ள அருட்குணத்தினும் அன்பேயார்வக்கும் வெளிப்படக் காணபபடலான், அவர்களையன்புக்கடலென்றும், திருஞான சம்பந்தசுவாமிகளிடத்து இவ் அன்புளதெனினும் அவர்கள் சற்புத்திர மார்க்கத்தில் வெளிப்பட ஒழுகியமையானும், இறைவன்குணம் அருளேயாதலானும், சுவாமிகளிடத்து எல்லாவுயிர்கண் மேலும் இயல்பாக எழுங்கருணையே மேலிட்டிருந்தமையானும், திருப்பெருமணநல்லூரில், தந் திருமணக் கோலத்தைத் தரிசிக்க வந்திருந்த பக்குவாபக்குவர்களாகிய வெல்லோர்க்கும் அக்கணத்திலேயே ஸம்ஸ்கார பூர்வகமாகக் கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப்பிடர்பிடித்துத் தள்ளித் தம் அருட்குணப்பயனைக் காட்டியமையானும் அவர்களையருட்கடலென்றுந் திருவாய் மலர்ந்தருளினர் ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகள்.

ஈண்டு இன்புறத்தக்க தோரியைபென்னையெனின்; அன்பினாலருளுண்டாவது பற்றி அன்பு அப்பனும், அருள் பிள்ளையுமாகும். அம்முறையே அன்புக்கடலாகிய நாவரையரை அப்பரெனவும், அருட்கடலாகிய சம்பந்தரைப் பிள்ளையாரெனவும் பெரியார் பாராட்டி வழங்குதலேயாம். அந்நாயன்மார்பாற்கருணையின்மைக்குச் சரிதங்காட்டிப் பேசுவாருஞ் சிலருளராலோவெனின்; அன்னார் கூற்று சிவபிரான் கருணையைப் பாருபாடுசெய்து கூறுங்காற் சொல்லப்படுஞ் சங்கோத்தரங்களாற் சிறிதும் பொருந்தாமையுணரலாம். இவ்வளவிற் கருணையின் இலக்கணம் ஒருவாறு சுருக்கிக் கூறப்பட்டது

## (உ) சிவபிரானே கருணையைமுழுதும் ஆளுதற்குரியர்

இனி, இக்கருணையை முற்றும் ஆளுதற்குரியர் சிவபிரான் ஒருவரே யாவரென்பதைப்பற்றிக் கூறுவேன். "அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம், புல்லார் புரளவிடல்" என்னுந் திருக்குறளால், அருள் உயர்ந்தோர் தம்மிற்றாழ்ந்தோரிடத்தும், அன்பு தாழ்ந்தோர் தம்மின் உயர்ந்தோரிடத்தும் செய்யுங் குணங்களாமென்பது வெளியாம். இச்சிறப்பிலக்கணப்படி எல்லாவுலகத்துமுள்ள எல்லாவுயிர்களிடத்தும் ஒருங்கே கருணைசெய்தல் எல்லாம் வல்ல சிவபிரான் ஒருவர்க்கே கூடுமன்றிப் பிறதேவர்களுக்கின்றாம். வேறு தேவர்களு மக்களுட் சிறந்தார் சிலரும் இவ்வருட் குணத்தையுடையராய்க் காட்டிய சரிதங்களுமுளவே யெனின்; அம்மக்கடேவர்கள் யாவருக்கும், ஒவ்வோரமயங்களிற் றம்மிற்றாழ்ந்தாரிடத்துக்கருணை நிகழுமாயினும், தமக்கெல்லாமுயர்ந்தாராகிய சிவபிரான் ஒருவரிருத்தலான், அவரிடத்து அன்பேயன்றி அருள் செய்தற்கியை பின்மையானும், சிவபிரான் எவரானும் விலக்குதற்கொண்ணாத பாற்கடற்கண் எழுந்த விடத்தைப் பானஞ்செய்து யாவர்க்கும் தாந்தலைவரென்பதையும், யாவரிடத்துங் கருணைசெய்யத்தக்கவரென்பதையுங் காட்டினமையானும் கருணையின் முழுவிலக்கணமும் ஏனையோரிடத்தன்றிச் சிவபிரான் பக்கலிருப்பதையுணரலாம்.

"இவ்வருட்குணத்தின் பகுதியாகிய கண்ணோட்டத்தைப் பற்றியெழுந்த "பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க, நாகரிகம் வேண்டு பவர்" என்னுந்திருக்குறளினும் சிவபிரான் விடமுண்டசரிதங் குறிப்பிடத்தக்கதொன்றாம். சிபி, ததீசிமுதலியோர் சரிதக் குறிப்புக்களைச் சில குறள்களிற் கண்டு உரைக்கட்காட்டிய ஆசிரியர் பரிமேலழகர் இதனையுமீண்டுக் காட்டியிருப்பின் மிக நன்றாகும். இறைவனுக்கு எல்லாஞ்செய்யும் ஆற்றல் இயற்கையென்றொழிந்தார் போலும். சிவபிரான்றலைமையும், அவர்கருணைத்திறமும் ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்", தாம் அநுபவித்துத் திருவாய் மலர்ந்தருளிய திருவாக்குக்களிற் பரக்கக்காணலாம். "தன்மைபிறராலறியாத தலைவா" என்பது தலைமை பற்றியதாகும். தலைவர்களை யுலகத்தலைவரெனவுங் கடவுட்டலைவரெனவும் இருவகையாகக் கொள்ளலாம்.

இவ்விருவர்களுக்குமுள்ள பேதத்தை நம்சுவாமிகள் யாவரும் வியந்
தின்புறுமாறு மிக அழகுபெறக்கூறியிருக்கின்றார்கள். எங்ஙனமெ
னின்; உலகத்தலைவர்களாகிய அரசர் முதலியோரை யுலகத்துள்ள
மற்றையோரெல்லாம் நன்கு தெரிவர்; அத்தலைவர்களின் குணஞ்செ
யல்களையும் வரையறுத்துணர்வர். அத்தலைவர்கள், பிறரெல்லாரை
யும் அறியார்; அன்னார் குணஞ்செயல்களையு நன்குதெரியார். கடவுட்
டலைவராகிய சிவபிரானோவெனின்; பிறரெல்லாரையும் அன்னார்குண
ஞ்செயல்களையும் "அவனன்றி யோரணுவுமசையா" தென்றபடி யுயி
ர்க்குயிராய் நின்று நன்குணர்வர். பிறர்க்கு அப்பெருமான் பெற்றி
யுணரவரிதாகும். இப்பொருணலங்களையே நமது சுவாமிகள், மே
ற்காட்டியபடியும், "பெற்றிபிறர்க்கரிய பெம்மான்" எனவும் அரு
ளிச் செய்வாராயினர். "குறைவிலாநிறைவே" யென்பது, அப்பெரு
மான் கருணையைப்பற்றியதாகும். சிவபிரான், தங்கருணையைப்பிற
ரெத்துணையள்ளிக்கொண்டாலும் குறைவின்றி நிரம்பியிருப்பரென்
பதாம். இவ்விருவிஷயத்தையும் "தெள்ளிப்பிறராற் றெரிவரியான்
றன்கருணை, யள்ளக்குறைபாவரன்" என்பதனாலும் நன்குணரலாம்.
இதனால், தங்கருணையைக் கொள்ளாவிட்டாற்குறைவரேயன்றிக்
கொள்ளக்குறையாரென்பதும் வெளியாதல் உய்த்துணர்க. எவ்வு
யிர்க்கும் இரங்கி, அவற்றிற்குவரும் இடையூற்றையொழித்து இன்
பளித்தல் சிவபிரான் ஒருவர்க்கே கூடுமென்பதும், மற்றையோர்க்கி
யன்றவரை கருணைசெய்தலே கூடுமென்பதும் ஆன்றோர் துணி
பாகும். இதுகருதியே அருளைப்பற்றித் திருமூலதேவர் கூறியிட
த்து

"ஆருயிர் யாதொன் றிடருறு மாங்கதற்
கோருயிர் போல வுருகி யுயக்கொள்ள
நேரி னதுமுடி யாதெனி னெஞ்சகத்
தீர முடைமை யருளி னியல்பே"

என்று மற்றையோர்க்கியன்றவாறு "முடியாதெனி னீரமுடைமை
யருளினியல்பே" எனக்கட்டளையிட்டருளினர்.

சிவபிரானுக்கு முடியாத தொன்றின்மையின், அவரே கருணை
யை முழுவிலக்கணத்துடன் ஆளுந்தகுதியினரென்பது வெள்ளி

டைமலை யெனவுணரத் தக்கதொன்றும். இன்னும் இவ்வுண்மை யை ஸ்ரீவொஷதா என்னுமந்திரமும் வலியுறுத்தும். சகலதேவர் மக்கள் முதலிய யாவர்க்கும் எவற்றுக்கும் ஈயுந்தாதா சிவபிரானே யாவரென்பது, எஜுர் வேதத்துள்ள சமகமந்திரங்கள், திருமால் பிரமன் முதலிய தேவர்களை அன்னத்தோடு சேர்த்து ஈயப்படும் பொருளாகக் கூறினமையானும், சிவபிரானை யங்ஙனங் கூறாமையானு நன்குணரலாம். யாவருந் தப்பா விரக்கத் தாம் வேண்டியார் வேண்டியாங்கீயும் பெருங் கொடையாளியாதலின், இப்பெருமானை, கருணையென்னும் உயர்குணத்தின் முழுப்பாகத்தையும் உடையாரென்பது தேற்றமாம்.

## (௩) சிவபிரான் கருணையின் சிறப்பு.

இனி, நம் பெருமானுக்குரிய எண்வகைக் குணங்களுட் கருணையும் ஒன்றெனினும், இக்குணமே, நாமெல்லாம் வழிபட்டுய்தற்குரிய திருமேனியை இறைவன் கோடற்குரியதாக விருத்தலின் மிகச்சிறந்ததாகும். சிவபிரான் உண்மைச் சொரூப விலக்கணம் "சொற்சிவ மிரண்டு மின்றிச் சித்தொடு சத்தாய் நிற்கும்" என்றபடிசச்சிதாநந்தப் பிழம்பேயாகும். இந்நிலை மலபத்தர்களாகிய ஆன்மாக்களுணரவரியதாகலின், அவ்வான்மாக்களின் பொருட்டு இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என்னு மூவகைத் திருமேனியுமுடையராய் வெளிப்பட்டருளுவர். இதுவே தடத்த நிலையெனப்படும். இத்திருமேனிகள் கருணையாற் கொண்டனவேயாம். இவ்விருவகை நிலையும் இறைவனுக்குரிய வென்பதையும், கருணையே வடிவ மென்பதையும், "கற்பனை கடந்த சோதி கருணையே வடிவமாகி" யெனவும், "செப்பிய மூன்றுநந்தங், கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு தானே" எனவும் போந்த திருவாக்குக்களானறிக. ஈண்டு இக்கருணையே தமது வாமபாகம் பிரியாதுடனுறைந்து விளங்கும் உமாதேவியாகிய சிவசக்தியாகும். இஃது "அருளது சக்தி யாகு மரன்றனக்கு" என்பதனானறிக. தமக்கமைந்த எண்வகைக் குணங்களுள், இவ்வருட் குணமே நம்பிரானுக்குரிய பராசக்தியாக வமையுமாயின், இதன் மாட்சியை எவ்வாறு பேசுவேன்! நம் பெருமானது இப்பேரருள்வெளிக்கண்ணே, எல்லா

அண்டங்களும், அவற்றினுட்பொருள்களுந்தோன்றி நிலைபெறுவனவாம். இவ்வருள் வெளிக்கண் எல்லாவுயிரும் நிலை பெற்றிருந்தும் “வெள்ளத்து ணாவற்றி யாங்குன் னருள்பெற்றுத் துன்பத்தின்றும் விள்ளக்கிலேனை” என்ற திருவாக்கின்படி நாம் நம் வினைப்பகுதியான் அக்கருணையினாற் பெறவேண்டிய பயனைப் பெறாது மாழ்குகின்றோம். இக்குற்ற நம்மதேயன்றி யக்கருணை நிதியின் பாலதன்று. தாழ்ந்தநிலம் மேட்டுநிலமென்னும் வேறுபாடு கருதாது மேகம் நிரந்தரமாகப் பெய்தும், அந்நீரை மேட்டுநிலமேற்காது ஒதுக்கத்தாழ்வுநிலம் ஏற்குமாபோல, சிவபிரான் பருகற்கினிய பரங்கருணைத் தடங்கடலாகவிருந்தும், நந்திய வினையாகியவணை குறுக்கிட்டுக் கிடத்தலான், அக்கருணைப் பிரவாகம் நம்பாற் செல்லாது உண்மை யன்பர் கூட்டமாகிய நற்றடத்திற் சென்று நிறைகின்றது. சிவபிரான் ஆன்மாக்களுய்தற் பொருட்டுத் தங்கருணையமுதத்தை மிகவலிந்து எத்துணையோ உபாயங்களாலும், ஊட்டுகின்றார். இவ்வுண்மையை சுவாநுபூதியானுணர்ந்த பேரன்பாளராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் கட்டளையிட்டருளிய பின்வரும் திருவாசகத்திருப்பாசுரத்தானு முணரலாம்.

அதுவருமாறு:—

“வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே”

என்பதே.

இதன் அருமைப் பொருளையுஞ் சிறிது கூறிமேற் சொல்வேன். வழங்குகின்றாய்க்கு என்புழி, குவ்வுருபு பொருட்டுப் பொருளதாம். “என்னையாண்டாய்க்கு” என்று பிறாண்டுஞ் சுவாமிகள் இதனைவெளிப்படக் கூறுவர். ஆகவே, வழங்குகின்ற நின்பொருட்டு நின் அருளாகியவாரமுதத்தை வாரிக்கொண்டு விழுங்குகின்றேன் என்பதே யத்தொடரின் பொருளாம். ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் தம்மைச் சிவபிரான் மிகவலிந்து அடிமை கொண்டாரென்பதை “கல்லைமென் கனியாக்கும் விச்சை கொண்டென்னை நின்கழற் கன்ப

ஞக்கினே" யெனவும், "ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெரு மானே" யெனவும், "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை, வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை" யெனவும், "இனையனு னென்றுன்னை யறிவித்தென்னை யாட்கொண் டெம்பிரா ஞனுய்க்கு" எனவும் போந்த திருவாக்குக்களானுணர்க. அவ்வாறு அடிமை கொண்டு தங்கருணை யமுதத்தை யெவ்வா றூட்டினுரெனின்; ஒன் றுமறியாக் குழவிப் பருவத்து மகவைத் தாய் அச்சமுறுத்தியுணவூ ட்டுமா போலும், கல்லூரிக்கட்சென்று கல்வியின் மாட்சியுணராது கற்றற்கு மலைவுறும் சிறுரை யாசிரியன் அடித்துத் துன்புறுத்திக் கல்வியைப் புகட்டுமா போலும் ஊட்டினுரென்க.

இவ்வுண்மையையே நம் சுவாமிகள் "அடித்தடித்து வக்கார முன்றீற்றிய வற்புதமறியேனே" என்று திருவாய் மலர்ந்தருளினுர் கள். ஆதலின், "சர்க்கரை வழங்குதல்" என்பது போலச் சிறி தும் வருத்துதலின்றி மகிழ்ச்சிமிக்கு இடையீடின்றிப் பெய்தல் கரு திக், கொடுத்தல் தருதல் முதலிய சொற்களை விடுத்து வழங்குதற் சொல்லாற்ருெடுத்து, அவ்வாறு கருணையமுதத்தைப் பெய்து உண் ணுக உண்ணுகவென்று அடித்தடித்து வற்புறுத்துகின்ற நின்பொ ருட்டு அஞ்சியென்பார் வழங்குகின்ருய்க்கு எனவும் தன்னையுண் டாரைச் சிற்றின்புறுத்துந் தேவாமுதம் போலாது சிவபிரானருள முதம் பேரின்புறுத்த வல்லதாகலின் உன்னரு ளாரமுதத்தையென வும், இயற்கையாக வுண்டலின்றித் துன்புறுத்து நின்பொருட்டுமிக விரைந்துண்ணுகின்றேனென்பார் வாரிக்கொண்டு விழுங்குகின்றே னெனவும், அங்ஙனம் விரைந்து விழுங்குதலான் "விக்கினேனென வும், வேண்டாத வுணவையுண்டற்குத் தொடங்கு முன்னர்க் கண் டவளவிலேயே விக்கலுண்டாமாகலின், முறையே நிகழ்காலமுமிற ந்த காலமுந் தோன்ற விழுங்குகின்றேன்விக்கினேனெனவும் அவ்வா றுவிக்குதற்குக் காரண நீயல்லை; வினைவயப்பட்டுழலும் எனது விதி யேயென்பார் வினையேனென் விதியின்மையால் எனவும், யான் வேண்டாதிருப்பவும், என்னைத் துன்புறுத்தி யூட்டினையாதலின், அதனுலுண்டான விக்கலை யொழித்தற்குத் தண்ணீர் தந்து பிழை ப்பித்தல் வேண்டுமென்பார் "தண்ணீர் பருகத்தந்துய்யக் கொள் ளாயெனவும், அவ்வமுதம் நின்னருளமுத மாதலின், அதனையுண்

றுதற்குரிய அதிகார சிவத்துவம் வேண்டுமென்பார் தண்ணியநீர்மை—சிவத்துவம் என்னும் பொருள் பொதுளத் தண்ணீரெனவும் அத்தண்ணீரும் அவ்வமுதம்போல் விக்கன் முதலிய சலனங்களைத் தருதலின்றி யெற்குகந்த இனிமைச் சுவையுடனிருத்தல் வேண்டுமென்பார். "தழங்கருந் தேனன்ன தண்ணீரெனவும், அது பெருமையின் மிக வருந்துகின்றே னென்பார் அழுங்குகின்றேனெனவும், சிவபிரான் சேதனப் பொருள்களெல்லாம் தமக்கு அடிமையாகத் தாம் ஆண்டான் எனவும், அசேதனப்பொருள்களெல்லாம் உடைமையாகத் தாம் உடையானெனவுங் கூறப்படுவாராதலின், இந்நான்கு சொற்களைக் கொண்டு விளக்குதற்குரிய விஷயம் முன்னிலை தன்மையாகிய இருசொற்களினமைய உடையா யடியே னெனவும், யான் சேதனனாயிருந்துஞ் சிறிதும் அன்பிலனாதலின், என்னையாளுதல் பற்றிவரும் ஆண்டானென்பதினும், அசேதனப் பொருள்களைப்பற்றிய உடையானென்பது நினக்குப் பெருமையாதலின் அதனையே விளிப்பலென்பார் உடையாயெனவும், ஆண்டானென்ப துண்மையெனினும் என்னை நோக்கியவ்வாறு கூறற்கு நாணமுடையேனாதலின் அப்பொருள் பிறரறிய வென்னையே கூறிக்கொள்வலென்பார் அடியேனெனவும் நின்றனக்குரிமையுடைய பொருளினும், அடைக்கலப்பொருளைக் காத்தல் நின்பெருந்தன்மைக்கு இயன்றதென்பார் உன்னடைக்கலமே யெனவுந் திருவாய் மலர்ந்தருளினார் சுவாமிகள். நண்பர்களே! இவ்வரிய நுண்பொருளை நினையுங் காற் றிருவாசகமாட்சி சிந்தித்தற்கெவ்வாறு ஒல்லும்? இவ்வருமை நூலுக்கு உரை வரைவேனென்று முற்பட்டார் சிலர் இதன் நுண்பொருணலங்களைப் பிறரறியக் கூடாவாறு செய்தமை பெரிதும் வருந்தத் தக்கதே. இன்னும் நம் இறைவன் அன்பர்களை யாட்கொள்ள மேற்கொண்ட செயல்களெண்ணத் தொலையா. அவர் தம் அன்பர்களுக்கு எவ்வளவு எளியநிலையிலுள்ளாரென்பது அச்செயல்களானறியலாம். நம் மணிவாசகர் பொருட்டு மண் சுமந்தார். "மண்முதற் சிவமீறுகிய முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்தவன் என்று என்னைக்கூறுவார்; யானோ என் உண்மையன்பர் பொருட்டுக்கீழ்க் கண்டபிருதிவி தத்துவத்தை அம்முப்பத்தாறினுமேல் நிற்கும் என்சிரமேலேற்றுங் கடப்பாடுடையேன்" என்று அவர் தாம் அடியார்க்கெளியராம் நிலை

மையை நன்கு புலப்படுத்தினார் போலும். என்னே அவர் பெருங் கருணை மாட்சி! நினையுங்காலுள்ள முருகுகின்றதே!

## (ச) அக்கருணையின் வகை.

இனி, அப்பெருமான் கருணைத் திறம் இருவகைப்படும். அவை அறக்கருணை மறக்கருணை யென்பனவாம். ஒரு தந்தைக்குரிய இருவர் மக்களுள், ஒருவன், "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றபடி செவ்விய நன்னெறிக்கண் ஒழுகுகின்றான். அவற்குத் தந்தை வேண்டுவன தந்து இன்புறுத்துகின்றார். மற்றொருவன் தந்தையுரை கடந்து தீயநெறிக்கட் செல்லுங்காலவனைத் தந்தையடித்துத் துன்புறுத்தி நன்னெறிக்கட் செலுத்துகின்றான். இவ்விருவர் மக்களிடத்துச்செய்யுமிவ்விரு செயலும் அன்புபற்றியனவேயாகும். இங்ஙனமே நம்பரமபதியின் செயலுமாம். தம்மிடத்து அன்பு பூண்டு ஒழுகும் அடியார்களை யவருவப்பன செய்து இன்புறுத்துவர். அன்பின்றி யிருப்போரை யொறுத்து நன்னெறிக்கட் செல்லுமாறு அருள் பாலிப்பர்.

இவ்விரு செயற்கும் அவ்வான்மாக்களிடத்துத் தாம் வைத்த கருணையே காரணமாகும். இவற்றுண் முன்னையது அறக்கருணை யெனவும், பின்னையது மறக்கருணை யெனவுங் கூறப்படும். நம்சமய நூல்களையும் உலகியலையும் அறியார்சிலர் "யாவர்க்கும் ஒப்பவிருத்தலன்றே கடவுளியல், அவ்வாறின்றிச் சிலர்க்கு இதஞ்செய்தலும், சிலர்க்கு அகிதஞ் செய்தலும் என்னை?" யென்பர். இவ்வுலக பரிபாலனஞ் செய்யும் அரசியலை நோக்கினும் இவ்வுண்மை மிக வெளிதிலறியத் தக்கதொன்றாம். இது கருதியே திருவள்ளுவதேவரும் "அறத்திற்கே யன்புசார்பென்ப வறியார், மறத்திற்குமஃதே துணை" என்று கூறினர். இத்திருக் குறளுக்கு மறத்தை நீக்குதற்கும் என்று ஆசிரியர் பரிமேழலகர் உரை கூறினர். இதனினுஞ் செவ்வையாக அறத்தைச் செய்தற்கு அன்பு துணையாதல் போல வினை மறத்தைச் செய்தற்கும் அன்பு துணையாம் என்று கொண்டு இவ்விரண்டனுட் பின்னதைஅன்பு பற்றியமற மெனக் கோடல் சிறப்புடைத்தென்பதுணர்க. இங்ஙனமே நாயன்மார்கள் செயலுமாம். நம் வைதிக சைவசமய நெறியை யழிப்ப முற்பட்ட சமணர்கள் பாண்

டி பவாசனால் ஒறுக்கப்பட்டுக் கழுவேறுங்கால், அதனை விலக்காமை யால் திருஞானசம்பந்த சுவாமிகள் கருணையிலரென்பர் ஒருசிலர். அன்னார், ஒருகுடி நலம்பெற வொருவனையும், ஓரூர் நலம்பெற ஒரு குடியையும், ஒரு தேசநலம்பெற ஒரூரையுங் கெடுத்துக் காத்தலற மாமென்று அறநூல் கூறுதலையு முணர்ந்திலர்; "பொறையெனப் படுவ தாடவர் தமக்குப்பூணெனப் புகலினும் பொருந்தார், முறை யறப் புரிந்தாலக்கணத் தவர்த முடித்தலை துணிப்பதே முழுப்பூண்" என்று நீதியையு முணர்ந்திலர். இன்னும் பல பிரபல நியாயங்க ளுள வெனினும், அவையீண்டு வேண்டற் பாலனவல்லவாதலின், விரித்திலம். ஆகவே, சிவபிரான் செயல்கள் "எக்கிரமத்தினாலு மிறைசெய லருளே யென்றும்" என்றாங்குக் கருணை காரணமாகவு ள்ளனவேயாம்.

## (ரு) அக்கருணையா லான்மாவெய்தும் பயன்.

இனி, அப்பெருமான் கருணையாலுண்டாம் பயனைச் சிறிது கூறுவல். ஆன்மாக்களநாதி கேவலத்தி லாணவமலத்தாற் பிணிப் புண்டு இருட்டறையிற் கிடக்கின்ற கண்ணிலாக்குழவிபோல நினைவு செயலற்றுக் கிடக்குங்கால் விவிதசக்திகளையுடைய அவ்வாணவமலத் தைக் கழுவுதற்பொருட்டுக் கன்மமல மாயாமலங்களை யவ்வவற்றிற் கேற்பப் பயனுறச்செய்து, சிறிது அறிவெழக்கண்டு, படைத்தன் முதலிய ஐந்தொழில்களையும் புரிந்து, இறுதியிற் றந்திருவடியின் பத்தை யீதற்குக்காரணம், தம்அளவிலாப் பெருங்கருணையேயாகும். இவ்வுண்மையை,

"அருளிற் பிறந்திட் டருளில் வளர்ந்திட்
டருளி லழிந்திளைப் பாறி மறைந்திட்
டருளான வானந்தத் தாரமு தூட்டி
யருளாலென் னந்தி யகம்புகுந் தானே"

என்னுந் திருமந்திரமும் வலியுறுத்துவதாம். இனி, அப்பெருமா னைக் காண்டற்கும் அவர்கருணையே கண்ணாதல் வேண்டும். கேநோ பநிடதத்தில் "இந்திரன்இயக்க வடிவத்துடன் வந்தபரம்பொருளா கிய சிவபிரானை ஆங்குத்தோன்றிய உமாதேவியாராகிய அருட்சக்தி

காட்டலாற் றெளிந்தான்" என்று கேட்கப்படுதலானும், "மெய்யருளாந் தாயுடன்சென்று பின்றாதையைக் கூடி" யென்று பட்டினத்தடிகள் அருளினமையானும், "அவனருளாலேயவன்றாள் வணங்கி" எனவும், அவனருளே கண்ணாகக்காணினல்லான்" எனவும்போந்த திருவாக்குக்களானும் இவ்வுண்மை நன்குபுலனும். "ஆங்கவனருளாற் பத்தி நன்குண்டாம்" என்றபடி இறைவனையடைதற்கு மிக முக்கியமான பத்தியும் அவனருள் வழியுண்டாமெனின்; வேறிதன் பயனை யெவ்வாறுரைப்பேன்! அப்பெருமான்பரங்கருணையின் பயனாக முடிவில் நாம்பெறத்தக்கபொருள் அப்பெருமானேயாகும். இதனினுஞ் சிறந்தபயன் யாதுளது? சிவநேசர்களே! இவ்வுலகத்தும் அவ்வுலகத்தும் விரைவிற் றோன்றியழிதன்மாலையவாகிய சிற்றின்பந்தரும் பொருள்களைப் போலாது நித்தியானந்தவுருவமாகிய அவ்விறைவனையே தருமாட்சிமிக்க அக்கருணையைப் பெறுதற்குரியசெயலையன்றி வேறுயாம் செயக்கிடப்பதுயாதுளது? ஸ்ரீ மணிவாசகனாரும் "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா யார்கொலோ சதுரார், அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீ பெற்றதொன் றென்பால்" என்றுஇப்பேரானந்தப் பெருஞ்செல்வப் பேறு அவர் கருணையினாற்பெற்ற தம் அநுபவவுண்மையை நம்மனோரும் உய்யவெளிப்படுத்தி யருளினார்கள். இத்திருவாக்கில் ஒரு பண்டமாற்றுச்செய்தியை நாம்அறிகின்றோம். அஃதாவது, எல்லாவறிவும் எல்லாவாற்றலும் நிறைந்த மலரகிதராகிய சிவபிரான் தம்மைக் கொடுத்துச் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமுடைய சீவனை யதற்குமாறாகக் கொள்கின்றாரென்பதே. அப்பெருமானைப்பெற்றமையாற் சீவன் எய்திய பயன் அளப்பிலாவானந்தம். இச்சீவனால் அவ்விறைவன் பெற்றது யாதுமின்று. என்னேயவர்கருணைத்திறம்! மனத்தானினைத்தற்கும் வாயாற்பேசற்கும் அளவுபடுவ தின்றாகலின், இம்மட்டிற்சிவபிரான் கருணையென்னும் பகுதியை நிறுத்தி மேற்சீவர்களின் கடமையைப்பற்றிச் சிறிது கூறுவேன்.

## (ரு) சீவர்களின்றன்மை.

ஆன்மா எப்பொருளைச்சார்ந்ததோ அப்பொருளின் வண்ணமாந்தன்மையுடையதென்பது வேதாகம சித்தாந்தம். வெளி, இரு

ளோடு கூடுங்காலிருளாகவும், ஒளியொடு கூடுங்கால் ஒளியாகவும் ஆகல் போலவும், ஒருபளிங்கு, செந்நிறத்தைச் சார்ந்துழிச் செம்மையாகவும், கருநிறத்தைச் சார்ந்துழிக்கருமையாகவுந் தோன்றுதல் போலவும், ஆன்மா, மலவிருளிற்கலந்துழி அதன் மயமாகவும், சிவவிளக்கத்திற்பொருந்துழிச் சிவமயமாகவும் விளங்கும். அவ்வப் பொருளைச்சாருங்காற் பிரிப்பின்றியத்துவிதமாகவேசம்பந்தமுற்றுக் கலந்திருக்கும். மலத்தோடு சம்பந்தமுற்றுழியந்நிலையும் அத்துவிதநிலையாமோவெனின், அதுவும், ஒன்றென்றாவது வேறென்றாவது கூறப்படாமையின் அத்துவிதமேயாம். இதனை "ஆணவத்தோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத், தாணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ" என்னுந்தாயுமானார் திருவாக்கும் வலியுறுத்தும், ஆகவே தனக்கெனவொரு சுதந்தரமுமின்றிச் சார்ச்சிப்பொருள்களின் றன்மையே தன்றன்மையாகக்கோடல் ஆன்மாவினிலக்கணங்களுண் முக்கியமானதொன்றும். இன்னும் இச்சீவன் சகசமலமாகிய ஆணவத்தாற் பிணிப்புண்டு அதனீக்கத்தின்பொருட்டு இறைவனாற்றரப்பட்ட மாயா மலகன்மமலங்களின் காரியங்களாகியதநுகரண புவனபோகங்களைப்பெற்று மாறி மாறிப் பிறக்குமியல்புடையதாம். மனம் புத்தியகங்காரஞ் சித்தமென்னும் அந்தக் கரணங்களாகிய கருவிகளாற் பொறிகளின் வாயிலாகப்புலன்களை நுகர்ந்து அதனான் மீண்டு மீண்டும் வந்தேறுகின்ற கன்மங்களையுடைத்தாம். இன்பந்தருவன வற்றில் விருப்பும், துன்பந்தருவனவற்றில் வெறுப்புமுடையதாகும். இன்னும் இவ்வான்மாவினிலக்கணம்,வகைவிரிகளாற்பல திறப்படும். அவை விரிந்த சைவநூல்களிற் காண்க.

## (எ) கடமையின் றன்மை.

இனி, கடமையாவது இன்னதெனச் சிறிது கூறுவேன். இவ்வுலகத்து அறிவுள்ள ஒவ்வொருவரும், நாம் செய்யவேண்டியவை யிவை யிவையென நூன்முகமாகவும், பெரியார் முகமாகவுமுணர்ந்து பிரதிப் பிரயோசனத்தைப் பற்றிச் சிந்தியாமன் மேற் கொள்ளுங்காரியங்களுள் இன்றியமையாது செய்யத்தக்கவை யெவையோ அவை கடமை யெனப்படும். நன்மாணக்கனொருவன் ஆசிரியனொறுத்தல் கருதி வெறுப் புறாது அவனாணை வழி நின்று கற்றுவருத

னும் இக்கடமையேயாகும். போர்வீரனொருவன் போர் முனையிற் சென்றவுடன் தனக்கு வரும் வெற்றி கருதி முற்படலும், தோல்வி கருதிப் பிற்படலுஞ் செய்யாது நிலை நின்று பொருதலும் அவன் கடமையாகும். அறநூல்களில் நித்தியகருமாநுட்டானங்களைப் பற்றிக்கூறி, அவற்றைச் செய்தலால் வரும் பயனையும் விரித்துப்பின், இப்பயன்களையாராய்ந்தறிந்தே செய்தல் வேண்டுமென்று எவரும் கருதல் கூடாதெனவும், பிரதிதினமுஞ் செய்யவேண்டிய கன்மங்களைப் பயன் விசாரியாதே செய்து தீரவேண்டுமெனவும், அங்ஙனஞ் செய்தல் ஒவ்வொருவனுக்குங் கடமையாமெனவுங் கூறுதலு மீண்டுக்கருதற்பாலது. அறிவுவலிபடைத்தார் பயனை விசாரித்தன் மிக நன்றே. அஃதியலாதாயின், விசாரித்தறியும்வரை கன்மங்களைச் செய்யாதொழிதல் தவறென்பதே யீண்டுத்துணியற் பாலது. பயன், விசாரித்தலின்றிச் செய்யினும் செய்தாரைச் சார்தலொருதலை. வரையாது கொடுக்கும் வள்ளன்மையுடையோர், இவற்கு இன்னது செய்தல் வேண்டும், இதற்கின்னது செய்தல் வேண்டும் என்னும் நியதியின்றி நேர்ந்த நேர்ந்தபடி கொடுத்ததற்குக் காரணம் அவருள்ளத்திற் பதிந்து கிடக்குங் கொடைக் கடமையேயாகும். இது நோக்கியே, அவர் கொடைமடம் பட்டோரென்று கூறப்படுவர். முல்லைக்குத்தேரு மயிலுக்குப் போர்வையும் வேண்டாதனவாகவும், அப்பொருள்களினியற்கைத் தளர் நிலையைக்கண்டவுடன் மனநெகிழ்ந்து இரக்கமுற்று அவற்றிற்குப் பேரிடையூறுவந்ததாகக் கருதிப் பாரி முதலியோர் இவையில்லாத் தேரும் போர்வையுமீந்தனரே. இவ்வீகை பயன் குறித்ததாமா? அவர் தமக்கு இயற்கையினமைந்து கிடக்குந்தண்ணளியோடு கூடிய கொடைக் கடமையேயன்றி வேறென் சொல்வது? முல்லைக்கொடி, படர்கொம்பின்றித்தளருமேல், தன் ஏவலாளரைக் கொண்டு தக்கதொரு கொழு கொம்பை நிறுத்தல் கூடாதா? அக்கொழு கொம்பினும் இத்தேரினு லக்கொடிக்குக் கிடைத்த விசேட நலம் யாதுளது? அங்ஙனமாகவும் தேரை யீந்ததற்குக் காரணம், பாரிவள்ளல் தேரேறி வருங்காற்கொடியின்றளர்நிலையைக்கண்டதும் தனதுஇயற்கைத்தண்ணளியால் இன்னது செயற்பாலதென்றுணரும்அத்துணையுந் தாழ்க்கமனமின்றி அக்கணமே தேரைநிறுவினரென்பதே,இதனானன்றே,

“கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை”
என்று நம் சுந்தரமூர்த்திசுவாமிகள் அவ்வள்ளலின் கொடைத்திற
த்தைப்பாராட்டி யருளினார்கள். நம்மக்களொவ்வொருவரும் தந்தே
யம், மொழி, சமயமுதலியவற்றை யியன்றவரை பேணமுற்படலுந்
தந்தங்கடமையாகும். இக்கடமை யுலகியற்கடமை சமயக்கடமை
யென இருவகைப்படும். அவற்றுளீண்டுக் கூறப்பட்டன சில வுலகியற்
கடமைகளாம். இன்னும் இதுசம்பந்தமாகக் கூறப்புகின் மிகவிரியு
மாதலின், எடுத்துக்கொண்ட விடயத்திற்கியையுமாறு நம்சமயக்
கடவுளாகிய சிவபிரான்மாட்டு நாம் செய்யவேண்டியவைகளை யீங்
குக்கூறுவேன்.

## (அ) சிவபிரானிடத்துச் செய்யவேண்டிய கடமைகள்.

சைவர்களாகிய நாமெல்லாம் நம்சமயக்கடவுளாகிய சிவபிரானையுண்
மையன்போடுவழிபடுதல்வேண்டும். அங்ஙனம்வழிபடுங்காலிதர தெ
ய்வங்களைப்பழித்தல் கூடாது. நந்தெய்வத்தையே போற்றுவேமாக.
ஆயின், ஒருசாரார் எல்லாத்தெய்வங்களும் ஒன்றேயாதலின், அத்
தெய்வங்க ளெல்லாவற்றையும் சமமாகக்கருதியன்பு செய்தல்வேண்
டுமென்பார். அன்னார்கூற்று மரபு பிழைபட்ட தொன்றாதலின், பொ
ருந்தாமைகாட்டுதும். ஒவ்வொரு சமயத்தாருந்தத்தஞ் சமயக்கட
வுளைச்சிறப்பு வகையானும் பிறசமயக்கடவுளைப் பொதுவகையானு
ம் அன்புசெய்யலாமன்றிச் சமநிலையாக்கோடல் பக்தியின் இலக்கண
மன்றாம். தெய்வங்களெல்லாம் உண்மைநிலையில் முடிவிலொன்றே
யெனினும் அவ்வுண்மை தத்துவஞானிகளுக்கன்றி மற்றையோர்க்
குணர்வரிதாம். சாமானியர்கள் அந்நிலையைப்பற்றிப் பேசல் பேச்சள
வேயன்றி யநுபவவளவிற் கோடலரிது. எவ்விஷயமும் அநுபவத்
தினன்றிப் பேச்சளவினொழிதல் பயனின்றாம். இன்ன இன்ன வொ
ழுக்கங்கள் உத்தமமென்று பேசிவிட்டு அவற்றைக்கடைப் பிடிக்கா
விடின், அப்பேச்சாற் பயனென்னை? “சொல்லுதல்யார்க்கு மெளிய
வரியவாம், சொல்லிய வண்ணஞ் செயல்” என்பதும் ஈண்டுக்கருதற்
பாலது. சிறப்பன்பென்பது ஓரிடத்தன்றிப் பலவிடத்துஞ் சேற
லாகாது. பல்லிடத்துஞ்சேறல் சாமானியபக்தியேயாகும். ஒரு பெண்
மகள் தன்னைக்கைப்பிடித்த காதலனிடத்துச் செய்யும் அன்புக்கும்,

தன்சோதரர் சுற்றத்தாரிடத்துச் செய்யும் அன்புக்கும் பேதமுண்டன்றோ? முன்னையதுவிசேட வன்பும் பின்னையது சாமாநிய வன்புமாம். விசேடவன்பை வேறோரிடத்துச்செய்யின், வியபிசரித்தற் குற்றம் வருதலோடு விசேடவிலக்கணமும் பிழைபடும். சாமாநியவன்பையுரியசோதரரிடத்துப்போன் மற்றையோரிடத்துஞ் செய்யலாம். அதனுல் வருங்குற்றம் யாதுமின்றும். அவ்வாறே நமதுசமயக்கடவுளிடத்துச் செய்யும்பக்தி விசேஷமும், ஏனைத்தேவர்களிடத்துச் செய்யும் பக்தி சாமாநியமுமாம். ஆனுல்அப்பெண்மகள் தன்னுயிர்க் காதலனைப்பாராட்டி யேனைச்சோதரர் முதலியோரையு மிகழாது உபசரித்தல் போல நாமும் நம்சமயத் தெய்வத்தைப் பாராட்டுதலோடு மற்றைத் தேவர்களையு மிகழாது அவரவர்க் கேற்றவாறு உபசரித்துப் போற்றுதல் கடனும். இவ்வாறு தத்தஞ்சமயத் தெய்வங்களிடத்து வைக்கும் விசேட வன்பே நல்வின்பந்துய்ப்பித்தற்குரியதாகும். இங்ஙனமின்றி யெல்லாஞ் சமஞ்சமமென்று கூறுவார் ஒன்றினு நிலைபெறுது தமக்குரிய ஆன்மலாபத்தை முடிவிலிழந்தவரே யாவர். சமயசாத்திர விசாரத்தால் தத்துவ நிலை யதிகாரநிலை முதலிய தாரதம்மியங்களைக் கண்டுகூறல் அவரவர் அன்புநிலைப்படுதற்குபயோக மாதலானும், முன்னையசமயாசாரியர்களெல்லாரும் அங்ஙனங்கூறிப் போந்தமையானும், அதுநிந்தையாகாது. நிந்தையாவது அபிமானத்தால் உள்ளதை யில்லதாகவும், இல்லதையுள்ளதாகவுங் கூறிப்பழித்தலேயாம். "உள்ளேன் பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே" "கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகேனுயிடினு, மற்றறியேன் பிறதெய்வம்," என்னுந்திருவாக்குக்கள் நிந்தையின்றி விசேடவன்பினிலக்கணத்தைவெளிப்படுத்துதலுணர்க. ஆகவே, நாம் நம்பதியாகிய சிவபிரானிடத்து விசேடபக்தியாகிய உண்மையன்பு செய்தல் கடமையாம். இதரதெய்வங்களையும் உரியவாறு போற்றுதலைப்பற்றி விலக்கின்மையு முணர்தல் வேண்டும். அஃது அவரவர் மனநிலைக்கேற்ப மேற்கொள்ளத் தக்கதொன்றும்.

இனி, சைவர்களாகிய நாம் நம் இறைவனை முறைப்படி வழிபடுதற்கு இன்றியமையாது மேற்கொள்ளத் தக்கது தீக்ஷையேயாகும். தீக்ஷையில்வழிப் பஞ்சாக்ஷர மகா மந்திர முதலியவற்றைச்

செபித்தற்குக் கூடாமையானும், சரிசை முதலிய நால்வகை நெறி யொழுக்கம் பெறப்படாமையானும் அஃது இன்றியமையாததொன் றேயாம். தீக்ஷையாவது, ஆன்மாக்களிடத்துள்ள சிவசத்தியை வெளிப்பட வொட்டாது தடையாக மறைத்து நிற்கும் மலசத்தியை க்கெடுத்துச் சிவத்துவத்தைக் கொடுப்பதாகிய சிவசத்திக்கிரியை யாகும். இதனை,

"யயா நிருஹ்ஹா-ஏவிணொ ஸஹ்தேஹ-ஷ்திரோயிகா।
ஐஸ்வர்யக்ஷீயதே தஸ்மாத்ஸ்லாதீக்ஷா ஸமாஹவீக்ஷயா।
தீக்ஷா வைராக்ய வேத்தாஸமானுஸிவதத்வம்ஷ்டாத்ருணோ:"

எனவரும் பௌஷ்கராகமத்தானுமுணர்க. இன்னும் இத்தீக்ஷை யினுலேயே மோக்ஷமுதலிய வெல்லா நலன்களுஞ் சித்திக்கு மென் னு முண்மையை வாயு சங்கிதை முதலிய புராணங்களானும், விரித் துக்கூறுஞ் சிவாகமங்களானு முணர்க. இத்தீக்ஷை பலதிறப்படும். அவற்றின் விளக்க விசேடங்களை யெல்லாம் ஆகமங்களுட்டெளிவா கவுணரலாம். சமய தீக்ஷைபெற்று இறைவன் உருவத் திருமேனி யைப் புறத்தொழின் மாத்திரையான் வழிபடுதலாகிய சரியையும், விசேடதீக்ஷைபெற்று அருவுருவத் திருமேனியை புறத்தொழிலக த்தொழிலிரண்டானும் வழிபடுதலாகிய கிரியையும், அருவத்திரு மேனியை நோக்கி யகத்தொழின் மாத்திரையான் வழிபடுதலாகிய யோகமும், நிருவாண தீக்ஷை பெற்று இம்மூன்றனையுங்கடந்த சச் சிதானந்தப் பிழம்பாகிய இறைவன் சொரூபத்தை வழிபடுதலாகிய ஞான நிலையும் ஆகிய இந்நால்வகை மார்க்கங்களுள், தந்தகுதிக்கே ற்பவியன்ற தொன்றை யநுட்டித்துவருதல் ஒவ்வோரான்மாக்களு க்கு முரியகடமையாகும். அறநூல்களிற் கூறப்பட்ட ஜீவதயை, கொ ல்லாமை, புலாலுண்ணாமை, கட்காம நீத்தல் முதலிய வுயர்ந்த ஒழு க்கங்களெல்லாம் ஈண்டுக்கூறிய சைவ நெறிக்கணடங்குமாதலின், வேறாக விரித்திலன். வைதிக குலத்திற் பிறந்தாருள்ளுஞ் சில நவீன அறிவுடையோர், கிரியைகள் கேவல மௌட்டியர்களுக்கே யன்றி யறிவுடையார்க்கில்லை யெனவும், அறிவுடையார் உண்மையு ணர்ந்து அந்தக்கரணங்களை மாத்திரந்திருத்திக் கோடல் போதிய தெனவுங் கூறி நித்திய கன்மங்களைப் பொருட்படுத்தாது காலத்தை வறிதேகழிக்கின்றனர், அவையெல்லாம், கன்மாநுட்டானங்களை

லன்றிச் சித்த சுத்தியுண்டாகாதென்று அநுபவ ஞானிகளாகிய நம் பண்டையோர்கூறி யவ்வாறே யொழுகிய வுண்மையையொருசிறிது முணர்ந்திலர். கீதையிற் கண்ணபிரான், தத்துவ ஞானியுங்கன்மத்தைவிடல் தவறெனவும், மேற்கோடலின்றியமையாத தொன்றெனவுந் தடை விடைகளாலருச்சுனற் குபதேசித்ததையு முணர்ந்திலர். உண்மை ஞானி யொருவர் எல்லாப் பந்தங்களையும் ஒருவிச் சுத்த ஞானப்பிரகாசத்திலேயிருந்தக்காற் கன்மங்களவரைத் தாக்காமற்றாமே யொழியும். அந்நிலையைப் பற்றி யீண்டுச் சங்கித்தலையின்று. கன்மந்தானே யொழியப் பெற்றவொரு மகா ஞானியை நோக்கி யொருவன் அடிகாள், தேவரீர் சந்தியோபாசனை செய்யாதிருத்தலென்னை ? என்று வினவினனாக, அவர்,

ம்ருதா மோஹமயீ மாதா ஜாதோ போதமய: ஸுத:।
ஸூதகத்வயஸம்ப்ராப்தௌ கதம் ஸந்த்யாமுபாஸ்மஹே॥

(“இதன் மொழி பெயர்ப்பு)

அஞ்ஞானத் தாய்மரண மானா ளஃதொன்றே
மெய்ஞ்ஞானக் கான்முளையு மேவினன்—இஞ்ஞாலந்
தன்னின் மரண சனனவிரு சூதகத்தேன்
உன்னலெங்ஙன் சந்திசெய லோர்.”

என்று விடை கூறினர். அஃதாவது: “அஞ்ஞான வுருவமாகிய தாயிறந்தாள், அறிவுருவமாகிய குழந்தை பிறந்தது ; இவ்விருவகை யாசௌசத்தையுமுடையனா யிருக்குங்கால் எவ்வாறு யான் சந்தியோபாசனை செய்வல்” என்பதாம். ஆதலிற் கண்ணப்பர் முதலிய முறுகிய அன்புடையார் செயலை விதியாகக்கொண்டு அத்தகுதியில்லாத நாமும் மாம்ஸ நிவேதனத்தை யிறைவனுக்குச் செய்தல் பொருந்துமா ? அவர் இறைவன் கண்ணிற் புண்ணீர் வார்தல் கண்டு வருந்தி யதற்கு மாற்றாகத் தங்கண்ணைப் பறித்து வைத்து மகிழ்ந்தாரன்றே; அத்துணிவு நமக்கும் வரினன்றே அவர் செயலை நாமுங் கோடலமையும்?’

அன்பர்களே !

இக்குதர்க்க நெறியை யொழித்து நமக்கு இறைவன் அருளிய வேதாகமங்களில் விதிக்கப் பட்ட செயல்களை யியன்ற வரை விடாது செய்மின்கள்;

புலாலுண்ணன் முதலிய வற்றிற்கு முதிர்ந்த அன்புடைச் சிவச் செயலாளராகி ய அடியார்களை யுதாரணங்காட்டிப் புரைபடாதீர்கள்; சமயாசாரமாகிய நித்திய கன்மங்களைவிடாது செய்ய முந்துமின்கள்; ஒவ்வொரோழுக்கங்களையுஞ் சொல்லளவிற் சுருக்கியுஞ் செயலளவிற் பெருக்கியுங் காட்டுமின்கள்; நம் சமயக்கடவுளைச் சிவலிங்காதி திருமேனிகளிடத்தும், சிவனடியாரிடத்து மிருப்பதாகக் கண்டு விசேட அன்பைச் செய்மின்கள்; பிற சமயங்களும் இறைவனருளிருந் தவாறு ஆன்ம பக்குவ நோக்கி வெளிப்பட்டன வென்னு முண்மையுணர்ந்து அவற்றை யிகழன்மின்கள்; இளமைப் பருவம் காமாதிகளை யநுபவித்தற்கென்றே கருதிக் கழிக்காது நம் பெருமானை வழிபட்டுய்தற்கு மிகவேற்ற தொரு பருவ மென்றெண்ணுமின்கள்; ஆலய வழிபாட்டையும் விக்கிரகாராதனத்தையும் இயன்றவரை யிடை விடாது செய்ய விரும்புமின்கள்; உரிய கருவிநூல்களையும், அவற்றின் பயனாகச் சமய நூல்களையும் நடுநிலையுடன் ஆராய்மின்கள்: தாங்கொண்டதே பொருளெனக் கடைப்பிடியாது தம்மினுந் தாழ்ந்தார் வாயுண்மை வருமாயின் அதனை மகிழ்ந் தேற்றுக்கொண்மின்கள்; நூல்களிற் கண்டவற்றை யொழுக்கத்திற் காட்டற் கன்றிக் கலாம் விளைத்தற்குபயோகமென் றெண்ணாதீர்கள்; நம் சமயத்தையும், பாஷையையும் பிறசமயத்தார்க்கும் பிறபாஷையாளர்க்கும் வருத்த முண்டாமாறின்றிப் பேணுமுறப்படுமின்கள்; பிறர் நம்சமயம் பாஷைகளை யறியாமையான் இகழின் அவர்மனம் வருந்தாது விஷயங்களுக்கு மாத்திரந் தக்கவாறு மறுமொழிதந்து அவரைத் திருத்துமின்கள்; பின்னுந் திருந்தாராயின் அவரறியாமைக் கிரங்கியவ்வொழிய நங்கடவுளை வேண்டுமின்கள்; சிவபிரான், விரும்பிக் கருணைபாலித்தற் குரியதாக ஜீவதயையென்னுந் திவ்யாமிர்தத்தை முதலில் நும் நெஞ்சக்கலத்திற் கொண்மின்கள்; நண்பர்களே! இவையெல்லாம் சீவர்களாகிய நங்கடமைகளேயாம். இத்துணைக்கடமைகளுண் மிக முக்கியமான கடமையொன்று சிவபிரானை நோக்கச்சீவர்களுக்குண்டு. அதனை யும் ஈண்டுக்கூறுவேன்.

## (கூ) ஓரின்றி யமையாக்கடமை.

அஃதாவது, இறைவனைநோக்க ஆன்மா ஒருவித சுதந்தரமுமின்றிப் பாதந்திரனாதலின், ஆணவமலத்தாற் பிணிப்புண்டு கிடக்கும் பெத்தகாலத்தும், தநுகரணங்களைப் பெற்றுச் சிறிது அறிவு விளக்கமுற்று உபாசனாதிகளைச் செய்யு மத்தியகாலத்தும், மலசக்தி யறவே யொழியப் பெற்றுச் சிவத்துவமெய்திப் பேரின்பநுகரும் முக்திகாலத்தும் தன்பாலிடைவிடாதமைந்து கிடக்கும் அடிமைத் தன்மையேயாம். அடிமையாவது "கண்ட விவையல்லேனா னென்

றகன்று காணாக் கழிபரமு நானல்லேனெனக் கருதிக்கசிந்த, தொண்டு" என்றபடி காணப்படும்பாசகாரியப் பொருள்களும் மேலாகிய பதிப்பொருளும் யானல்லேனென்று கருதியவழி முன்போலமுனைத்தலின்றி யோங்குணர்வி னுள்ளடங்கிநிற்றலாம். இவ்வடிமையின் முக்கிய விலக்கணமாகக் கருதவேண்டியது, ஆண்டானாகிய சிவபிரான், ஒப்பாரு மிக்காருமின்றி யாவர்க்குமேலாந்தலைவனெனவும் அடிமையாகிய யான், என்னின் ஒப்பானதுங் கீழானதுமாகிய பொருளொன்றுமின்றி யானேமிகக் கீழானவனெனவும் உள்ளவாறுணர்ந்தொழுகலேயாம். இதுகருதியே, "யாவர்க்கு மேலாமளவிலாச் சீருடையான், யாவர்க்குங் கீழாமடியேனை" என்றார் ஸ்ரீமணிவாசகப் பெருமானும். நம் சமயக்கொள்கை பலவற்றுண் மிக முக்கியமானது மிதுவேயாம். அதனாலன்றே, "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமயஞ்சாரு, மூழ்பெறலரிது" என்றுகூறும் சிவஞானசித்தியும்? இத்தொண்டு, தாதமார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சன்மார்க்கமாகிய நால்வகை யொழுக்கத்திலும் ஆன்மாவைவிட்டு நீங்காததொன்றாம். "எவ்விடத்து மிறையடியை" யெனவும், "தொழும் பாகுமங்கு" எனவுங் கூறியபடி முக்தியினும் இவ்வான்மா அடிமையே யாமெனின், வேறிதன் மாட்சியை யெங்ஙனங்கூறுவேன்! உள்ளவாறு ஓரான்மா இறைவனுக்கு யான் என்றும் அடிமையே யென்றுணர்ந்து முனைப்பின்றி யொழுகுமாயின் முக்தி யின்பமாகிய பயனைச் சிவபிரான் தாமேதருவர். முக்தியை விரும்புதலும் அடிமை யிலக்கணத்துக்குக் குற்றமா மென்றால், வேறு பிரதிப்பிரயோசனங் கருதல் கூடாதென்பதைப் பற்றிக் கூறுதன் மிகையே. முக்தியென்பது எல்லாவற்றையும் விடுதலன்றே? அவ்வேண்டாமையை வேண்ட லவசியமென்று நூல்கள் கூறவும், அதனை விரும்புதலுங் குற்றமென்ப தெங்ஙனம் பொருந்துமெனின்; ஆன்மா, தன்கடமை யின்னதென் றறிந்து மேற்கொள்ளின், இறைவனுந் தன்கடமையைச்செய்வன் என்பது தேற்றமன்றே? அஃதுணர்ந்தும், சிறிதுஞ் சுதந்தரமில்லாத இவன் எற்கு இன்னது வேண்டுமென்று விரும்புதலுந் தவறேயாம். இவ்வுண்மையை, "மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும், அண்ணாவெண்ணக் கடவேனோ வடிமைசால வழகுடைத்தே" என்னுஞ்

திருவாக்கானு முணர்க. அஃதாவது, யான் அடிமையென் றுணர்ந்தபின் நின்னை வழிபடுதலேயன்றி யிவ்வுடல் கழியுமாற்றையு நின் றிருவடிப் பேறுபெறும் வழியையும், யான் எண்ணுதற் குரியனே; அங்ஙனம் எண்ணுவேனாயின் என் அடிமையிருந்தவாறு மிக வழகிது என்பதாம். "சார்புணர்ந்து சார்புகெட வொழுகின்" என்றபடி தாஸமார்க்க முதன்மூன்று மார்க்கத்தினுமொழுகுவோர் முக்தியின்பத்தில் விருப்புற்று மேன்மேற் செல்லுவர். நான்காவதாகிய சன்மார்க்கத் தொழுகுவோர் அவ்விருப்பமு மின்றித் தங்கடனிதுவென வுணர்ந்து சிறிது முனைத்தலின்றி யடங்கிநிற்பின் சிவபிரான், தங்கடனாகிய பேரின்பளித்தலை விரைந்து செய்வர்.

ஆசிரியர் சேக்கிழார் சுவாமிகளும் இவ்வுண்மை யடிமையாரைக் கூறுங்கால்,

"கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்"

என்று பாராட்டி யிருக்கின்றனர். இவ்வருட்பாசுரத்தின் அருமையை யென்னென்பேன்! இத்திருத் தொண்டின் மாட்சியைப் பற்றித் தனியே யொரு வியாசமெழுதி வெளிப்படுத்தக் கருதியுளேனாதலினீண்டு விரித்திலன். முடிவாகக்கூறுமிடத்து இவ்வடிமையே ஆன்மா பயன் குறியாது மேற்கொள்ள வேண்டுவதொன்றென்பது இவ்வாராய்ச்சியால் விளக்கமாம்.

## (கo) இதன் பயன்.

இனி, இவ்வின்றியமையாக் கடமையாகிய அடிமையின் பயனைப்பற்றிச் சிறிது கூறுவேன். இதன் பயன் வீட்டின்பமேயென்பது முன்னர்ப் பெறப்பட்டதாயினும், இடைக்கணுண்டாம்பயன்களுமுள. ஆன்மா, எல்லாம் அவன் செயலேயன்றித் தன் செயலன்றென்றுணர்ந்து அருள்வழிநிற்பின், அதனாற் செய்யப்படுங் கன்மங்கள் அதனைச்சாரா. கன்மங்கள் பெத்தகாலத்து நான் செய்கின்றேனென்று கருதுவதால் ஆன்மாவைத்தாக்கும். முக்திகாலத்து யான் எனதென்னுமிருவகைப்பற்றுமின்றி யெல்லாமவன் செயலேயென்றுணர்

ரது அருள்வழி நிற்றலால் அக்காலத்துச் செய்யப்படுங்கன்மங்கள் அவ்வான்மாவைத்தாக்கா. பிராரத்தவினையநுபவித்தே தீரவேண்டுமெனினும், அஃதுஉடலூழாய்க்கழியுமன்றியுயிர்க்குஇன்பதுன்பங்களைச் செய்யாதென்பதாம். இவ்வுண்மையை, "நாமல்ல விந்திரிய நம்வழியி னல்லவழி, நாமல்ல நாமு மரனுடைமை—யாமெனின், எத்துவி வின்று மிறைபணியார்க் கில்லைவினை, முற்செய்வினை யுந்தருவான்முன்" என்றுமெய்கண்டார் திருவாக்கானுணர்க. இதனால் எல்லாம் அவன் செயலென்றிருக்கன்மிக நலமென்று போதாராலான், தாம் செய்யுந்தீவினைகளுக்கும் இதனையே பிரமாணமாகக் காட்டமுற்படலாமாலெனின்; நன்று நன்று! எப்பொருளையுஞ் சிவமயமாகக் கண்டு தானொரு முதலென்பதின்றி யவனேதானேயாகிய வந்நிலையினிற்கும் முக்தனுக்கும், கண்டபொருளெலாமின்பஞ்செய்வனவென்றும், அவை யெனக்கெனக்கென்றும், யானே நுகருமுதலென்றுங் கருதிமலவாய்ப்பட்டுழலும் பெத்தனுக்கும் எத்துணை வேறுபாடுளதென்பதையுற்று நோக்குவார்க்கு உண்மைபுலனாம். இதனால் முடிவுவரை பெரும்பயனைச் செய்வது, இத்திருத்தொண்டேயென்று அதன் மாட்சியுணர்ந்து அவ்வொழுக்கத்தை மேற்கொள்ளுதலே நங்கடமையாமென்பதும், விதி விலக்கைக் கடந்து நிற்றல் நம்மனோர்க்குப் பொருந்தாதென்பதும் விளக்கமாம்.

## என் அன்புள்ள சகோதரர்களே!

இத்திருத்தொண்டையியன்றவரை செய்தலே சைவர்களின் முக்கிய கடமையென்றுணர்ந்து நம்பெருமானிடத்து எஞ்ஞான்றும் அன்புப்பணிபூண்டு ஒழுகுமின்கள்; பயன் செய்வது அவர் கடமை யென்பதை நிச்சயமாக நம்புமின்கள்; திருத்தொண்டு புரிவார் யாவரும் நம் உரிமைத்தமரென்பதையுள்ளவாறுணர்மின்கள்; சிவபிரானாகிய பரமபிதாவினது பேரானந்தப் பெருஞ்செல்வத்தைப் பெறுதற்குரிய மக்கள் நாமேயென்றுணர்ந்து பெற்று இன்புறுமின்கள்; என் புன்சொற்களிற் பொதுளிய பிழைகளையென்னறிவின் சிறுமை கருதிப்பொறுத்துக் கொண்மின்கள்; இவ்வளவேயான் இப்பேரவைக்கண் இன்று செய்யவேண்டிய கடமையென்பதையுணர்ந்து இவ்வியாசத்திற் பரந்துகிடக்கும் பொருள்களைப்பற்றிய தொகையுரைக்குப் பொறுமையுடன் சிறிது செவிசாய்மின்கள்.

## தொகையுரை.

இத்துணையுங்கூறிய வாற்றாற் போந்தபொருள்கள்:—

பரமகருணாநிதியாகிய சிவபிரானே வேதாகமங்களால், நிச்சயிக்கப்படும் பரம்பொருளென்பதூஉம், கருணையினிலக்கணமின்னதென்பதூஉம், அதனை

முழுவிலக்கணத்தோடு ஆளுந்தலைமை, பிறர்க்கின்றாகச் சிவபிரான் ஒருவர்க்கே யுரித்தென்பதூஉம், அவர் இக்கருணையையே சத்தியாகவும் திருமேனிகளாகவுங் கொண்டு வெளிப்பட்டருளுவ ரென்பதூஉம்: தங்கருணையமுதை யடியார்க்கு வலிந்து அச்சமுறுத்தியூட்டுவரென்பதூஉம், அடியார் பொருட்டு மிக வெளியார்நிலையுடையரென்பதூஉம், அவர் கருணை, யறக்கருணை மறக்கருணையென விருவகைப் படுமென்பதூஉம், அக்கருணையின் பயனுகவே ஆணவமலத்தாற் பிணிப்புண்டுகிடக்கும் ஆன்மாமாயாகன்மங்களாற்சிருட்டியாதிகளையுற்று அறிவு விளங்கப்பெறுமென்பதூஉம், அதுவே, இறைவனைக்காண்டற்கும், ஆனந்தவடிவனுகியவப்பெருமானைப்பெறுதற்கும் கருவியாகவுள்ளதென்பதூஉம், சீவர்களின் றன்மையின்னவென்பதூஉம், கடமையாவதிதுவென்பதூஉம், உலகியற்கடமைகளிவை யென்பதூஉம், சமயசம்பந்தமாகச் சிவபிரானிடத்துச் செய்யுங்கடமைகளிவையென்பதூஉம், சமயங்களின் சமரசவுண்மையை யிவ்வாறு கோடல் வேண்டுமென்பதூஉம், தீக்ஷைபெறல், சரியாதிமார்க்கங்களினின்று கன்மங்களை விடாமற் சிவபிரானை வழிபடன் முதலியவையெல்லாஞ் சமயக்கடமைகளாமென்பதூஉம், அவற்றுண், முக்கியகடமை ஆன்மா, தான்பெத்தகாலத்தும் முத்திகாலத்தும் மேற்கொள்ளத்தக்க அடிமைத்திறமேயா மென்பதூஉம், அதன்றன்மை மாட்சிகளின்ன வென்பதூஉம், அதனுலான்மா வெய்தும் பயனின்ன வென்பதூஉம் இத்திருத் தொண்டை ஆன்மா தன் கடமையென மேற்கொள்ளின், அதற்கு வீட்டின்பந்தருதலைச் சிவபிரான் றங் கடமையென மேற்கொள்வரென்பதூஉம் பிறவுமாம்.

அறிஞர்களே!

யான் இவ்வுபந்யாசோபக்கிரமத்திற் கூறிய தேவாரப் பாசுரத்தில்,

"தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே"

என்னும் பிற்பகுதியாகிய இவ்விரண்டடிகளுமுறையே சிவபிரான் கருணையையும், சீவர்கள் கடமையையும் புலப்படுத்தி, இவ்வுபந்நியாசத்தை யினிது நிறைவேற்றின வென்பதையு மீண்டு ஞாபகமுறுத்துகின்றேன். சைவசமயமுஞ் சிவதருமமுந் தமிழ்மொழியும் நீடுவாழ்க.

ஓம்.

ஆனந்த ௵
மாசி ௴ ௨௪

இங்ஙனம்,
அன்பன்,
**மு. கதிரேசன்,**
**மகிபாலன்பட்டி.**